



# மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நிலவுரிமை

## சவால்களும், சாத்தியங்களும்

எம். வாமதேவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நிலவுரிமை

சவால்களும், சாத்தியங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நிலவுரிமை

## சவால்களும், சாத்தியங்களும்

எம்.வாமதேவன்

2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நிலவுரிமை: சவால்களும், சாத்தியங்களும்

ஆசிரியர் : எம். வாமதேவன் ©

பதிப்பு : 2023

வெளியீடு : எம். வாமதேவன்
BQ 2/2, மெனிங் டவுண், மங்கலா வீதி,
கொழும்பு - 08

அச்சு : குமரன் அச்சகம்
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6,
தொ.பே. 0112 364550

ISBN 978-624-93210-1-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமர்ப்பணம்**

மலையக தோட்டங்களில்
200 வருடங்களாக
வசிப்பிட உரிமையோடு மட்டும் வாழ்ந்து
நிலவுரிமைக்காக போராடும்
தொழிலாளர்களுக்கு....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

'மலையகம் 200' என்ற தொனிப்பொருளின் கீழ் 2023ஆம் ஆண்டு பல்வேறுப்பட்ட செயற்பாடுகள் நடைப்பெற்று முடியும் தருவாயில் இந்நூல் வெளிவருகின்றது. இவ்வருடத்தில் இத்தொடர் செயற்பாடுகள் மலையக மக்களின் வரலாறு, பங்களிப்பு, பிரச்சினைகள் சார்ந்து சில அதிர்வலைகளை நாட்டில் ஏற்படுத்தியுள்ள பின்புலத்தில் இம்மக்களின் அடிப்படை கோரிக்கைகளில் ஒன்றான நில உரிமை பற்றியதாக இந்நூல் அமைந்திருப்பது சிறப்பு. கட்டுரைகள், பத்திகள், பிரகடனங்கள் பலவற்றிலும் பாதயாத்திரைகள், நினைவேந்தல்கள் மற்றும் கருத்தரங்குகளிலும் முக்கியமான விடயமாக மலையக மக்களின் காணி உரிமை பிரச்சினை முன்வைக்கப்பட்டது.

மலையக சமூக, அரசியல் தளங்களின் நிராகரிக்க முடியாத பேசுபொருளாக இவ்விடயம் உருவெடுத்துள்ளது. ரூபா 1000 சம்பளப் பிரச்சினையையே மலையகத்தின் பிரதானமான போராட்டமாக அறிந்திருந்த பலரிடையே அதனிலும் பிரதானமாக வீடு/காணி உரிமை பற்றிய அடிப்படை புரிதல் ஒன்று ஏற்பட்டிருப்பதனை அண்மைகாலத்தில் காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக எமது சகோதர சமூக பிரதிநிதிகள், கொள்கை வகுப்பாளர்கள், நிர்வாக அலுவலர்கள் போன்றோரின் கவனம் இவ்விடயம் தொடர்பாக திரும்பியுள்ளது. 2015இல் மாற்றத்தின் பின்னரான மலையக அரசியல் தலைமைகள் தொடர்ச்சியாக இவ்விடயத்தை முன் நிறுத்தியமை இதற்கு ஏதுவாக அமைந்தது. அரசியல் மட்டத்தில் இதன் முக்கியத்துவம் ஆட்சி மாற்றங்களின் பின்னும் தற்பொழுது தொடர்வது ஆரோக்கியமானதொன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சந்தர்ப்பத்தில் இச்சமூகத்திற்கு காணி உரிமை இன்றியமையாதது எனும் அடிப்படைப் புரிதலை தாண்டி அதனை நடைமுறையில் சாத்தியப்படுத்திக் கொள்வதில் உள்ள சவால்களை, சாத்தியங்களை ஆழமாக அறிந்துக்கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. திரு. வாமதேவனின் இந்நூல் இவ்வகையில் காலோசிதமான ஒரு இடையீடு என நிச்சயமாக குறிக்கப்பட வேண்டியதொன்றாகும். நூலாசிரியரின் புலமையும், அனுபவமும் சமூகம்சார் அக்கறையும் அத்தகைய செயற்பாட்டிற்கு அவரை மிகவும் பொருத்தமானவர் ஆக்குகின்றது. தற்போதயை புலமை சூழலில் வீட்டுரிமை / காணியுரிமை சம்பந்தமாக அரச நிர்வாக தரப்பில் ஈடுபட்டு இதிலிருக்கும் சவால்கள் குறித்து நேரடியான அனுபவங்களை உடையவர்களுள் முதன்மையானவர் திரு. வாமதேவன் என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். எனவே, மேலோட்டமான புரிதலில் இருந்து இப்பிரச்சினையின் ஆழமான விடயங்களை வெளிச்சமிட்டு காட்டுவதற்கு இவர் முன்வந்து இருப்பது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

மலையக மக்களின் காணி உரிமை தொடர்பான போராட்ட செயற்பாடுகளை நெறிப்படுத்தி கொள்வது உரிமை மறுக்கப்பட்டவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு அவசியமான தேவையாக இருக்கின்றது. காணி பிரச்சினை என பொதுவாக அடையாளம் காணப்படும் இவ்விடயத்தில் பல கூறுகள் உள்ளன. முதலாவது வீட்டுக்கான உரித்து மற்றும் வீட்டுக்கான காணி. இதில் வீட்டிற்கான காணியும் வீட்டை அண்டிய காணியும் அடங்கும். வாழ்வாதாரத்திற்கான காணி இது குடும்பத்தினருக்கு தமது வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கான காணியின் உரித்தை உள்ளடக்கும். அதுமட்டுமன்றி பிரத்தியேக தொழில் முயற்சியாண்மைக்கு என ஒதுக்கப்படும் காணிகளையும் இது உள்ளடக்கும். மற்றையது சமூகத்திற்கான பொதுக்காணி. சமூக கட்டமைப்புகளான கல்விச் சாலைகள், சனசமூக நிலையம், விளையாட்டுத் திடல், பொது மயானம், வணக்கத்தலங்கள், வதிவிடத் தொகுதிகள் ஒரு கிராமமாக மாறுவதற்கு தேவையான நிலப்பயன்பாட்டு உரிமைகளை இது உள்ளடக்கும்.

மேற்குறித்த பலவகைப்பட்ட பயன்பாட்டிற்கு என எம் மக்கள் காணி உரிமையை பெற்றெடுப்பதில் தற்போதைய உரித்து மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்பாடு பெரும் செல்வாக்கு செலுத்துகின்றன. இவை அரசுக்கு சொந்தமான காணிகளா? அல்லது தனியார் காணிகளா? அரச திணைக்களங்களால் பராமரிக்கப்படும் தோட்டங்களா? அல்லது தனியார் கம்பனிகளால் குத்தகைக்கு எடுத்து நடத்தப்படும் தோட்டங்களா? தற்பொழுது பயிர்ச்செய்யப்படும் காணிகளா? அல்லது கைவிடப்பட்ட காணிகளா? தனியாரினால் குத்தகைக்கு எடுத்து கைவிடப்பட்ட தோட்டங்களா அல்லது அரசாங்கத்தால் நடத்தமுடியாமல் மூடப்பட்ட தோட்டங்களா? மற்றும் இன்னபிற வேறுபாடுகளை ஒற்றி இவற்றில் பல்லாண்டு காலமாக வசிக்கும் நபர்கள் நில உரிமையை வென்றெடுப்பது வேறுபடும். இது தவிர உரிமை கோருபவர்கள் வதிவிட ஊழியர்களா? அல்லது தற்போது ஊழியர்களல்லாமல் தோட்டங்களில் வசிப்பவர்களா? என்பதும் காணிகளைப் பெறும் செயன்முறையில் செல்வாக்கு செலுத்துகின்ற காரணிகளில் ஒன்றாக இருக்கின்றது.

இலங்கையின் வெவ்வேறு மாவட்டங்களில் அப்பிரதேசத்தின் தோட்ட பயர்ச்செய்கையின் பிரத்தியேக வரலாற்று அசைவுகள், இனத்துவ பரம்பல், காணி விநியோக ஏற்பாடுகள், அவ்வப்போது அறிமுகப்படுத்தப்பட்ட அரச அபிவிருத்தி திட்டங்கள் போன்றவை மேற்குறிப்பிட்ட காணிகளுக்கு மேலதிகமாக பரிணாமத்தை, பன்முகத்தன்மையை ஏற்படுத்தியிருக்கின்றன. இதன் காரணமாக நில உரிமை தொடர்பான காணித்துண்டு அளவுகளும் அவற்றைப் பெறுவதற்கான செயன்முறைகளும் மாவட்டத்திற்கு மாவட்டம், பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபடும் தன்மை உடையதாக காணப்படுகின்றன. நாட்டில் பொதுவான சட்டங்களும் நியமங்களும் இருப்பினும் பிரதேச ரீதியான வேறுபாடுகள் காணப்படும் யதார்த்த நிலையிலேயே இவற்றை அணுக வேண்டியது அவசியமாக உள்ளது.

இவ்வாறு பல அடுக்குகளை கொண்ட மலையக மக்களின் நில உரிமை தொடர்பான பிரச்சினைகளை இந்நூல் சிறப்பாக வெளிக்கொண்டுவந்துள்ளது. கள மட்டத்தில் இந்த பலவகை அடுக்குகளும் எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதனை மக்களின் பார்வையில் அணுகி தீர்வு காணும் அவசியத்தை நூலாசிரியர் நமக்கு அறிமுகப்படுத்தியுள்ளார். பல மாவட்டங்களுக்கும் சென்று கனதியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களமட்ட தகவல்களை திரட்டி தனது பாணியில் பகுப்பாய்வு செய்து தொகுத்து வழங்கியிருப்பது மிகவும் பயனுள்ளதாகும் என்பதில் சந்தேகமில்லை. குறித்த பிரதேசத்திலிருந்த குறிப்புரைகளை அப்பிரதேச த்தை சார்ந்தவர்கள் ஊடாக எழுதி இணைத்திருப்பது அவர்களை ஊக்குவிப்பதாகவும் இச் செயலுக்கு மேலதிக ஆர்வலர்களை திரட்டு வதற்கு ஏதுவாகயிருப்பதும் மற்றுமொரு மகிழ்ச்சியான விடயமாகும்.

இந்நூல் முதல் வாசிப்பில் எம்முன் சில சவால்களை விட்டு செல்கின்றது. கள செயற்பாட்டாளர்கள் நில உரிமை சார்ந்து கொள்கை வகுப்பாளர்களை அணுகுமுன் நாம் தெளிவு பெறவேண்டிய சில விடயங்கள் உள்ளன. காணி கோரிக்கை எந்த பரப்பளவினை கொண்டதாக இருக்க வேண்டும்? அதற்கான நியாயப்பாடுகள் என்ன? எத்தகைய பிரதேச ரீதியான வித்தியாசங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். ஏற்கனவே வழங்கப்பட்ட உரித்தாவணங்களின் சட்டபூர்வத்தன்மை மற்றும் இந்த உரித்தாவணங்களால் வழங்கப்படும் காணி உரிமைக்கு சில வரையறைகளின் தேவை, கட்டிமுடிக்கப்பட்ட வீடுகள் தொடர்பாக தற்பொழுது நிலுவையிலுள்ள காணி உரிமை பத்திரங்கள் மற்றும் அவை தொடர்பான பரப்பளவு என்னவாக இருக்க வேண்டும்? என்பன இவற்றில் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

ஆயினும் மேற்குறித்த கேள்விகளுக்கு தற்போது அரசாங்கம் முன்வைத்துள்ள சட்டகத்துள் வைத்து தீர்வு காண்பது பூரணமான ஒன்றாக அமையாது. நூலாசிரியர் சுட்டிக்காட்டுவது போல் தனிக் குடும்பங்களுக்கான காணி உரிமை என்பது அவர்களை தொடர்ந்தும் தோட்ட நிர்வாகத்தில் பல விடயங்களுக்கும் தங்கியிருப்பவர்களாக நிர்பந்திப்பதை ஏற்க இயலாது. இலங்கையின் முழுமையான குடிமக்களாக இவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதாயின் ''புதிய கிராமங்கள்'' எனும் அமைப்பு முறைக்கு கீழேயே இந்த காணி பகிர்வு இடம்பெற வேண்டும். 200 வருடங்களின் பின் வதிவிட தொழிலாளர்கள் எனும் ஏற்பாடு கேள்விக்கு உட்டபடுத்த வேண்டிய தருணம் இதுவாகும்.

இந்நூலின் மிகவும் காத்திரமான பங்களிப்பு வாழ்வாதாரம் தொடர்பான காணி உரிமை பற்றியதாக இருக்கின்றது. இலங்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேயிலை துறை பாரிய நெருக்கடியை சந்திக்கின்றது என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயமாகும். இதற்கு முகங்கொடுக்க கம்பனிகள் பலவாறான வெளிவாரி உற்பத்தி மாதிரிகளை சீரற்ற முறையில் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறன. இதற்கு மாறாக எமது சமூகம் சார்ந்து சிற்றுடைமையாளர்கள் எனும் கட்டமைப் புக்குள் தொழிலாளர்களை கொண்டு செல்வது குறித்து இந்நூலில் பிரஸ்தாபிக்கப்படுகின்றது. சமூக செயற்பாட்டாளர்களைத் தாண்டி அரசியல் மேடைகளிலும் இது பேசப்படுகின்ற இத்தருவாயில் இப்பகுப் பாய்வு முக்கியம் வாய்ந்ததாகின்றது. இங்கும் வெளிவாரி உற்பத்தி மாதிரிகளின் நன்மை / தீமை மற்றும் சிற்றுடைமை கட்டமைப்பிற்கான காணி பரப்பளவு, உரித்தின் தன்மை, கம்பனியினுடனான தொடர்பும் கடப்பாடுகளும் போன்றவை குறித்து ஆழமாக மேலும் ஆராயப்பட வேண்டும் என்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டுகின்றார். அதுமட்டுமன்றி பொதுவாகவே இனரீதியான பாராபட்சம் காட்டப்படும் யதார்த்தத்தையும் எத்தகைய தீர்வாக இருந்தாலும் அவை இனத்துவ அரசியல் கூருணர்வுடன் முன்னகர்த்த வேண்டியதன் அவசியத்தையும் கோடிட்டு காட்டுகின்றார்.

மலையக மக்களின் காணிப் பிரச்சினை பற்றிய புரிதலை ஆழமாக்குவதற்கும் இது தொடர்பான கலந்துரையாடல்களுக்கான அடிப்படையை அமைத்துக் கொடுப்பதற்கும், இப்பிரச்சினை குறித்து அறிய விரும்பு வோருக்கு ஒரு செறிவான தரவுத் தளத்தை உருவாக்கி கொடுக்கவும், காணி உரிமை போராட்ட செயல்வாதத்திற்கு உரம் அளிக்கவும் எம் அனைவரையும் தூண்டக்கூடிய மிகுந்த சமூக ஈடுபாட்டுடன் இந்த ஆவணத்தை எமக்கு வழங்கிய திரு. வாமதேவனுக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

**பா. கௌதமன்**
சட்டத்தரணி;
பிரதான இயக்குனர்
ஐடியா நிகழ்ச்சித்திட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

தோட்ட தொழிலாளர்களின் நிலவுரிமை குறித்து நூலொன்றினை எழுத வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் கருக்கொண்டது 2022ஆம் ஆண்டின் ஆரம்பத்திலாகும்.கொரானா நோயின் பரவலால் கட்டாய ஓய்வும் நேரமும் எழுதுவதற்கான தளத்தை அமைத்து தந்த்து.எதை எழுதுவது என்று சிந்திக்கையில் மனதில் ஊடாடிய விடயம் யாதெனில், எனது நான்காவது நூலுக்கு முகவுரை மற்றும் பதிப்புரை எழுதிய இருவரும் நான் இதனைவிட ஆழமான விடயங்கள் பற்றி எழுத வேண்டும் என்ற தங்களது விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தமையாகும். மலையக ஆய்வு பரப்பில் நன்கு ஆராயப் படாத ஒரு விடயமாக எனக்குத் தோன்றியது, தொழிலாளரகளின் நிலவுரிமை பற்றிய விடயமாகும். அதுவே இந்த நூல் தோற்றம் பெறுவதற்கான ஆரம்பமாக அமைந்தது. இது மிகவும் சவால் நிறைந்த பணி என்பதோடு, தோட்ட வீடுகளுக்கு சட்டரீதியான உரிமம் வழங்க முயன்ற வேளைகளில் எதிர்நோக்கிய சவால்களை நான் நன்கு உணர்ந்திருந்தேன். இதனால் இதனை ஆய்வின் அடிப்படையில் எழுதவேண்டும் என்பதால் இவ் ஆய்வு முயற்சியை ஆரம்பித்தேன்.

ஆய்வு எனும்போது தேவையான் தரவுகள் மற்றும் தகவல்கள் என்பதை இதுவரை வெளிவந்த ஆவணங்கள் மற்றும் நூல்கள் என்ப வற்றில் பெற்று கொள்ளலாம். இந்த இரண்டாந்தர தகவல்களோடு ஆரம்ப தகவல்களைப் பெற அளவைகள் தேவைப்படும். அதற்கு அதிக காலம் செல்லும் என்பதால் அதனை விடுத்து இரண்டாந்தர தரவுகளை மாத்திரம் மையப்படுத்தி ஆய்வை மேற் கொள்ளலாம் என்ற முடிவில் முன்மொழிவு ஒன்றை தயாரித்தேன்.அதனை எனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைகழக சகாவும் எனது எழுத்து முயற்சிகளுக்கு தொடர்ந்து உந்துதலை வழங்கிக் கொண்டிருக்கும் தற்போது நோர்வேயில் வசித்து வரும் முன்னாள் பேராசிரியர் சண்முகரத்தினத்திற்கு அனுப்பிய போது அவர் கட்டாயமாக இந்த பிரச்சினை குறித்து மக்களின் கருத்துக்கள் முக்கியமானவை என்றும் இதனை குவிமையக் குழுக்களின் கலந்துரையாடல்கள் (Focus Group Discussions) மற்றும் பிரதான நபர்களின் நேரமுகங்கள் (Key Persons Interviews) மூலமாக செய்யலாம் என ஆலோசனை வழங்கினார். இதனை ஏற்று எனது முன்மொழிவை திருத்தி எனது நண்பருக்கு ஐடியா நிகழ்ச்சித் திட்டத்தில் உயர்பதவி வகிக்கும் கௌதமன் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அவர்கள் ஆய்வுகளுக்கு தன்னால் உதவ முடியும் என உறுதி கூறினார். இந்த உதவியின் மூலமாகவே மலையகத்தின் பிரதான எட்டு மாவட்டங்க ளுக்கும் கள விஜயம் செய்து பண்புரீதியான தரவுகளை பெற்று கொள்ள முடிந்தது. தொகைரீதியிலான தகவல்களோடு இணைந்ததாக பண்பு ரீதியான தகவல்களையும் உள்ளடக்கி இந்த ஆய்வை ஆழமானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் ஆக்கிக் தொள்ளலாம் என தீர்மானித்தேன்.

இந்த நூல் ஓர் ஆய்வு நூலாக மட்டுமன்றி ஒரு செயற்பாடு சார்ந்தவொன்றாகவும் அமைய வேண்டும் என்பது எனது விருப்பமாகும். அத்தோடு இது சாதாரண வாசகனை சென்றடைய வேண்டும் என்றும் விரும்பினேன். அதற்கேற்ற வகையில் இந்த நூலின் அமைப்பு இலகுவான எழுத்து நடை கொண்டதாக இருக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தப்பட்டது. இந்த வகையில் வாசிப்பை இலகுப்படுத்த பொருத்தமான நிழற்படங்கள் பல இணைக்கப்பட்டுள்ளன.இது எந்தளவிற்கு வெற்றியளித்துள்ளது என்பதை வாசகர்களே தீர்மானிக்க வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட பிரச்சினையை சரியாக புரிந்து கொண்டால் அதற்கு பாதி தீர்வு கிடைத்தமாதிரி என பிரபல அரசியல் ஞானி ஒருவர் குறிப்பிட்டிருந்தார். எனவே நிலவுரிமைபிரச்சினை குறித்து ஒரு தெளிவான புரிதலை ஏற்படுத்த பல்வேறு அம்சங்கள் ஆராயப்பட வேண்டிய தேவை எழுந்தது இந்த முயற்சிக்கு அரசாங்க துறைசார்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நீண்டகால ஈடுபாடு பெரிதும் உதவியது எனலாம். பிரச்சினை குறித்த புரிதல் எந்தளவிற்கு ஏற்பட்டுள்ளது என்பதை வாசகர்களே தீர்மானிக்க வேண்டும்.

மலையகம் 200 என்பது 2023 ஆண்டின் மலையகத்தை பொறுத்த வரை பிரதான பேசு பொருளாக மாறியுள்ளது. இது குறித்து பல்வேறு நடவடிக்கைகள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் மாத்திரமல்லாது. இந்தியா இங்கிலாந்து போன்ற நாடுகளிலும் இடம் பெற்று வருகிறது. இவற்றுள் முக்கியமானவை சஞ்சிகைகள் மற்றும் நூல் வெளியீடுகள் ஆகும் அந்த பகுப்பிற்குள் எனது இந்த நூலும் உள்ளடங்குகின்றது. மலையகம் 200 என்ற மகுடத்தில் பிரதானமாக பேசப்பட்ட விடயம் தோட்ட தொழிலாளர்களின் நிலவுரிமையாகும். ஆகவே இந்த நூலும் முக்கிய ஒரு விடயம் பற்றி அமைந்திருப்பது எனக்கு மன நிறைவை தருவதாக அமைந்துள்ளது. அத்தோடு இந்த நிலவுரிமையோடு தொடர்புற்று இந்த ஆண்டின் இறுதிவரை இடம் பெற்ற அனைத்து நிகழ்வுகளையும் பதிவு செய்வதாகவும் இந்நூல் அமைந்துள்ளது.

இறுதியாக ,சமூகத்தின் அழுத்த குழுக்களாக செயற்படும் சிவில் சமூக அமைப்பினர் இந்நூலில் கூறப்பட்டுள்ள விடயங்கள் குறித்து கலந்துரையாடுவார்கள் என்பது எனது எதிர்பார்ப்பு. அந்த அடிப்ப டையில் நிறைவேற்றப்படவேண்டிய விடயங்கள் குறித்து அரசியல் தலைமைகளினூடாக அழுத்தம் கொடுத்து அவற்றை நிறைவேற்ற முயற்சிப்பார்கள் என்பது எனது மற்றுமொரு நம்பிக்கையாகும்.

இந்த நூலின் உருவாக்கத்திற்கு பலரின் பங்களிப்பு காரணமாக அமைந்திருந்தது. இவர்களின் எண்ணிக்கை மிக நீண்டது என்றாலும் அனைவருக்கும் நன்றி கூறும் அதேவேளை சிலரின் பெயர்களை குறிப்பிட்டு நன்றி தெரிவிப்பது எனது கடமையாகும். அந்த வகையில் ஏற்கனவே குறிப்பிட்டபடி, எனது பல்கலைகழக காலத்திலிருந்து தோழமை உறவுடன் எனது எழுத்து முயற்சிகளுக்கு ஊக்கமளித்து வரும் ந. சண்முகரத்தினத்திற்கும் இந்த நூல் குறித்து மிகவும் அக்கறையோடு ஆரம்பத்திலிருந்து தொடர்பிலிருந்து உதவி வந்ததோடு இந்த நூலுக்கு பொருத்தமான முகவுரையையும் வழங்கியுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பா. கௌதமன் அவர்களுக்கும் எனது மனமாரந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நூல்கள், தரவுகள், தகவல்கள் சேகரிப்பில் பலர் எனக்கு உடனுக்குடன் மனமுவந்து உதவினர். அந்த வகையில, கலாநிதி இரா.ரமேஸ், ஓய்வுநிலை பேராசிரியர் எஸ். சந்திரபோஸ் மற்றும் திறந்த பல்கலைகழக சிரேஷ்ட விரிவுரையாளர் பொன். இராமதாஸ் சமூக செயற்பாட்டாளர்கள் எஸ்.டி . கணேசலிங்கம், சுரேஸ் நடேசன் ஆகியோருக்கு எனது நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

கள விஜயத்தின் போது பலரின் பங்களிப்பு தகவல் திரட்டலை வசதிப்படுத்தி எளிதாக்கியது. கலந்துரையாடல்களில் மிகுந்த ஆர்வத் துடன் கலந்து கொண்டு மிகவும் பொறுமையாவும் மிகுந்த ஆர்வத்துடன் பங்கு பற்றி விளக்கங்கள் தந்த அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றிகள்.

மலையகத்தின் எட்டு மாவட்டங்களுக்கும் என்னை அழைத்து சென்று கலந்துரை யாடல்களை வசதிப்படுத்துவர்களாக பலர் பங்களிப்பு வழங்கினர். அந்தவகையில் எஸ்.டி.கணேசலிங்கம், நுவரெலிய மாவட்டத்தில் மூன்று இடங்களிலும் சுரேஸ் நடேசன் பதுளை மாவட்டத்தில் ஐந்து இடங்களிலும் கண்டியில் முன்னாள் மாகாண சபை உறப்பினர் டி.மதியுகராஜா மாத்தளையில், கண்டி ஐ.எஸ்.டி நிறுவனத்தை சார்ந்த எஸ்.வசந்தகுமார் ஆகியோரின் பங்களிப்பு பெறுமதிமிக்கது. இரத்தினபுரியில் அதிபர் எம். சந்திரகுமார் மற்றும் அவரது குழுவினரும் அன்றைய காலநிலையையும் பொருட்படுத்தாது சந்திப்புக்களை ஒழுங்கு படுத்தினர். கஹவத்தையில் நெல்சன் மோகன் ராஜ் குழுவினர்களுடனான சந்திப்பும் பயனுள்ளவையாக அமைந்தன. கேகாலை மாவட்டத்தில் தெரணியகல பகுதியில் முன்னாள் அதிபர் வி. கோவிந்தசாமி மற்றும் புலத்கொஹூபிட்டிய தமிழ் வித்தியாலய அதிபர் ஆர்.ஹேமசந்திரன் தலைமையிலான கலந்துரையாடல்கள் பயனுள்ளவையாக அமைந்தன. தெஹியோவிட்ட பகுதியில் ஒய்வு நிலையிலுள்ள தோட்ட உத்தியோகத்தர்களை சந்திக்கக்கூடியதாக இருந்த்து. மாத்தறை தெனியாய பகுதியில் நான்கு சந்திப்புகளை சமூக செயற்பாட்டாளர் எம். மனுவேல் ஏற்பாடு செய்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுத்துறை மாவட்டத்தில் சமூக செயற்பாட்டாளர்கள் களுத்துறை புஷ்பராஜ் மற்றும் ஆரோக்கியநாதன் ஆகிய இருவரும் பயனுள்ள வகையில் கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.இவர்கள் அனைவருக்கும் எனது உளப்பூரவமான்நன்றிகள் உரியதாகும்.

இறுதியாக இந்நூலை வடிவமைப்பதில் பலரின் பங்கு குறிப்படத்தக்கது. பதிப்பு துறையிலும் அனுபவமிக்க முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ் மற்றும் இந்நூலின் வரைவினை செம்மைப்படுத்திய சிரேஷ்ட விரிவுரையாளர் பொன். இராமதாஸ் மற்றும் தேவையான படங்களை சேகரித்து தருவதற்கு உதவிய ஊடகவியலாளர் ஜீவா சதாசிவம் மற்றும் செல்வி ரா.நர்மதா ஆகியோருக்கு எனது மனமார்நத நன்றிகள். கள விஜயத்தின்போது, தெளிவுபடுத்துதலை நோக்காக கொண்டு மூன்று குறிப்புரைகள் தொடர்புள்ள மூவரால் எழுதப்பட்டு, நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. இதனை எழுதிய சிவம் பிரபாகரன் (கந்தப்பளை), செந்தமிழ்ச் செல்வி (அங்கராங்கந்தை), யுனிகா (தெனியா) ஆகியோருக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகளை உரித்தாகின்றேன். சிறந்த முறையில் கனணிப் பதிப்பை செய்து உதவிய திருமதி அக்னஸ் ஜெயந்தன் அவர்களுக்கும் வழமை போல சிறப்பான முறையில் அச்சிட்டு உரிய காலத்தில் வழங்கிய நண்பர் குமரன் அவர்களுக்கும் எனது மனமுவந்த நன்றிகள். இந்நூலை எழுதுவதற்கு உறுதுணையாக இருந்து பல்வேறு உதவிகளை பொறுமையோடு வழங்கிய எனது துணைவி யோகேஸ் வரிக்கும் தொடர்ந்து எனது எழுத்து முயற்சிகளுக்கு உற்சாகமும் ஒத்துழைப்பும் வழங்கி வரும் எனது மகன்மார்கள் பார்த்தீபன், முகிலன், வசந்தன் ஆகியோருக்கும் நன்றிகளை பதிவு செய்வது எனது பொறுப்பும் கடமையுமாகும்.

**எம்.வாமதேவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| *முகவுரை* | | vii |
| *என்னுரை* | | xii |
| 1. | அறிமுகம் | 1 |
| 2. | தொழிலாளர் வருகையும் சமூக உருவாக்கமும் | 8 |
| 3. | நிலவுரிமை பற்றிய ஆய்வுகள் | 35 |
| 4. | நிலவுரிமை பற்றிய மக்களின் பார்வை | 59 |
| 5. | நிலவுரிமையை பெற்றுக் கொள்வதில் எதிர்நோக்கும் சவால்களும் சாத்தியங்களும் | 93 |
| 6. | தோட்டத் தொழிலாளர்கள் சிற்றுடைமையாளர்களாக மாறுதல் | 109 |
| 7. | அரசியல் அந்தஸ்துக்கான அடிப்படையான நிலவுரிமை | 120 |
| 8. | நிலவுரிமையை நிலைநிறுத்திக் கொள்ளல் | 132 |
| *பிற்சேர்க்கைகள்* | | 139 |
| *உசாத்துணைகள்* | | 157 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

# அறிமுகம்

இலங்கையின் மலையக சமூகம், என்று அடையாளப்படுத்தப்படும் இனக்குழு 1820களில், இலங்கையில் தோட்டப் பொருளாதார முறைமை அறிமுகப்படுத்தப்பட்டபோது பெருமளவில் தென்னிந்தியாவி லிருந்து தோட்டத் தொழிலாளராக வந்த இந்திய வம்சாவளியினராவர். இருநூறு வருடங்களை கடந்து விட்ட நிலையிலும் இன்னும் இந்த நாட்டின் குடியுரிமையை முழுமையாக அனுபவிக்காத நிலையில், தேசிய நீரோட்டத்தில் ஒன்றிணைவதற்குப் போராடி வருகின்றனர். இத்தகைய நிலைமைக்கு அடிப்படையான காரணங்களில் நிலவுரிமை பிரதானமானது என்பதை தெளிவுபடுத்தும் ஒரு முயற்சியே இந்நூலின் உள்ளடக்கமாகும்.

பெருந்தோட்ட பயிர்களாக உலக அளவில் கொக்கோ, கோப்பி, தேயிலை, சீனி, ரப்பர், வாழைப்பழம், பாம் எண்ணெய், புகையிலை போன்றவை அடையாளங் காணப்பட்டிருந்தாலும், வர்த்தக நோக்கத் திற்காக பெருமளவில் உற்பத்தி செய்யப்படுபவையே பெருந்தோட்ட பயிர்களாக கருதப்படுகின்றது. இலங்கையில் வர்த்தக நோக்கத்தில் பெரிய மற்றும் சிறிய அளவுகளிலும் இவை பயிரிடப்படுகின்றன. எனவே தேயிலை, ரப்பர், தென்னை ஆகிய பெரும் பயிர்களோடு, சிறுபயிர்களான கொக்கோ, சினமன் (கறுவாப்பட்டை) சிற்றநெல்லா, மிளகு, ஏலம் (Cardamom) போன்றவையும் குறிப்பிடப்படுகின்றன. எனினும் கோப்பி, தேயிலை, இரப்பர், தென்னை போன்றவையே ஏற்றுமதி பயிர்களாக இலங்கைப் பொருளாதார அமைப்பில் முக்கியத்துவம் பெற்றவையாக திகழ்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகளாவிய மட்டத்தில், ஐரோப்பிய குடியேற்ற நாடுகளில், ஏற்றுமதி பயிர் உற்பத்திக்காக புதிய விவசாய பயிர்கள் அறிமுகப் படுத்தப்பட்டன. போர்த்துக்கல் நாட்டின் காலனித்துவவாதிகளால், முதலாவதாக சீனியே அறிமுகப்படுத்தப்பட்டது. தொடர்ந்து பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் கோப்பி, பருத்தி போன்றவை மேற்கிந்திய நாடுகள், தென்கிழக்கு ஆசியா மற்றும் ஆபிரிக்கா நாடுகளில் பயிரிடப்பட்டன. பெருந்தோட்டம் என்ற சொல், பல மாற்றங்களுக்கு உட்பட்டு வந்தாலும், இதனுடைய பிரதான பண்பாக, நிலம், மூலதனம், முகாமைத்துவம், உழைப்பு என்பவற்றை உலக அளவில் ஒருங்கிணைத்து ஏற்றுமதிக்காக புதிய விவசாய பொருட்களை உற்பத்தி செய்வதாக காணப்பட்டது. இவற்றில் உழைப்பு என்ற உற்பத்தி காரணியை உள்ளீடாக வழங்கிய தொழிலாளர்கள், தோட்ட முறைமையின் பாதிப்புக்குள்ளாகினர்.

தற்காலத்தில் பெருந்தோட்ட முறைமைக்கு மாற்றான சிற்றுடைமை முறைமையிலும் இவ்வணிக பயிர்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. உலகளாவிய மட்டத்தில் கென்யா, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் இப்பயிர்களின் உற்பத்தி பெருமளவில் சிற்றுடைமை முறையில் அமைந்துள்ளன. இவை பெரும்பாலும் விவசாயிகள் (Peasant) பயிரிடுவதற்கு ஒப்பான ஒன்றாக அமைந்து பெருந்தோட்ட முறைமையின்றும் முற்றிலும் வேறுபட்டனவாக அமைந்துள்ளன. சிறிய நிலப்பரப்பு, குடும்ப உழைப்பும், முகாமைத்துவமும் வெளி நாட்டுத் தொடர்பற்ற நிலை சுதந்திரமான உழைப்பாளர் (Free Labour) போன்றன பிரதான அம்சங்களாக காணப்பட பெருந்தோட்டங்கள் பெரிய நிலப்பில், அதிக அளவிலான தொழிலாளர்கள் தொடர்ச்சியாக தேவைப்படுவதால் சுதந்திரமற்ற நிலைமை அதிகாரத்துவமிக்க மேற்பார்வை, உயர் செலவிலான முகாமைத்துவம், ஏற்றுமதி பயிர் என்பதால், வெளிநாட்டு தொடர்புகள் வசிப்பிட தொழிலாளர்களாக இருக்க வேண்டிய நிலையில், அனைத்து வசதிகளும் வழங்கப்பட வேண்டிய நிலையில் முகாமைத்துவத்திலேயே தங்கியிருக்க வேண்டிய கலாசாரம், குறைந்த கூலி, குறைந்த மட்ட வாழ்க்கைத்தர வசதிகள் போன்றவை பிரதான அம்சங்களாக திகழ்கின்றன. இலங்கையைப் பொறுத்தவரை, இந்திய தொழிலாளர்கள், தோட்டங்களுக்குள்ளேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைபட்டிருக்கக் கூடிய நிலையில் சிற்றுடைமை உற்பத்தி முறைமை, பெருமவில் பெரும்பான்மை இனத்திற்கு உரிய ஒன்றாக உருவெடுத் துள்ளது. இந்திய தொழிலாளர்களின் ஈடுபாடானது இம்முறைமையில் குறிப்பிடக் கூடிய ஒன்றாக இல்லை.

இத்தகை பொருளாதார பின்னணியில் தோட்டத் தொழிலாளர் களாக 1820களில் குடியேறியவர்கள் காலகதியில் ஒரு சமூகமாக உருவெடுத்தனர். ஆரம்பகாலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கோப்பிப் பயிர்ச்செய்கையின் போது அது ஒரு பருவகால பயிர் என்பதால் தொழிலாளர்கள் வருவதும் போவதுமாகவே இருந்தனர். பெருமளவில் குடிவந்தவர்கள், ஆண்களாக இருந்தபடியால் குடும்பங்கள் உருவாக வில்லை. ஆனால் 1860இற்கு பின்னர், தேயிலை பயிர்ச்செய்கை ஆரம்பமானதோடு, தொடர்ச்சியானதும், அதிக எண்ணிக்கையான தொழிலாளர்கள் தேவைப்பட்டதால், குடியகல்வு, குடும்பங்களாக உருவாகத் தொடங்கி அது ஒரு சமூகம் உருவாக வழி பிறந்தது. 1900களின் ஆரம்ப காலத்திலேயே ஒரு சமூகத்திற்குரிய பண்புகள் உருவாகத் தொடங்கியது. இது தவிர்க்க முடியாதவகையில் ஒரு வர்க்க அடிப்படையிலேயே அமைந்திருந்தது.

தென்னிந்தியாவிலிருந்து இங்கு வந்தமை அல்லது கொண்டு வரப்பட்டமை மிகவும் துயர் நிறைந்தவொரு சம்பவமாகும். வறுமை, சாதியக் கட்டுப்பாடுகளை இவர்களின் குடியகல்வுக்கு தள்ளுவிசையாக (Push Factors) செயற்பட்டன. இந்த செயன்முறையிலும், பின்னர் தோட்டங்களில் தொழிலாளர்களை அடக்கி வைப்பதிலும் கங்காணி முறைமை பாரிய செல்வாக்கு செலுத்தியது.

பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பல நடவடிக் கைகள் தொழிலாளர்களுக்கு சாதகமாக அமையவில்லை. அரசியல் ரீதியாக சட்ட சபையில், இலங்கையருக்கு பிரதிநிதித்துவம் ஆரம்பத்தில் அவை இனத்துவ ரீதியாக அமைந்து இந்திய வர்த்தகர்களுக்கு இடம் கிடைத்தது. இந்தியர்கள் என்ற அடிப்படையில் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொழிற்சங்கவாதி கோ.நடேசய்யரின் தோற்றத்தோடு முன்னிலைப்படுத்தப்பட்டன. சட்டசபையில் தெரிவுமுறை மூலம் பிரதிநிதித்துவம் வழங்க முற்பட்ட முயற்சிகளின் போது தொழிலாளர் களுக்கு வாக்குரிமை வழங்குவதை, உள்நாட்டு அரசியல் தலைமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக கடுமையாக எதிர்த்தமை என்பன குறிப்பிடத்தக்கன. 1931இல் டொனமூர் யாப்பு சீர்திருத்தத்தின்படி அனைவருக்கும் வாக்குரிமை என்ற சிபாரிசு நடைமுறைப்படுத்தப்பட்ட போதே இந்திய தொழிலாளர் களும் இதில் உள்வாங்கப்பட்டனர். இதன்படி அரசாங்க சபைக்கு மூவர் தெரிவு செய்யப்படக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால் இந்த வாக்களிக்கும் முறைமை இலங்கை சுதந்திரமடைந்ததோடு பிரஜாவுரிமை பறிப்புடன் வாக்களிக்கும் உரிமை மறுப்பு என்பவற்றோடு பெருமளவில் முடிவிற்கு வந்தது.

சுதந்திரத்திற்கு பின்னரான இம்மக்களின் வாழ்வியல், ஐந்து தசாப்தங்கள் (1948-2003) வரை நாடற்றவர் என்ற நிலையில் அரசியல் பிரதிநிதித்துவமின்றி உரிமைகளை முழுமையாக அனுபவிக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டனர். சுதந்திர இலங்கையில் இவர்கள் அரசியல் ரீதியாக ஓரங்கட்டப்பட்டு, பொருளாதார மற்றும் சமூகரீதியில் ஒதுக்கப் பட்ட நிலையில் அரசாங்க அபிவிருத்தி செயல்பாட்டின் பலாபலன்களை இவர்களால் முழுமையாகப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் காணப்பட்டனர். தோட்டத்திற்குள்ளே காணப்பட்ட லயன் வீட்டு முறை தொடர்ந்து 1990களில் மாற்றம் காணத்தொடங்கியது. கல்வி வசதிகள் 1970இற்கு பின்னரே மாற்றமடையத் தொடங்கியது. ஏனைய துறைகளில் பெருமளவிற்கு முன்னேற்றங்களை காணக்கூடியதாக இருக்கவில்லை. நாடற்றவர் நிலை 2003இல் அனைவருக்கும் குடியுரிமை என்ற சட்ட சீர்த்திருத்தத்தின்படி தீர்க்கப்பட்டதன் பின்னரே உரிமை அனுபவிப்பு பற்றி அரசியல் தலைமைகள் அதிகம் அக்கறை காட்டின.

தோட்ட முறைமை 1970கள் வரை மாறுதல்களற்று உடமை மற்றும் முகாமைத்துவம் வெளிநாட்டு மற்றும் தனியார்களிடம் இருந்தன. 1972ஆம் 1975ஆம் ஆண்டு நிலச்சீர்த்திருத்த சட்டங்களின் அடிப்படையில் தோட்டங்கள் அரசமயமாகின. இதனால் தோட்டத் தொழிலாளர்கள் அடைந்த நன்மைகளை விட தீமைகளே அதிகமாக காணப்பட்டன. தோட்ட நிலங்கள் பல்வேறு அபிவிருத்தி திட்டங்க ளுக்காக விடுவிக்கப்பட்டன. இதில் முக்கியமான மாற்றம் நிலங்கள் கிராமிய மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டமையாகும். 1956இல் ஆரம்பிக்கப்பட்ட சிற்றுடைமையாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சி பெறத் தொடங்கியது. 1980களில், ஒரு இலட்சமாக இருந்தவை. 2020களில் 4 இலட்சத்தை தாண்டியிருந்தது. இந்த உடைமை மாற்றத்தில தோட்டத் தொழிலாளர்களின் பங்கு குறிப்பிடக் கூடியதாக அமையவில்லை.

அரசியல் பிரதிநிதித்துவம், பிரஜா உரிமை பெற்றவர்களின் எண்ணிக்கை உயர, அதிகரிக்கத் தொடங்கியது. ஆனால் இந்த அதிகரிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு, இலங்கை-இந்திய ஒப்பந்தம் மூலம் ஏறக்குறைய இந்திய சனத்தொகையில் அரைவாசி பேர் தாயகம் திரும்பியமை காரணமாக அமைந்தது. 1968 பின்னரான ஒப்பந்த நடைமுறையானது, சனத்தொகையில் 10-12% சதவீதத்தை கொண்டிருந்த இந்த மக்களை 5-6%க்கு குறைத்து, அரசியல் பிரதிநிதித்துவத்தையும் பேரம் பேசும் சக்தியையும் மட்டுப்படுத்தியது.

சனத்தொகை குறைவிற்கும் இம்மக்கள் செறிந்து வாழ்ந்த நிலையை மாற்றி அவர்களை புலம்பெயரச் செய்தமைக்கும் நாட்டிலே இடம்பெற்ற இனவன்செயல்களும் ஒரு காரணமாகும். 1958இல் ஆரம்பித்து 1977 தொடக்கம் தொடர்ச்சியாக இடம்பெற்ற வன்செயல்கள், 1983இல் உச்சநிலையை அடைந்தது. இந்த வன்செயல்கள் இந்திய தமிழர்களை குறிவைத்தவை என்று சொல்ல முடியாவிட்டாலும், 1970களுக்கு பின்னர் இலங்கைத் தமிழரை மையப்படுத்திய உள்நாட்டு இனமுறுகளின் வெளிப்பாடுகள் என்றாலும் இவை இந்திய தமிழர்களையும் அதிகம் பாதித்தன. இதன் விளைவாக, இவர்கள் பாதுகாப்பான இடங்களை நாடி தமிழ்நாடு உட்பட இலங்கையின் வடகிழக்கு பகுதிகளை நோக்கி கணிசமான எண்ணிக்கையானோர் தமது பூர்வீக இடங்களிலிருந்து குடிபெயரத் தொடங்கினர்.

1994இற்கு பின்னர், அரசாங்க கட்டமைப்பில் இம்மக்களின் பிரதிநிதிகள் இடம் பெயரத் தொடங்கிய பின்னர், இவர்களின் வாழ்வியலில் சில குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. தோட்ட முறைமைக்குள் தொடர்ந்து வாழ்ந்தாலும் அவர்களது லயத்து வாழ்க்கை முறைமைக்கு மாறாக தனி வீடுகள் தோற்றம் பெறத் தொடங்கின. தோட்ட வீடமைப்பு, உட்கட்டமைப்பு சமூக அபிவிருத்தி போன்ற விடயங்களுக்குப் பொறுப்பாக அமைச்சொன்று உருவாக்கப் பட்டமை இச்செயல்முறையை துரிதப்படுத்தியது. அரச உத்தியோகத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக ஆசிரியர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் காணப்பட்டது. தோட்ட நிர்வாகத்தின் கீழிருந்த 800க்கு மேற்பட்ட தோட்டப் பாடசாலைகளை 1970களின் நடுப்பகுதியில் அரசாங்கம் பொறுப்பேற்றதன் விளைவாக பல மாற்றங்கள் ஏற்படத்தொடங்கின. இதன் உச்ச விளைவே பல்கலைக்கழகத்திற்கு செல்வோரின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்தமையாகும். ஆரம்பக் கல்வியை மட்டும் கற்றவர்களாக இருந்து தோட்டத் துறையில் அடைப்பட்டிருந்தவர்கள் இடைநிலை மற்றும் உயர்நிலை கல்வியை கற்றதன் பின்னர் தோட்டத் துறையை விட்டு அகலத் தொடங்கினர். தொழிலாளர்களின் பற்றாக்குறைக்கு படித்த இளைஞர்களின் வெளி யேற்றம் பங்களித்தமையை இங்கு மறுக்க முடியாது.

அபிவிருத்தி நடவடிக்கைகளில் அரசியல் தலைமைகள் காட்டிய ஆர்வம் உரிமையை நோக்கித் திசை திரும்பத் தொடங்கியது. நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச சபைகள் பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, தனி வீடுகளுக்கான தெளிவான உறுதி என்பவை குறிப்பிடக்கூடிய வொன்றாகும். இந்த வகையில் வீட்டுரிமை யோடு இணைந்தவொன்றாக காணி உரிமையைக் குறிப்பிடலாம். இந்த மக்களின் அபிலாஷையாக இருப்பது வீட்டுக்கான காணியும், வாழ்வாதாரத்திற்காக காணியுமாகும். பலத்த பேரம் பேசலுக்கு மத்தியில் வீட்டுக்கான உரிமை இன்று சாத்தியமாகியுள்ளது. வாழ்வாதாரத்திற்கான கோரிக்கை தற்போது அரசாங்க மட்டத்தில் பேசுபொருளாகியுள்ளது.

இந்திய தமிழர்களுக்கு காணி உரிமை மறுப்பு வரலாற்றின் ஆரம்பத்திலிருந்து அவதானிக்கப்பட்டவொன்றாகும். ஆனால் காலகதியில தொழிலாளர்களல்லாத இந்திய தமிழர்கள், தோட்டங்களுக்கு சொந்தக்காரர்களாக உருவாகியுள்ளனர். தோட்ட தொழிலாளர்கள் தங்களது நிலவுரிமைக்காக போராடிய சம்பவங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன. தற்போது தென்னிந்தியாவிலிருந்து தோட்டத் தொழிலுக்கு குடியேறிய 1823இலிருந்து, 200 ஆண்டுகள் கழிந்த நிலையில், அது பல மட்டங்களில் நினைவு கூறப்படுகின்றது. பெரும்பாலும் இம்மக்கள் பல்வேறு துறைகளிலும் பின்தங்கிய நிலையில் இருப்பது மற்றும் ஒதுக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்ட நிலையில் வாழ்தல் என்பன எடுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்பட்டு வருகின்றது. இந்த வகையில் அதிகம் பேசப்பட்டு வருவது நிலவுரிமையாகும்.

இத்தகைய பின்னணியில் இந்நூல் நிலவுரிமையை மையப்படுத்திய ஒன்றாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது அத்தியாயம் இம்மக்களின் பின்புலத்தை நிலவுரிமையை மையப்படுத்தி விளக்க முயல்கிறது. மூன்றாவது அத்தியாயம் இவ்வுரிமை பற்றிய நூல்கள் ஆவணங்களின் பதிவுகளை வெளிப்படுத்துகின்றது. நான்காவது அத்தியாயம் தற்போது மக்கள் இவ்வுரிமையை அடைவதில் எத்தகைய நிலைமையில் உள்ளார்கள் என்பதை அவர்களின் குரலாக காட்டுகிறது. ஐந்தாவது அத்தியாயம் அவ்வுரிமையை அடைந்து கொள்வதில் எதிர்நோக்கும் சவால்கள், அதனை எதிர்கொள்ளவதற்கான சாத்தியங்கள் எவை என்பதை அடையாளங்காட்டுகிறது. சாத்தியங்களில் முதன்மை பெறும் சிற்றுடைமையாளர்களாக மாறுதல், ஆறாவது அத்தியாயத்தில் ஆராயப்படுகின்றது. நிலவுரிமையோடு இணைந்து அரசியல் உரிமைப்பற்றி ஏழாவது அத்தியாயம் எடுத்தியம்புகின்றது. அரசாங்க கட்டமைப்பில் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் அதற்கான சாத்தியமான பொறிமுறைகளை எடுத்துக் காட்டுவதாக இறுதி அத்தியாயம் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2

# தொழிலாளர் வருகையும் சமூக உருவாக்கமும்

### பின்புலம்

மலையக மக்களின் வரலாறு, 200 வருடங்களைக் கடந்து நிலையில், அவர்களது பல உரிமைகளில் குறிப்பாக நிலவுரிமையானது இன்றும் நிறைவேறாத நிலையில் காணப்படுகிறது. இதற்கான காரணங்களுக்கான தேடுதலில், இவர்களைப் பற்றிய ஓர் ஆழமான மற்றும் அகலமான பின்புலத்தைப் பற்றிய புரிதல் அவசியமாகின்றது. ஒரு முழுமையான புரிதலுக்கு இவர்களது வரலாறு, பொருளாதார, அரசியல், சமூக அம்சங்கள் முக்கியமானவையாகின்றன. இந்தியாவிலிருந்து குறிப்பாக தென்னிந்தியாவிலிருந்து இங்கு வந்தவர்கள் பிரித்தானியர் காலத்திற்கு முன்பே அரசியல் கலாசார அடிப்படையில் தொடர்புற்று காணப்பட்டாலும், இன்றைய 'மலையக மக்கள்' என்ற கருத்துருவாக்கத்தோடு தொடர்புற்றிருப்பவர்கள் தோட்டத் துறையின் தொடக்கத்தோடு இலங்கைக்கு வந்தவர்கள் என்ற அடிப்படையிலேயே, மலையகம் 200 என்பது இன்று முக்கிய பேசுபொருளாகியுள்ளது.

### வரலாறு

கோப்பிப் பயிர்ச்செய்கையின் ஆரம்பத்தோடு, இந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் இலங்கை வருவதற்கான இழுவை (Pull) ஆரம்பமாகி, இலங்கையின் பொருளாதாரத்தை இரட்டை பொருளாதாரமாக்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் மத்திய பாகத்தில், கண்டிய பிரதேசத்தில் எவ்வித கலப்புமில்லாத பாரம்பரிய பிழைப்பு மட்ட விவசாயிகள், வாழ்ந்து வந்த சமூக பொருளாதார சட்டகத்தில் கோப்பி பயிர்ச்செய்கை புதிய வெளிச்சக்திகளுக்கு வழி திறந்தது. (வெசும்பாய, 1986) கோப்பிப் பானத்திற்கு வெளிநாட்டில் கேள்வி அதிகரிக்க, இலங்கை அரசியல் ரீதியில் ஒரு நிலையானதாகவும் நிர்வாகரீதியில் ஒருமுகப்படுத்தப்பட்ட தாகவும் அமைந்து, ராஜகாரியமுறை ஒழிக்கப்பட்டு, சுதந்திரமாக தொழிலாளர்கள் சந்தையில் கிடைக்கக் கூடியதான நிலையில் சுவாத்திய நிலை சாதகமாக அமைந்து கோப்பிப் பயிர்ச்செய்கைக்கு இது உகந்த இடமாக அடையாளம் காணப்பட்டது. ஆரம்பத்தில் கிராமத்தையொட்டிய அவர்களின் தரிசு நிலங்கள் (Wasteland) சேனே நிலங்களில் ஆரம்பிக்கப் பட்டாலும், பின்னர் காடுகளை அழித்து உருவாக்கப்பட்ட புதிய நிலங்களே தோட்டப் பயிர்ச் செய்கைக்கு உகந்ததாக அமைந்திருந்தது. (வெசும்பாய - 1986) எனவே காடுகள் நிலக் கட்டளைச் சட்டங்களின்கீழ் (1840, 1841) மூலம் அரசாங்கத்தால் முதலீட்டாளருக்கு, நிலங்கள் விற்கப்பட்டு, அவர்களுடைய முதலீடுகளின் பாதுகாப்பிற்காக தெளிவான உறுதியும் வழங்கப்பட்டது. எனவே, காடுகளை அழிப்ப தற்கும், தோட்டங்களை உருவாக்குவதற்கும், தொழிலாளர்களுக்கான தேவை உருவாகியது. இத்தொழிலாளர்கள் கண்டிய விவசாயிகளிடையே பெற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையே 1833இல் ராஜகாரியமுறை ஒழிக்கப்படுவதற்கு காரணமாக அமைந்தது. ஆரம்பத்தில் சிலர் கோப்பித் தோட்டத்தில் வேலை செய்ய ஆரம்பித்தாலும், நிரந்தரமாக அதனை வாழ்வாதாரமாக கொள்ள முடியவில்லை. இதன்படி கொந்தராந்து முறையில், புல்புடுங்குதல் காடழித்தல் போன்றவற்றி லேயே ஈடுபட்டனர். இதனால் தோட்டப் பயிர்ச் செய்கைக்காக தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்வதற்கு பிரித்தானியர்கள், சனத் தொகை அதிகமாக காணப்பட்ட சீனா மற்றும் இந்தியாவை நாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

உள்நாட்டு கிராம விவசாயிகள், பெரும்பாலும், நிலத்திற்கு சொந்தக்காரர்களாகவோ அல்லது விளைச்சல் பங்காளர்களாகவோ (Share-Croppers) இருந்தார்கள். இதனால் அவர்களுக்கு கூலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறவேண்டிய தேவை அதிகளவில் இருக்கவில்லை. தொழிலாளர்களாக வேலை செய்வதை அவர்கள் சமூக ரீதியில் இழிவான ஒன்றாக கருதினர். ஆனாலும், தென்னிந்திய விவசாய தொழிலாளர்கள், அதிக மானோர் நிலமற்றவர்கள். சாதியமைப்பில் கீழ்நிலையில் இருந்தவர்கள் என்பதனால் கூலி வேலை செய்வதற்கு தயார் நிலையில் இருந்தனர். வறுமை, நிலையிலிருந்த இவர்கள் வரட்சி போன்ற சூழ்நிலையில் பசி, பட்டினிக்கு உட்பட்டவர்களாக இருந்தனர். இலங்கை விவசாயிகள், தோட்டங்களில் தங்கி வேலை செய்ய விரும்பவில்லை. சிலர் வேலை செய்தாலும் தங்களது கிராமங்களுக்கே சென்றுவிடும் நிலையில் இருந்தனர். எனவே எல்லாவகையிலும், இலங்கையின் விவசாயிகளை தோட்டங்களில் வேலைக்கு அமர்த்துவது பிரித்தானியர் களுக்கு சாதகமாக அமையவில்லை. ஆனால் தென்னிந்திய விவசாய தொழிலாளர்களின் நிலைமை, இவர்களுக்கு மிகவும் சாதகமாகவே அமைந்தது. இதன்காரணமாகவே இந்தியாவிலிருந்து இவர்களை அழைத்துவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.


இலங்கைக்கு கொண்டு வருகின்ற முயற்சி, பலவந்தமாகவோ, ஒப்பந்த அடிப்படையிலோ அமையவில்லை. மாறாக, கங்காணி முறைமையின் கீழ், தென்னிந்தியாவின் வறுமை, வரட்சி, சாதியமைப் பினால் பாதிக்கப்பட்டு, நிலமற்ற பெரும்பான்மை விவசாய தொழிலா ளர்களை ஒன்று திரட்டி, இலங்கையின் பொருளாதார நிலை, வருமானம் என்பன இழுவை சக்திகளாக (Pull factors) செயற்பட இங்கு கொண்டு வரப்பட்டனர். இதற்காக கங்காணிகளுக்கு ஒரு தொகை பணம் கொடுக்கப்பட்டது. குடியகல விரும்பியவர்களுக்கு ஒரு தொகை பணம் ஆரம்ப செலவுகளுக்காக கடனாக வழங்கப்பட்டது. எனவே தான் இவர்களது பயணம், கடனிலே ஆரம்பித்து பின்னர் கடன் சுமையோடு இலங்கையில் வாழ வேண்டி ஏற்பட்டது (சந்திரசேகரன், 2001) ஒப்பந்த அடிப்படையில் வராத காரணத்தால், சுதந்திர தொழி லாளர்கள் என அடையாளப்படுத்தப்பட்டாலும், தோட்டங்களை வந்தடைந்த பின்னர் அவர்கள் ஒரே தோட்டத்திலேயே வசித்திட நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதற்கான பிரதான காரணமாக அமைந்தது, அப்போது அறிமுகப்படுத்தப்பட்ட துண்டு முறைமையாகும் (Chit


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

system). இதன் மூலம் இவர்கள் பெற்ற கடன், இவர்களுக்கு அவ்வப் போது வழங்கப்பட முற்பணங்கள் இந்த துண்டில் பதியப்பட்டன. இத்துண்டு, கங்காணிகள் வசமே இருந்தன. இக்கடன்களை முற்றாகத் திரும்பச் செலுத்தினாலேயே இவர்கள், ஒரு தோட்டத்திலிருந்து இன்னு மொரு தோட்டத்திற்கு மாற்றலாகிச் செல்லக்கூடியவர்களாக இருந்தனர். இலகுவில், வட்டியுடன் பெற்ற கடன்களை செலுத்திமுடிக்க முடியாத நிலையில் இவர்கள் நுழைந்த தோட்டத்திற்குள்ளேயே அவர்கள் அடைபட்டிருந்தனர். தோட்டத்தை விட்டு, வெளியேறினால் அவர்கள் சிறை பிடிக்கப்பட்ட நிலையும் காணப்பட்டது. கங்காணிகள், ஆள் திரட்டலுக்கு பொறுப்பாக இருந்தாலும் தோட்டத்திற்குள்ளே அவர்களை கண்காணிப்பவர்களாகவும் செயற்பட்டனர். இவர்கள் பெரும்பாலும் தொழிலாளர்களின் கிராமத்தை அல்லது அண்டிய கிராமத்தை சேர்ந்த வர்களாகவும் உயர்சாதியை சேர்ந்தவர்களாகவும் இருந்தமையினால் இவர்களது தலைமை இலகுவில் ஏற்கப்பட்டது. இவர்களே, தோட்ட நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இடையே தொடர்பாடலாளர் களாக திகழ்ந்தனர். தொழிலாளர்களின் சம்பளமும் கூட, இவர்கள் மூலமாகவே வழங்கப்பட்டது. தொழிலாளர்களின் கொடுப்பனவுகள், அவர்களது கடன்களை கழித்தே வழங்கப்பட்டன. இத்தகையவர்களே, பின்னர் தோட்டங்களை சொந்தமாக்கிக் கொள்ளக்கூடிய நிலைக்கு உயர்ந்தனர் (சந்திரசேகரன், 2001). இத்தகையோரின் பெயர் பட்டியல் பிற்சேர்க்கை (1)ஆக தரப்பட்டுள்ளது. அத்தோடு, இவர்கள் தொழிற் சங்க உருவாக்கத்திற்கு தடையாக இருந்து பின்னர் தொழிற்சங்க தலைவர்களாகவும் உருவெடுத்தனர்.


தொழிலாளர்களின் வருகையானது சுகமாக அமையவில்லை. தங்களது கிராமங்களிலிருந்து தனுஷ்கோடி வரை, கால்நடையாகவே வந்து, இலங்கை தலைமன்னாரை படகுகள் மூலம் வந்து சேர்ந்துள்ளனர். வந்து சேரும் போதே படகுகள் கவிழ்ந்து இறந்து போனவர்கள் பற்றி பதிவுகள் பல உண்டு. ஆதிலெட்சுமி கப்பல் கவிழ்ந்தமை, அடிக்கடி கூறப்படுகின்ற சம்பவமாகும். உரிய எண்ணிக்கையினருக்கு மேலதிக மாக மக்களை கப்பல்கள் ஏற்றி வருவதால் இத்தகைய கவிழ்வு சம்பவங்கள் இடம்பெற்றன. தலைமன்னாரிலிருந்து மாத்தளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வரைக்குமான தூரத்தை பாதைகள் இல்லாத நிலையில் காடுகளின் வழியாக நடந்து சென்றபோது அனுபவித்த துன்பங்கள் பலவாகும். பாதை வழியே இறந்து போனவர்களின் எண்ணிக்கை அதிகம் என்பதோடு போதிய உணவின்றி, பலவீனமான நிலையில் இறந்து போனவர்களை அதே நிலையில் விட்டு விட்டு தங்களது பயணத்தை தொடர்ந்துள்ளனர். மாத்தளையை வந்தடைந்து அங்கிருந்து கண்டி பிரதேசங்களில் உருவாக்கப்பட்ட தோட்டங்களை நோக்கி புகையிரத பாதைகள் அற்ற நிலையில் நடைபாதைவழியே இவர்கள் சென்றடைந்தனர்.

### பொருளாதாரம்

பெருந்தோட்ட முறைமையின் அறிமுகமானது, உள்நாட்டு விவசாய பொருளாதார அமைப்பில் முதலாளித்துவ ஏற்றுமதி பொருளாதார முறைமையை உருவாக்கி இலங்கையில் இரட்டை பொருளாதாரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைபெறச் செய்தது. வணிக நோக்கத்திற்காக பாரிய அளவில் ஏற்று மதிகள் உற்பத்தி செய்யப்பட்டது. பெருந்தோட்ட முறைமை என்பது ஒரு பொருளாதார உற்பத்தி முறைமையும், சமூக நிறுவனமுமாகும் எனக் கூறும் G.L.பெக்பேட் (G.L.Beckford) தோட்ட உற்பத்தி முறை மையை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகிறார். ''விவசாய உற்பத்தி பொருளை விற்பனைக்காக அதிக அளவில் திறனற்ற தொழி லாளர்களை ஈடுபடுத்தி, அவர்களை மிக நெருக்கமாக மேற்பார்வை செய்து உற்பத்தி செய்கின்ற முறைமையாகும்.'' இந்த வரைவிலக்கணத்தி லிருந்து பின்வருவன தெளிவாகின்றது.

1. திறனற்ற தொழிலாளர்கள் என்பதால் அவர்கள் நெருக்கமாக மேற்பார்வை செய்யப்பட வேண்டும். (Closely Supervised) இது அதிகாரத்துவ அமைப்பிற்கு வழிவகுத்தது.


2. உற்பத்திக்காக அதிக எண்ணிக்கையானவர்கள் தொடர்ந்து தேவைப்படுவதால், அவர்கள் நிரந்தரமாக தொழில் செய்யு மிடங்களிலேயே தங்க வேண்டிய தேவை உருவானது. இவர்கள் வசிப்பிட தொழிலாளர்கள் (Residential Labour) என்று வரையறுக்கப்பட்டனர்.

3. திறனற்ற தொழிலாளர்கள் என்பதால், இவர்களது கூலி குறை வானதாக கொடுக்கப்படுவது நியாயப்படுத்தப்பட்டது.

கோப்பி பயிர்ச் செய்கை 1823ஆம் ஆண்டளவில் அறிமுகப்படுத்தப் பட்டு அது 1860 வரைக்கும் இலங்கைப் பொருளாதாரத்தில் கோலோச்சியது. இக்காலகட்டத்தில் கோப்பிப் பயிர்ச்செய்கைக்கு தொழிலாளர்கள் தேவையானது, பருவகால அடிப்படையில் அமைந்தி ருந்தது. இதனால் தொழிலாளர்கள் வருவதும் போவதுமாகவே இருந்தனர். இதனால் ஒரு நிலையான சமூகம் உருவாக வாய்ப்பிருக்க வில்லை. மேலும் இங்கு வந்தவர்கள் அதிகளவினர் ஆண்கள். பெண்களின் வீதம் 2%மாக மிகவும் குறைவாகவே காணப்பட்டது. (Jayawardana and Rachelkurian 2015) 1843இல் மொத்த தொழிலாளர்களில் பெண்கள் 26%மாகவே காணப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டு உழைப்பாளர்கள் கொண்டு வரப்பட்ட நிலையில், இன்னுமொரு உற்பத்தி காரணியான நிலம், அரசாங்கம் மற்றும் முதலீட்டாளர்களினால் பெருமளவில் கிடைப்பதாக இருந்தது. 1840ஆம் ஆண்டு முடிக்குரிய காணி (அத்துமீறல்) கட்டளைச் சட்டம் (Crown Lands (Encroachment Ordinance) நிறைவேற்றப்பட்டதன் பின்னர் காடுகள் அல்லது உரிமை கொண்டிராத நிலங்கள் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டு தோட்ட உற்பத்தியாளர்களுக்கு (Planters) குறைந்த விலையில் விற்கப்பட்டன. அதேபோல தரிசுநில கட்டளைச் சட்டம் (1897), ஆனது அபிவிருத்தி செய்யப்படாத நிலங்களை சுவீகரிக்கப் பட்டு பெருந்தோட்ட வளர்ச்சிக்கு வழங்குவதற்கு வழிசெய்தது.

மூலதனம் மற்றும் முகாமைத்துவம் என்பன ஆங்கில அரசாலும், முதலீட்டாளர்களாலும் வழங்கப்பட்டன. வெளிநாட்டு கம்பனிகளும் உள்நாட்டு தனியார்களுமே பொதுவாக இத்துறையில் ஈடுபட்டிருந்தன. வெளிநாட்டு கம்பனிகளை முகவர் நிலையங்கள் (Agency Houses) முகாமைத்துவம் செய்தன. இந்த முகவர் நிலையங்கள், வெளிநாட்டு சந்தையோடு, தொடர்புபடுத்துவதற்கு உதவி செய்ததோடு, உள்நாட்டு, வெளிநாட்டு ஏல விற்பனையில் ஈடுபாடு காட்டி இந்தத் துறை உருவாக்கிய மேலதிகத்தை (Surplus) வெளிநாட்டிற்கு கொண்டு செல்வதில் அதிகளவு செல்வாக்கு செலுத்தின. கூலி குறைவாக கொடுக்கப்பட்ட நிலையில் விற்பனையில் மற்றும் வெளிநாட்டு உள்ளூர் ஏற்றுமதி விலையில் பெறுமதி சேர்க்கப்பட்ட நிலையில் வெளிநாட்டு நுகர்வோருக்கு அதிக விலையில் விற்பனை செய்து சேர்க்கப்பட்ட பெறுமதியின் பலாபலன்களை இந்த முகவர் நிலை யங்களே பெற்றுக் கொண்டன (பட்டி வீரகோன் - 1975).

இந்த முறைமை மிக நீண்டகாலமாக தொடர்ந்து நிலவியதோடு 1972ஆம் ஆண்டு, அப்போதைய அரசாங்கத்தின் சோஷலிச கொள்கை காரணமாக நிலச்சீர்த்திருத்த சட்டம் (1972) கொண்டு வரப்பட்டு50 ஏக்கர் நிலமே ஒருவர் சொந்தமாக வைத்திருக்கலாம் என்ற உச்ச வரம்பின் அடிப்படையில், தனியாருக்கு சொந்தமான மேலதிக நிலங்கள் அரசுடைமையாக்கப்பட்டன. ஆனால் ஏஜென்சி நிறுவனங் களோ அல்லது வெளிநாட்டு கம்பனிகளோ இத்தேசிய மயப்படுத்தலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்வாங்கப்படவில்லை. இதே காலப்பகுதியில் ஏஜென்சி நிலையங்கள் மற்றும் தரகு நிறுவனங்கள் (Brokering Firms) பற்றிய விசாரணை ஆணைக்குழு 1971ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, அது தனது அறிக்கையை 1976ஆம் ஆண்டு மகாதேசாதிபதிக்கு சமர்ப்பித்தது. இதன் சிபாரிசுகளின் அடிப்படையில், நிலச்சீர்த்திருத்த திருத்த சட்டம், 1975 கொண்டு வரப்பட்டு அதன்படி வெளிநாட்டு கம்பனிகளின் தோட்டங்கள் அரசுடைமையாக்கப்பட்டன. (சண்முகரத்தினம், 1997). இவற்றை நிர்வகிக்க 1972இல் உசவசம போன்ற நிறுவனங்கள் உருவாக்கப் பட்டாலும் 1975இற்கு பின்னர், இவை ஏற்கனவே இருந்த அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் (State Plantation Corporation - SPC) மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை (Janatha Estate Development Board - JEDB) போன்ற நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு ஏறக்குறைய 500 தேயிலை இறப்பர், தென்னை தோட்டங்களை 235,000 ஹெக்டர்கள் நிலப்பரப்பை கொண்டதால் 400,000 தொழிலாளர்களையும் 24,000 உத்தியோகத்தர்களையும் கொண்டதாக உருவாக்கப்பட்டன. 1991ஆம் ஆண்டளவில் இது நாட்டின் 64% தேயிலை மற்றும் 32% இறப்பர் உற்பத்திக்கு வகைக் கூறின. தென்னை உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவில் அமையவில்லை.

இந்த தேசியமயம் அல்லது அரசமயம் (Nationalisation or Statisation) பல அம்சங்களை கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இது, உள்ளூர் கிராமவாசிகளின், வெளிநாட்டு எதிர்ப்பிற்கு கிடைத்த வெற்றியாக கருதப்பட்டது. உள்நாட்டின் வளம், வெளிநாட்டவரின் கையிலிருந்து, அரசாங்கத்திற்கு மாற்றப்பட்டமை அன்றைய அரசாங்கத்தின் முற்போக்கு கொள்கைக்கு கிடைத்த வெற்றி எனக் கருதப்பட்டது. கிராம விவசாயிகள் தாங்கள் இழந்ததாக கருதப்பட்ட நிலங்கள் தங்களுக்கு பகிரப்படலாம் என எதிர்பார்த்தனர். கிராம விஸ்தரிப்பு திட்டங்கள் மற்றும் நட்சா (National Acricultural Development Settlement Authority - NADSA) போன்றவை மூலமாக கிராமத்தவர்கள், இத்தோட்ட நிலங்களுக்கு சொந்தமாகினர். குறைந்த அளவு நிலமே இவ்வாறு பகிரப்பட்டாலும், தோட்டத் தொழிலாளர்களுக்கு இது முற்றிலும் மறுக்கப்பட்டமை. குறிப்பிடத்தக்கவொன்றாகும். இவர்கள், இந்தியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கருதப்பட்டமையும், பிரஜாவுரிமையற்று நாடற்றவர்கள் என்ற நிலை காரணமாக, இவர்கள் பலர் தோட்டங்களிலிருந்து வெளியேற்றப் பட்ட பல சம்பவங்கள் பதிவாகின. அத்தோடு, இவ்வளவு காலமும் தோட்ட உத்தியோகத்தர்களாக ஓரளவிற்கு படித்த தோட்டப்புற இளை ஞர்களுக்கு கிடைத்த வேலை வாய்ப்புகள் மறுக்கப்பட்ட நிலையும் உருவாகின. குறிப்பாக, புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கு (Creches) பொறுப்பாக நியமிக்கப்பட்ட பராமரிப்பு உத்தியோகத்தர்கள் பெருமளவில் மொழி தெரியாதவர்களே நியமிக்கப்பட்டனர்.

தோட்ட உடைமை மற்றும் முகாமைத்துவம் (Ownership and Management) பொறுத்தவரை ஏற்பட்ட முக்கிய மாற்றம் 1992ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்ட தனியார் மயப்படுத்தலாகும். (Privatisation) 1977இல் ஐ.தே.கட்சி அரசாங்கத்தை பொறுப்பேற்றி ருந்தாலும் அது தனது தனியார்மய பொருளாதார கொள்கையை 1992ஆம் ஆண்டு தோட்டத்துறையிலும் அமுல்படுத்தியது. ஆரம்பத்தில் அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் கீழிருந்து 23 பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளுக்கு (Regional Plantion Campaines) மீள் ஒதுக்கீடு செய்தது. 449 தேயிலை தோட்டங்கள் 23 கம்பனிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. இவைகள் ஒவ்வொன்றும் 11 முதல் 28 தோட்டங்களை கொண்டதாக சராசரியாக 20 தோட்டங்களைப் உள்ளடங்கின. இந்த 23 கம்பனிகளும், முகாமைத்துவ முகவர் (Management Agent) ஒருவரோடு ஒப்பந்தம் செய்து கொண்டன. இந்த முகவர் நிறுவனங்கள் தோட்டங்களை, முகாமைப்படுத்தல் அபிவிருத்தி செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். இலாபத்தில் ஒரு பங்கு இம்முகாமைத்துவ முகவருக்கு கொடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் 99 வருட குத்தகைக்கு வழங்கப்பட்டு, ஒப்பந்தம் செய்யப்பட்டது.

முற்போக்கு கூட்டணியினர் (Progressive Allaince) காலத்தில் 1995ஆம் ஆண்டில் முழுமையான தனியார் மயப்படுத்தல் இடம்பெற்றது. இதில் முக்கிய அம்சம் வெளிநாட்டு கம்பனிகளுக்கு பங்கு விற்பனையில் 99%வீதம் வரை அனுமதிக்கப்பட்டது. பிராந்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பனிகளின் பங்கு விற்பனையில் கம்பெனிகளுக்கு 51%மும், பொதுமக்களுக்கு 20%மும் தோட்டத் தொழிலாளர்களுக்கு 10%மும் அரசாங்கத்திற்கு 19%மாக நிர்ணயிக்கப்பட்டன. தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட்ட 10% பங்குகளால் அவர்களுக்கு எவ்வித மனோநிலை மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை (Shanmugaratnam-1997). தொழிலாளர் களுக்கு வழங்கப்பட்ட பங்குடமை சாட்சிப்பத்திரத்தின் மாதிரி பிற்சேர்க்கை (2)ஆக தரப்பட்டுள்ளது. பொன்பங்குடைமையாளர் (Golden Shareholder) என திறைசேரி செயலாளருக்கு வழங்கப்பட்ட 1%வீத பங்கு முக்கியமான ஒன்று. இதன் மூலம் நிலம் அரசுக்கு உரிமையானது என உறுதிப்படுத்தப்பட்டது. இந்நிலங்களை உப குத்தகை வழங்குதல். கம்பனிகளின் கணக்குகளை பரிசோதிக்கின்ற அதிகாரமும், இப்பொன் பங்காளருக்கு வழங்கப்பட்டது. அத்தோடு அரசாங்கத்தின் பங்குகள் 10%க்கு மேல் இருக்குமாயின் திறைசேரியின் பிரதிநிதி ஒருவர் பணிப்பாளர் சபையில் (Board of Directors) இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டது. அத்தோடு, கம்பெனிகளின் செயற்பாட்டினை கண்காணிக்க பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சில் பெருந்தோட்ட முகாமைத்துவ கண்காணிப்பு பிரிவு (Plantaion Management and Monitoring Division) ஒன்று உருவாக்கப்பட்டது. நிலத்துண்டுகள், அபிவிருத்தி அல்லது ஏதாவது வேறு காரணிகளுக்கு விடுவிக்கப்பட வேண்டுமானால் பொன் பங்குடமையாளரின் அனுமதி, பெருந்தோட்ட கண்காணிப்பு பிரிவின் சிபாரிசின் பேரிலேயே வழங்கப்பட்டு வருகிறது. மொத்த பங்குகளில் 51%ம் பிராந்திய கம்பனிகளுக்கு இருந்தாலும் அரசின் ஈடுபாடும் இக்கம்பனிகளில் இருக்க வழிவகை செய்யப்பட்டது.

தோட்டத் தொழிலாளர்களின், நலன்புரி விடயங்கள், வீடமைப்பு, சுகாதாரம், பிள்ளைகள் பராமரிப்பு போன்றவற்றிற்கு நிதியமொன்று தாபிக்கப்பட்டது. வெளிநாட்டு நிறுவனங்களான உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் நோர்வே, நெதர்லாந்து ஆகிய நாடுகளின் நிதி உதவியுடன், மத்திய தவணை முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் (Medium Term Investment Programme) 1985-1994 காலப்பகுதியில், பெருந்தோட்டங்களை புனரமைப்பதற்காக 211.8 மில்லியன் அமெரிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொலர் முதலீட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது. மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை (JEDB) மற்றும் பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் (SLPC) மூலமாக இந்நிகழ்ச்சி திட்டம், சமூக நலன்புரி பகுதியாக அமுல்படுத்தப்பட்டது. இதன் மொத்த முதலீடு 741.8 மில்லியன் ரூபாவில் 95% நோர்வே மற்றும் நெதர்லாந்தின் முழுமையாக மானியமாக வழங்கப்பட்டது. 1992இல் தனியார் மயப்படுத்தலோடு இச்சமூக நலத்திட்டங்களை அமுல்படுத்த பெருந்தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி நிதியம் (Plantation Housing and Social Welfar Trust) உருவாக்கப்பட்டது. இதன் பணிப்பாளர் சபையில் அரசாங்க தரப்பில், பெருந்தோட்ட கைத்தொழில், வீடமைப்பு, சுகாதாரம் மற்றும் திறைசேரியை பிரதிநிதித்துவப்படுத்த 4 பேரும் தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்த 2 வரும், 5 பேர் கம்பனிகள் சார்பிலும் இடம் பெற்றனர். இதன் அமைப்பு முறைமை, தோட்ட நிர்வாகிகளுக் கேற்றதாகவே அமைந்திருந்தது. இந்நிதியத்தின் மீண்டெழும் செலவு (recurrcut expenditure) கம்பெனிகளின் கொடுப்பனவு மூலமாகவே நிதியீட்டம் செய்யப்பட்டது. தோட்டத் துறையின் வீடமைப்பு, சுகாதாரம், பிள்ளை பராமரிப்பு என்பன இதன் பிரதான பணிகளாக அமைந்திருந்தன. 2002ஆம் ஆண்டு இதனது பெயர் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நிதியம் (Plantation Human Development Trust) என பெயர் மாற்றம் பெற்றது.

பெருந்தோட்டங்கள் 1972ஆம் 1975ஆம் மற்றும் 1992, 1995ஆம் ஆண்டு காலப்பகுதியின் நிலச்சீர்த்திருத்த சட்டங்களின் ஊடாக மூலம் அரசு பொறுப்பேற்ற காலத்திலும் பின்னர் தனியார் மயப்படுத்தலின் போதும் தோட்டத் தொழிலாளர்களுக்கான தாங்கள் வாழுகின்ற லயங்கள் மற்றும் வீட்டுத் தோட்டங்கள் உரிமையாக்கப்பட வேண்டும் என குரல் எழுப்பப்பட்டாலும் கூலி உயர்வு, வேலை நாட்கள் போன்ற வற்றிற்கே அதிக அழுத்தம் கொடுக்கப்பட்டது. லயன்களை புனர மைத்தல் போன்ற வற்றிற்கே அரசமயப்படுத்தப்பட்ட கால கட்டத்தில் (1972-1992) கவனம் செலுத்தப்பட்டது. 1995இல் தனியார் மயப்படுத்த லுக்கு பின்னர், லயங்களுக்குப் பதிலாக தனி வீடுகள் உருவாகத் தொடங்கியமை, இங்கு குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசியல்**

தோட்டத் தொழிலாளர்களின் அரசியல் நகர்வுகள் தவிர்க்க முடியாத வகையில், தொழிற்சங்க நடவடிக்கைகளோடு இணைந்தவொன்றாகவே அமைந்திருந்தது. 1820களில் தோட்டங்களில் குடியேறியிருந்தாலும், நூறாண்டுக்குப் பின்னரேயே தொழிற்சங்க நடவடிக்கைகள் முகில்க்க தொடங்கியுள்ளன. தோட்ட முதலாளிகளின் பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் கோ.நடேசய்யரின் முயற்சியினால் ஆரம்ப தொழிற்சங்க அமைப்புக்கள் தோற்றம் பெற்றன. ஆரம்பத்தில் 1916இல் சட்ட நிரூபண சபையில், இந்தியர் ஒருவருக்கு பிரதிநிதித்துவம் கிடைத் தாலும், ஆரம்ப பிரதிநிதித்துவம், இந்திய வர்த்தக நலன்களுக்கே கிடைத்தன. 1920களில் வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டபோது அதற்கு பலத்த எதிர்ப்பு கிளம் பியது. அவர்கள் இந்தியர்களாக இருந்தபடியால், இந்திய எதிர்ப்பு குரல் இதனை ஒட்டி, உள்ளூர் அரசியல் வாதிகளால் எழுப்பப்பட்டு வந்தது.

தோட்டத் தொழிலாளர்கள் இங்கு நிரந்தரமாக வாழ வந்தவர்கள் அல்லர். அவர்கள் வருமானம் தேடவே வந்தனர். தங்களது நாட்டில் (சொத்துகளை) வீடு, நிலம் போன்றவற்றை பெற்று கொள்ளவே இங்கு வந்தனர். எனவே இங்கு வருவதும் போவதுமாகவே இருந்தனர். வந்து போகும் பறவைகள் (Birds of Passage) என்ற கருத்தே பெரும்பாலும் அரசியல் வாதிகள் மத்தியில் நிலவியது. நிரந்தரமாக குடியேறியவர்களின் வீதமானது டொனமூர் அறிக்கையில் (1931) 40% - 50% சதவீதமாகவும், ஜெக்சன் அறிக்கையில் (1938) 60% சதவீதமாகவும் சோல்பரி அறிக்கையில் (1947) 80% சதவீதமாகவும் குறிப்பிடப்பட்டுளளது (Kodikara 1965). இலங்கைக்கும் இந்தியாவிற்கும் போக்குவரத்து தடையில்லாது இருக்கவில்லை. இலங்கையின் தொழிலாளர் தேவை இந்தியாவின் வரட்சி போன்ற காரணங்கள் இதனை தீர்மானித்தன. இந்திய அரசாங்கத்தின் அக்கறை தோட்ட முதலாளிகளின் நலன் இலங்கை அரசாங்கத்தின் ஈடுபாடு என்பன இப்போக்குவரவினை தீர்மானித்தது. 1871ஆம் ஆண்டு ஆள் திரட்டல், இலங்கை அரசாங்கத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு 1937இல் இச்செயல்முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவிற்கு வந்தது (Kodikara-1965). இதற்கு பின்னால் இந்திய எதிர்ப்பு அடிப்படையாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. வரலாற்றுரீதியாக, இலங்கையும் தென்னிந்தியாவும் பகையாளர்களாக காணப்பட்டனர். தொழி லாளர்களாக வந்து இலங்கை பொருளாதாரத்திற்கு இவர்கள் பாரிய பங்களிப்பை செய்திருந்தாலும் இவர்கள் அந்நியர்களாகவே பார்க்கப்பட்டனர். 1971இல் மார்க்ஸிய கண்ணோட்டத்தில் அரசை கவிழ்க்க புரட்சி செய்த மக்கள் விடுதலை முன்னணி, இந்திய விரிவாக்கத்தின் ஒரு பகுதியினராக இத்தொழிலாளர்களை கருதியது. ஏனைய இடதுசாரி கட்சிகள், பெருமளவில் ஆரம்பகாலத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட காலம் வரை, இவர்களை தொழிலாளர்கள் என்ற வகையில் நேச சக்தியினராக கருதினர் என்பதையும் மனதிலிருத்த வேண்டும். தொழிலாளர்கள் அல்லாத இந்தியர்கள் வேறு வேறு துறைகளுக்கு தொடர்ச்சியாக வந்திருந்தாலும் அவர்கள் எண்ணிக்கை பொறுத்தவரை, குறைவாக அமைந்ததோடு அவர்கள் இந்தியாவோடு மிக நெருங்கிய தொடர்பை கொண்டிருந்ததோடு பெரும்பாலானவர்கள் சொந்த நாட்டிற்கு திரும்பிவிட்டனர். இங்கிருந்தவர்களில் உள்ளூர் மக்களோடு இணைந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. எனவே நீண்டகால கண்ணோட்டத்தில் இவர்கள் ஒரு அரசியல் பிரச்சினையாக அமைந்திருக்கவில்லை.


இவர்கள் 1920களை தொடர்ந்த காலத்திலேயே ஒரு அரசியல் பிரச்சினைக்குரியவர்களாக உருவாகத் தொடங்கினர். ஒன்று சட்ட நிரூபண சபைகளில் இவர்களுக்கான பிரதிநிதித்துவம், ஆரம்பத்தில் நியமன முறையில் அமைந்து பின்னர் தெரிவு முறையில் அமைய தொழிலாளர்களுக்கு வாக்களிக்கும் உரிமையளிப்பதற்கு பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. பொன்னம்பலம் அருணாசலம் போன்ற தமிழ்த்தலைவர்கள் இந்த மக்களுக்காக வாதாடியமை நன்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. கல்வி, அறிவு, சொத்து மற்றும் வசிப்பிடத் தகைமை (domicile) என்ற அடிப்படையில் இவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்படுவதற்கு எதிராக குரல் எழுப்பப்பட்டது. இவ்விவாதம் 1931 வரை நீண்டது எனலாம். பின்னர் பிரதமர்களாகிய தேசத்தலைவர்களான டி.எஸ்.சேனநாயக்கா, எஸ்.டபில்யூ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்.டி.பண்டாரநாயக்க போன்றவர்கள் இந்த எதிர்ப்பு குரலை ஓங்கி ஒலித்தனர். 'கடைசி இந்தியன் இந்த நாட்டை விட்டு வெளியேறினான் என்ற செய்தி கேட்டாலேயே நான் நிம்மதியாக உறங்குவேன்' என்ற S.W.R.D.பண்டார நாயக்காவின் கூற்று இந்த எதிர்ப்பு நிலைப்பாட்டை புடம் போட்டு காட்டுகின்றது (ராஜன் ஹூல்-2022).


S.P. வைத்திலிங்கம்


பெரிசுந்தரம்


கோ.நடேசய்யர்


F.X.பெரைரா

வாக்குரிமை வழங்கப்படுவதற்கு பலத்த எதிர்ப்பு 1920-1930 இற்கிடையில் காணப்பட்ட போதும், 1931இல் டொனமூர் யாப்பு சீர்த்திருத்ததின்படி சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்ட போது இது அனைவருக்கும் வழங்கப்பட்டது. இதன் காரணமாகவே பெரிசுந்தரம் (ஹட்டன்), S.P. வைத்திலிங்கம் (தலவாக்கலை) போன்றவர்களை அரச சபைக்கு தெரிவு செய்யக் கூடியதாக இருந்தது. F.X.பெரைரா நியமன பிரதிநிதியாக இருந்தார். இதன்பின்னர் கோ.நடேசய்யரும் தெரிவு செய்யப்பட்டார். இத்தகைய அரசியல் வளர்ச்சி இந்திய எதிர்ப்பாளருக்கு ஒரு தோல்வியாகவேபட்டது. வாக்காளர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த பல முயற்சிகள் செய்யப்பட்டாலும் 1946இல் இடம் பெற்ற முதல் பாராளுமன்றத்தில் 7 பேர் தெரிவு செய்யக்கூடிய நிலைமை உருவானது. இலங்கை இந்திய காங்கிரசை சேர்ந்த கே.இராஜலிங்கம் (நாவலப்பிட்டிய), G.R.மோத்தா (மஸ்கெலியா, C.V.வேலுப்பிள்ளை (தலவாக்கலை), S.தொண்டமான் (நுவரெலியா), S.M.சுப்பையா (பதுளை), கே.குமாரவேல் (கொட்டகலை) ஆகிய அறுவரும் சுயேட்சை உறுப்பினராக டி.ராமானுஜம் (அலுத்நுவர) ஆகியோர் இந்த 7 பேர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆவர். இலங்கைத் தமிழரான கே.வி.நடராஜா (பண்டாரவளை) சுயேட்சையாக தெரிவு செய்யப் பட்டார். மோத்தாவின் மறைவிற்கு பின்னால், ஜனாப் ஏ.அஸீஸ் தெரிவு செய்யப்பட்டார். (கணபதி பிள்ளை - 2011) அத்தோடு ஏறக்குறைய 20 தொகுதிகளில் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளின் காரணமாக இடதுசாரி லங்கா சமசமாஜக் கட்சி வெற்றி பெற்றது. இது குறைந்த பிரதிநிதித்துவத்துடன் ஆட்சி பீடமேறிய டி.எஸ். சேனநாயக்காவின் ஐ.தே.கட்சிக்கு இடது சாரிகள் பதவிக்கு வந்துவிடக்கூடிய வாய்ப்புண்டு என்ற பயத்தை ஏற்படுத்தியது. இந்தக் காரணங்களினா லேயே 1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றவுடன் யாருக்கு குடியுரிமை என்பதை வரை யறுக்கும் குடியுரிமை சட்டம் (1948)த்தின்படி, இந்தியர்களின் குடியுரிமை முற்றாக பறிக்கப்பட்டது. அடுத்த ஆண்டு இந்திய பாகிஸ்தானில் வசிப்பிட்ட சட்டம் (1949) குடியுரிமை இழந்தவர்கள் அதனை பெற்றுக் கொள்ள வசதியாக இயற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து தேர்தல் திருத்தச் சட்டம் (1949) குடியுரிமை இழந்தவர்களை வாக்காளர் டாப்பிலிருந்து நீக்கு முகமாக நிறை வேற்றப்பட்டது. இதனது மொத்த விளைவாக 1946இல் பெற்றுக் கொள்ளப்பட்ட பாராளுமன்ற பிரதிநிதித்துவங் களில் ஒன்றைக்கூட அடுத்து வந்த தேர்தல்களில்


ஏ.அஸீஸ்


டி.எஸ்.சேனநாயக்கா


எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க


என்.எம்.பெரேரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1952, 1956, 1960, 1965, 1970) பெற முடியாது போனது. 1977ஆம் ஆண்டே முதன் முறையாக ஒரு பிரதிநிதியை தெரிவு செய்யக்கூடிய நிலை தோன்றியது. இந்த விளைவுகளை இறந்த சனநாயகம் உரிமை மறுப்பு என்ற நூலில் ராஜன் ஹூல் கிருமை மலர் ஹூல் (2022) மிக விரிவாக விளக்கியுள்ளனர்.


கொல்வின் ஆர்.டி.சில்வா


எஸ்.ஏ.விக்கிரமசிங்க


எஸ்.நடேசன்


டட்லி சேனாநாயக்க



சேர் ஜோன் கொத்தலாவலை

குடியுரிமை இழப்பை தொடர்ந்து பாராளு மன்ற பிரதிநிதித்துவம் பறிபோக இந்திய தோட்டத் தொழிலாளர்கள் நாடற்ற நிலைக்கு தள்ளப்படு கின்றனர். இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இவர்கள் குறித்த பேச்சு வார்த்தை முற்றிலும் எண்ணிக்கை சார்ந்தவொன்றாகவே அமைந்தி ருந்தது. 1922ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம் நிறைவேற்றிய இந்திய குடியகல்வு சட்டத்தின்படி இந்தியாவிலிருந்து குடியகன்று, வேறு ஒரு நாட்டில் குடியேறி 5 ஆண்டுகள் அங்கு தொடர்ந்து இருந்தால் அவர்கள் அந்த நாட்டின் பொறுப்பிற்கு உட்பட்டவர்கள் என்ற நிலைப்பாட்டை இந்திய அரசாங்கம் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தது. ஆனால், இலங்கை அரசாங்கமோ, அதிக எண்ணிக் கையானவர்களை அவர்களது தாய்நாட்டிற்கு அனுப்பி விடும் நோக்கம் கொண்டதாக இருந்தது. இந்திய பிரதமர் நேரு, இந்த விடயத்தில் மிகவும் கடுமையாக இருந்தமையால் இலங்கைப் பிரத மர்கள் ஜோன் கொத்தவலை, டட்லி சேனநாயக்கா போன்றவர்களோடு இடம்பெற்ற பேச்சு வார்த் தைகள் பலனளிக்கவில்லை. இதன்காரணமாக Hugh Turkar என்ற வரலாற்றாசியர் நேரு கொஞ்சம் நெகிழ்வு போக்கை கடைப்பிடித்திருந்தால் இந்தப் பிரச்சினை தீர்வு காணப்பட்டிருக்கும் என்று கருத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும், 1964ஆம் ஆண்டு இலங்கை பிரதமர் ஸ்ரீமா பண்டார நாயக்காவிற்கும், இந்திய பிரதமர் லால் பகதூர் சாஸ்திரிக்குமிடையே இடம்பெற்ற பேச்சு வார்த்தையின்படி இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது.


ஜவர்ஹலால் நேரு


லால் பகதூர் சாஸ்திரி


இந்திரா காந்தி


ஸ்ரீமா பண்டாரநாயக்கா

இந்த ஒப்பந்தத்தின்படி அன்றைய சனத் தொகை கணக்கெடுப்பின்படி, நாடற்றவர்களாக இனங்காணப்பட்ட 975,000 பேரில், 525,000 பேர் இந்தியாவிற்கும் 300,000 பேர் இலங் கைக்குமென தீர்மானிக்கப்பட்டு மீதமுள்ள 150,000 பேரை 1974ஆம் ஆண்டு சிறிமா இந்திரா ஒப்பந்ததின்படி இரு நாடுகளும் சரிபாதியாக பிரித்து கொண்டனர். 1964ஆம் ஆண்டு ஒப்பந்தம், 1967ஆம் ஆண்டு நிறை வேற்றப்பட்ட இலங்கை-இந்திய நடைமுறைப் படுத்தல் சட்டப்படி, அமுல்படுத்தப்பட்டது. இது 15 ஆண்டுகளுக்குள் நிறைவேற்றப்பட வேண்டும் என கூறப்பட்டது. இந்தியாவிற்கு 7 பேர் சென்றால் 4 பேருக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்படும். உள்நாட்டு யுத்த நெருக்கடி, காரணமாக 1984இல் இலங்கைக்கும் இந்தியாவிற்குமான கப்பற் சேவை இடை நிறுத்தப்பட்டது. இங்கு இன்னுமொன்றை குறிப்பிடுவது பொருத்தமானது 30-04-1970இல் விண்ணப்பிப் பதற்கான முடிவு திகதியின்போது இலங்கை குடியுரிமைக்கு 625,000 பேர் விண்ணப்பித்திருந்தனர். இது ஒத்துக்கொள்ளப் பட்ட எண்ணிக் கையை விட 250,000 கூடிய தாகும். இந்தியாவிற்கு விண்ணப்பித்தவர்கள் 400,000 பேர் இன்றும், 200,000 தேவைப்பட்டனர். 1985இன் இறுதியில் இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணப்பங்கள் அனைத்தும் விசாரிக்கப்பட்டு சில நிராகரிக்கப்பட்டு மிருந்தன. இவர்கள் இந்தியாவிற்கு விண்ணப்பிக்க இடமளிக்கப்பட்ட போதும், 600,00 பேரை அது எட்டவில்லை. 206,000 பேரே விண்ணப் பித்திருந்த நிலையில் மேலும் ஒத்துக் கொண்டதன்படி 94,000 பேர் கொண்ட இடைவெளி காணப்பட்டது. இவர்களுக்கு குடியுரிமை வழங்கவென இந்தியா வம்சாவளி, நாடற்ற சிலருக்கு இலங்கை குடியுரிமை வழங்குதல் சட்டம் 1986இல் நிறை வேற்றப்பட்டது. இரு நாடுகளுக்குமிடையே வழங்கப்பட்ட குடியுரிமை நிலையை அட்டவணை 2.1 விளக்குகிறது.

**அட்டவணை 2.1**

**இருநாடுகளுக்குமிடையே வழங்கப்பட்ட குடியுரிமை தொடர்பான நிலைமை - 1998**

| இல | விபரம் | இந்தியா | இலங்கை |
|---|---|---|---|
| 01 | மொத்தமாக வழங்கப்பட வேண்டிய குடியுரிமை | 506,000 | 469,000 |
| 02 | எஞ்சிய வழங்கப்பட குடியுரிமை | 422,504 | 276,427 |
| 03 | வழங்கப்பட்ட வேண்டிய குடியுரிமை | 83,496 | 192,573 |
| 04 | தாயகம் திரும்பியோரின் எண்ணிக்கை | 337,413 | |

(இதில் இயற்கை அதிகரிப்பு உள்ளடக்கப்படவில்லை)

மூலம் : மாணிக்கம், 1996

நடைமுறைப்படுத்தல் தாமதம் காரணமாக, அதிகமான பேர் குடியுரிமை வழங்கப்பட வேண்டிய நிலையில் இருந்தனர். இதனை துரிதப்படுத்த 1988இல் நாடற்றவர்களுக்கு குடியுரிமை வழங்கல் (விசேட ஏற்பாடுகள்) என சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு குடியுரிமை வழங்கல் துரிதப்படுத்தப்பட்டது. இறுதியாக, 2003ஆம் ஆண்டு இலங்கை குடியுரிமை சட்டத்திற்கு கொண்டு வரப்பட்ட திருத்தத்தின்படி அனைவருக்கும் இலங்கை குடியுரிமை வழங்கப்பட்டது.

மொத்தத்தில், 2003ஆம் ஆண்டிற்கு பின்னரே இழக்கப்பட்ட அனைவருக்கும் குடியுரிமை வழங்கப்பட்டு அனைவரும் குடிமக்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக் கொள்ளப்பட்டனர். இதற்கிடைப்பட்ட காலத்தில் வாக்காளரின் எண்ணிக்கைக்கேற்ப பிரதிநிதித்துவமும் அதிகரிக்கத் தொடங்கியது. 1977இல் ஒன்றாக இருந்த பிரதிநிதிகள் படிப்படியாக கூடி, 11 வரை அதிகரித்தது. தற்போது இம்மக்களின் பிரதிநிதிகளாக தற்போது 9 பேர் பாராளுமன்றத்தில் காணப்படுகின்றனர். அத்தோடு அரசாங்க கட்டமைப்பில் 1994இலிருந்து அமைச்சு பதவிகளையும் பெற ஆரம்பித்தனர். 1997இல் தோட்ட வீடமைப்பு உட்கட்டமைப்பு சமூக அபிவிருத்திக்கென தனியான அமைச்சு உருவாக்கப்பட்டு, அரச நிதிகள் தோட்டங்களை நோக்கி பயன்படுத்தப்பட்டன. வீடமைப்பு, கல்வி, உட்கட்டமைப்பு போன்ற துறைகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்படத் தொடங்கியது. 1987இற்கு பின்னர் மாகாண சபைகள், பிரதேச சபைகள் உருவாக்கத்தின் பின்னர் இந்த மட்டங்களிலும், இம்மக்களின் பிரதிநிதித்துவம் இடம் பெறத் தொடங்கியது. மத்திய மற்றும் ஊவா மாகாண மந்திரி சபைகளில் ஓரிடம் கிடைக்கக்கூடிய வாய்ப்பும் ஏற்பட்டது. 2018இற்கு பின்னர் நுவரெலியா மாவட்டத்தில், பிரதேச சபைகளின் எண்ணிக்கை அதிகரிப்பிற்கேற்ப, சில சபைகளின் ஆட்சி அதிகாரம் இம்மக்களின் பிரதிநிதிகளுக்கு கிடைத்துள்ளது. இவை கொட்டகலை, அக்கரபத்தனை, நோர்வூட், மஸ்கெலியா என்பவையாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமூகம்**

இன்று மலையக சமூகம் என அடையாளப்படுத்தப்படும் இனக் குழுவினர் பெரும்பாலும் 1820களில் பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்காக வந்த கூலித் தொழிலாளர்களை சார்ந்தவர்களேயாவர். தோட்டங்களுக்கு வெளியே வேறு தொழில்களுக்காக வந்தவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் குறைவானதாகும். பெருந்தோட்டங்கள் பரவியிருக்கும் பல மாவட்டங்களில் இவர்கள் செறிந்தும் பரவலாகவும் வாழ்ந்து வருகின்றனர். இலங்கையின் சனத்தொகையில் 4.57சதவீதமாக காணப்படும் இவர்கள் மத்திய மாகாணம், ஊவா மாகாணம், சப்ரகமுவ மாகாணம், தென் மாகாணம், மேல் மாகாணம், வடமேல் மாகாணம் போன்றவற்றில் காணப்படும் தேயிலை, இறப்பர், தென்னை தோட்டங் களில் அல்லது அதனோடு தொடர்புற்ற வகையில் இவர்கள் காணப்படு கின்றனர். இது தொடர்பான விபரம் அட்டவணை 2.2இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.2**

**மலையக மக்கள் மாவட்ட அடிப்படையில் (சதவீதத்தில்) (2012)**

| மாகாணம் | மாவட்டம் | சதவீதம் |
|---|---|---|
| மத்திய | நுவரெலியா | 57.7 |
| | கண்டி | 11.2 |
| | மாத்தளை | 9.8 |
| ஊவா | பதுளை | 21.2 |
| | மொனராகலை | 2.9 |
| சப்ரகமுக | இரத்தினபுரி | 10.7 |
| | கேகாலை | 7.3 |
| தென் | காலி | 11.9 |
| | மாத்தறை | 2.6 |
| மேல் | கொழும்பு | 15.2 |
| | களுத்துறை | 3.8 |
| | கம்பஹா | 3.9 |
| வடமேல் | குருநாகல் | 1.3 |
| | புத்தளம் | 6.6 |

மூலம் : இலங்கை மலையகத் தமிழர், தேவராஜ் 2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு மலையக தமிழர்கள் என்று குறிப்பிடப்படுவர், சனத்தொகை கணக்கெடுப்பில் இந்திய தமிழர்களாகவே அடையாளம் காணப்படுவர். இந்த இரு சொற்பதங்களும், இன்று பலத்த விவாதங்களுக்குட்பட்டு வருகின்றன. தோட்டங்களை சார்ந்தவர்கள், தோட்டங்களை சாராதவர்கள் என இவர்களை இரு பிரிவாக பார்க்கலாம். தோட்டங்களோடு எவ்வித தொடர்பற்றவர்கள், அதிகளவில் புத்தளம், கொழும்பு போன்ற மாவட்டங்களில் இருக்கின்றனர். ஆனால் இங்கு மலையகத் தமிழர் என்ற பிரிவை தோட்டங்களை சார்ந்தவர்கள் என்ற வகுப்பிற்குள் உட்படுத்தியே பார்க்கப்பட்டுள்ளது.

தோட்டங்கள் எனும் போது அங்கும் பல பிரிவுகள் காணப்படுகின்றன. 22 தனியார்துறை பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகள் (Regional Plantation Companies), அரச துறையைச் சேர்நத நிறுவனங்களாகிய மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை (Janatha Estate Development Board) மற்றும் அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் (State Plantation Corporation) மற்றும் தனியார் சிறுதோட்டங்கள் என்பனவையே தோட்டங்கள் என்ற பகுப்பிற்குள் வருகின்றன. இதைவிட சிற்றுடைமைகள் (Small Holding) என்ற பாரிய ஒரு பிரிவும் காணப்படுகின்றது. இத்தைகைய பிரிவுக்குள் அடங்கும் தோட்டங்கள் எல்லா மாவட்டங்களிலும் ஒரே வகையாக காணப்படவில்லை. உதாரணமாக உயர் நிலமான நுவரெலியா மாவட்டத்திலே அனைத்துமே பிராந்திய கம்பனிகளாகவும் மத்திய மட்டத்தில் (Mid Level) அரச தோட்டங்களும், தாழ் நிலங்களில் (Low level) சிறு தோட்டங்களும் அதிகளவில் காணப்படுகின்றன. மாவட்டங்கள், தோட்டங்களின் வகை என்பவற்றிற்கேற்ப, இச்சமூகத்தின் வாழ்நிலையும் மாறுபட்டு காணப்படுகின்றன. நுவரெலியா, பதுளை மாவட்டங்களில் அரசியல் பிரதிநிதித்துவம் அதிகளவில் காணப்படுவதால் அவர்கள் அரச வளங்களை ஒப்பீட்டளவில் ஏனைய மாவட்டங்களை சார்ந்தவர்களை விட அதிகளவில் பெற்றுக் கொள்கின்றனர்.

ஆரம்பத்தில் 'கூலி'களாக வந்து பின்னர் தொழிலாளர்களாக அழைக்கப்பட்டு நாளடைவில் ஒரு சமூகமாக பரிணமித்துள்ளனர். 1920களில் இவர்கள் தொழிலாளர்கள் ஒரு வர்க்கரீதியில் அணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரண்டனர். தொழிற்சங்க தோற்றம் இதனை உறுதிப்படுத்துகின்றது. தோட்டங்களில் ஏற்கனவே குறிப்பிட்டபடி தொழிலாளர்கள் ஒரு பிரிவினராகவும் உத்தியோகத்தர்கள் இன்னுமொரு பிரிவினராகவும் முகாமைத்துவம் என்ற நிலையில் துரைமார்கள் இன்னுமொரு பிரிவாக வர்க்க நிலைப்பாடுகள் மிகவும் கூர்மையடைந்ததாகவே காணப்பட்டது. இதன் வர்க்க அடுக்குமுறையும் தொழில்ரீதியான மேற்பார்வை என்ற அடக்குமுறையும் இங்கு எப்போதும் ஒரு கொந்தளிப்பான நிலையை தோற்றுவித்த வண்ணமே இருந்து வந்தது. இதன் விளைவாக நிர்வாகத்திற்கெதிரான போராட்டங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்தன. துரைமார்களின் கொலை, உத்தியோகத்தர்களை வெட்டுதல போன்றவை பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒரே இனத்தை சார்ந்தவர்கள் என்னும் இனத்துவத்திற்கு மேலாக வர்க்க நிலைப்பாடே பெரிதாக வெளிப்பட்டிருந்தது.

தோட்ட சமூகம், அரசியல் ரீதியாக ஒரே நிலைப்பாட்டையே எதிர்நோக்கியது. கல்வித்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள், தொழி லாளர்கள் மத்தியிலிருந்து படித்த ஒரு மத்திய தரவர்க்கத்தை உருவாக்கத் தொடங்கியது. சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலத்தில் இதனை தெளிவாக காணக்கூடியதாகவிருந்தது. நாடற்றவர் நிலை அனைத்து தரப்பினரையும் பொதுவான ஒன்றாகவே பாதித்தது. தோட்டத்துறையினர் என்ற பொது வான மையத்தில் அங்கு வாழ்ந்த அனைவரும் ஒன்று சேர்ந்தனர். ஓரங்கட்டப்படுதல், ஒதுக்கப்படுதல், வன்முறைகளை எதிர்நோக்கல் மற்றும் சமூக நிலையில் இவர்கள் கீழ் மட்டத்தவர்களாக ஏனைய சமூகத்தினரால் பார்க்கப்பட்டனர். தேசிய நீரோட்டத்திலே ஒன்று கலக்காதவண்ணம் பொருளாதார, அரசியல் ரீதியில் மட்டுமன்றி சமூக அடிப்படையிலும் ஒரு கீழான நிலையில் பார்க்கப்பட்டனர். 1982ஆம் ஆண்டு தோட்டத்துரைமார் சங்கத்தில் அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர்.ஜயவர்த்தன பின்வருமாறு பேசுகிறார். ''தோட்டப் பாடசாலைகள் என்பது பாடசாலைகள் அல்ல. அவை தொழிலாளர்களின் பிள்ளை களுக்கு எழுதவும் வாசிக்கவுமான கல்வியை அளித்து, அவர்களை தொழிலாளர்களாக ஆக்குவதாகவே அமைந்திருந்தன. 150 வருடங்க ளுக்கு மேலாக இங்கேயே வாழ்ந்திருந்தாலும் இவர்களிடையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை சட்டத்தரணிகள்? ஐந்து பேர்கள் கூட இல்லை. எத்தனை வைத்தியர்கள்? ஐந்து பேர்கள் கூட இல்லை. எத்தனை அரசியல் வாதிகள் உள்ளனர்? எத்தனை பேர் படித்தவர்கள் உள்ளனர்? ஆங்கிலம், சிங்களம், தமிழ் மூலம் படித்த விஞ்ஞானிகளாக அரச உயர் உத்தியோகத்தர்களாக எத்தனை பேர்? ஐந்து பேர் கூட இல்லை. ஏதோ ஒரு பிழை இருக்க வேண்டும். பத்து லட்சம் பேர் கொண்ட சனத்தொகையில் உங்களை போன்ற படித்தவர்களை உருவாக்க முடியவில்லை. இவர்கள் இந்த நாட்டின் குடிமக்கள்'' (மாணிக்கம், 1995) இந்த அரச தலைவரின் கூற்றுக்கள், அன்றைய நிலையை கொஞ்சம் கூட்டி கூறியிருந்தாலும் அடிப்படை நிலை அப்படித்தான் இருந்தது.

1960களில் இம்மக்களிடையே ஏற்பட்ட சமூக எழுச்சி குறிப்பிடத் தக்க ஒன்றாகும். 1956இல் பண்டாரநாயக்காவின் மௌன புரட்சியின் பின்னர் சிங்கள மொழி பௌத்த மதம் என்பவை அரசியல்ரீதியில் முதன்மைப்படுத்தப்பட்டு, கிராமிய மக்களிடையே ஒரு எழுச்சி ஏற்பட்டதை போல மலையக மக்களிடையேயும் ஒரு படித்த இளைஞர் களால் ஒரு எழுச்சி உருவாக்கப்பட்டது. மலைநாட்டு நல்வாழ்வு சங்கம், மலையக இளைஞர் முன்னணி போன்ற அமைப்புகள் ஒரு உத்வேகத்தை உருவாக்கின. பின்னர் இவை, மலையக இளைஞர் முன்னணி, மலையக மக்கள் முன்னணி என அரசியல் அமைப்புகள் உருவாகவும் வழி சமைத்தன. கல்வி மாநாடுகள், இலக்கிய விழாக்கள், நாடகப் போட்டிகள் என்பன இந்த எழுச்சியை மக்கள் மத்தியிலே கொண்டு சென்றன. சுதந்திரமடைவதற்கு முன்னரும் அதற்கு பின்னரும் இடதுசாரிகளின் செல்வாக்கிலிருந்த இம்மக்கள் தங்களை ஒரு சமூக ரீதியில் பார்க்கத் தொடங்கினர். வடகிழக்கு ரீதியில் இலங்கைத் தமிழர்கள் போராட்டங்களில் தங்களை இணைத்து கொள்ளாத அல்லது கொள்ள விருப்பமில்லாத நிலையில், இவர்கள் ஒரு தனித்துவ இனத்துவ அடையாளத்தை உறுதிப்படுத்த முனைந்தனர். பாராளுமன்ற பிரதிநிதித்துவ அதிகரிப்பும் இந்த போக்கிற்கு உறுதுணையாகவிருந்தது.

இவர்கள் பலவகைகளிலும் தனிமைப்படுத்தப்பட்டிருந்தாலும் தங்களது பண்பாட்டு அம்சங்களை பேணி வந்தமையும் இவர்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக ஒத்திசைவை (Cohesivenes) ஏற்படுத்தியிருந்தது. தென்னிந்திய கிராமிய வாழ்க்கை முறையை அப்படியே தோட்டங்களில் பெயர்த்து அதை தொடர்ந்து பின்பற்றினார்கள் என்று பொதுவாக கூறப்பட்டாலும், தோட்டமுறைமைக்கேற்ப மாறுதலைடைந்த பண்புகளும் அவதானிக்கப் பட்டுள்ளன. மதவழிபாடுகள், தோட்ட தொழிலுக்கு ஏற்றவகையில் கவ்வாத்து சாமி, தொழிற்சாலையில் ரோதை முனி போன்றவையும் கொழுந்தெடுக்க ஆரம்பிக்கும் போது பொலிபோடுதல் போன்றவை இம்மாற்றங்களை எடுத்துக் காட்டுகின்றன. மாரியம்மன் வழிபாடு, தோட்ட வாழ்க்கை தொழில் முறையோடு ஒட்டியதாய் கரகம், கும்மி, கோலாட்டம் போன்ற நிகழ்வுகளோடு முறையாக கொண்டாடப்படுவதும் தீபாவளி, பொங்கல் போன்ற விழாக்களில் நாடகங்கள், கூத்துக்கள் அரங்கேற்றுவதும் பொதுவாக பின்பற்றப்பட்டு வருகின்றன. இவைகள் அனைத்தும் இந்த சமூகத்தின் தனித்தன்மையை உறுதிபடுத்துவதாகவும் அமைந்து வருகின்றது.

தற்போது இவர்கள் தங்களின் அடிப்படை உரிமைகள் குறித்து உரத்து ஒலிக்க ஆரம்பித்துள்ளனர். வீடமைப்பு கல்வி சுகாதாரம் போன்றவை இன்னும் முற்றிலும் தீர்க்கப்படாத நிலையில உரிமைகள் பற்றிய கோரிக்கைகளின் முன்வைப்பு ஒரு சமூக வளர்ச்சியின் ஒரு உயர்கட்டமாக கருதலாம். உரிமைகளில் இன்று அடிப்படையாக அமைந்திருப்பது நில உரிமை இன்மையாகும். இந்த உரிமையோடு இவர்கள் ஏனைய சமூகத்தோடு சமத்துவ நிலையில் வாழ வேண்டும் என்பதே இவர்களது அபிலாசையாக அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

# நிலவுரிமை பற்றிய ஆய்வுகள்

நிலவுரிமை என்பது தற்போது பல மட்டங்களில் பேசும் பொருளாக மாறியுள்ளது. ஏனைய துறைகளான வீட்டு வசதி, உட்கட்டமைப்பு வசதி கல்வி, சுகாதாரம் உட்பட வருமானம் உள்ளிட்ட பொருளாதார நிலை பற்றியே அதிகம் அக்கறை செலுத்தப்பட்டது. ஆனால், 1990களின் பிற்பகுதி தொடக்கம், பல்வேறு ஆய்வுகள், நிலவுரிமை குறித்து வெளிவரத் தொடங்கியுள்ளன. இவற்றை மையப்படுத்தியதே இந்த அத்தியாயம்.

இந்த வகையில் 'மலையக தொழிலாளர் வீடு-காணி-சொந்தம்?' என்ற தலைப்பில் அருட் திரு.எஸ்.கீதபொன்கலன் (1994) இல் வெளியிட்ட நூல் 1974இலிருந்து பல திட்டமிடப்பட்ட வீடமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை சுட்டிக்காட்டி, தோட்டப்புறத்தில் ஒரு சில புதிய வீடுகள் கட்டப்பட்டும், ஒரு சில வீடுகள் தரமுயர்த்தப்பட்டும் உள்ளன என்பதை பதிவு செய்துள்ளது. அரசினால் மாதிரி கிராமம் என 1991 ஐப்பசி வரை 701 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இவற்றில் ஒன்றுகூட மலையக மக்களுக்கென கிடைக்கவில்லை. இதற்கு காரணமாக, மலையகத் தொழிலாளர் தேசிய மட்டத்திலான அமைப்புகளிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டு புறம்பான நிர்வாக முறையின் கீழ் இருப்பதே என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர் வாழுமிடங்களை லயக் காம்பிராக்கள். இவற்றோடு சேர்ந்த தோட்டக்காணியும் உள்ளடங்குகின்றது. இதுவும் பிரச்சினைக்குரிய ஒன்றாகிவிட்டது. ஒரு சில தொழிலாளர் குடும்பங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்யும் காணித்துண்டுகளை தோட்ட நிர்வாகத்திற்கு கையளிக்குமாறு வற்புறுத்தப்படுகின்றனர். தோட்டங்களில் உள்ள தரிசு நிலங்களில், விவசாயம் செய்யவோ, பழ மரங்கள் நடவோ அன்றில் கால்நடை களுக்கான புல் வளர்க்கவோ அனுமதி மறுக்கப்படுகின்றது. இதே நேரத்தில் வெளியாருக்கு காணிகள் வீடு கட்டுவதற்கும் காணி பங்கீட்டிற்காகவும் பிரித்து கொடுக்கப் படுகின்றது என்பதும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மலையக மக்களின் காணியுரிமை மொனறாகலை மாவட்ட ஆய்வு முடிவுகள் (2020) என்ற மொனறாகலை மக்கள் அபிவிருத்தி அமைப்பின் ஆய்வானது மொனறாகலை மாவட்டத்தின் சில குறிப்பிட்ட தோட்டங்களின் காணிக்கான உரிமைகளை உறுதி செய்யும் நோக்கத் திற்காக செய்யப்பட்டதாக இருப்பினும் காணி உரிமைகளைப் பெற்றுக் கொள்வதிலுள்ள சிரமங்களை எடுத்துக் கூறுகின்றது. அலியாவத்தை மற்றும் மொனராகேலே ஆகிய இரண்டு தோட்டங்களை மையப் படுத்திய ஆய்வு எனினும் இந்த மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் மலையக தோட்ட மக்களின் பிரச்சினைகள் எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது. 1972ஆம் ஆண்டு காணிச் சீர்திருத்த சட்டத்தின்படி பெற்றுக் கொள்ளப்பட்ட காணிகள் தோட்ட நடவடிக்கைகள் தவிர ஏனைய நடவடிக்கைகளுக்காகப் பகிரப்பட்டன. இவ்வாறு 3,673 ஹெக்டயர் காணிகள், காணி ஆணையாளர் அலுவலகத்திற்கும், தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கும், பல்வேறு திட்டங்களுக்காகவும் கிராம விரிவாக்கத்திற்காகவும் வீட்டுத் திட்டத்திற்காகவும் பகிரப்பட்டன. இந்தத் தோட்டங்களிலும் இப்பகுதிக்கு பதிலாக கரும்பு பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு அது தோல்வியடைந்து தற்போது அவர்கள் நாட்கூலிகளாக 35 மைல்களுக்கு அப்பாலுள்ள கரும்புத் தோட்டங்க ளுக்குச் சென்று தொழில் செய்து வருகின்றனர். காணி உரிமை இல்லாததால் இவர்கள் நிரந்தர பண்ணைகள் ஆரம்பிக்க பின்னிற் கின்றனர். வங்கிக் கடன் பெற முடியாதுள்ளது. இங்குள்ள 360 பேருக்கு குடியுரிமை, ஆவணங்கள், பிறப்பு சான்றிதழ்கள், நிலத்தைப் பாவித் தமைக்கான தண்டப்பணம் செலுத்தியமைக்கான ஆவணங்கள் உள்ளன. எனினும் காணி உரித்து வழங்கப்படவில்லை. அதேநேரத்தில் 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர்ச் காணி வீதம், 50 ஏக்கர் காணி இம்மாவட்டத்தின் முப்பனை கிராம சேவகர் பிரிவில் கொடவத்தையில் அரச உத்தியோகத்தர்கள், வியாபாரிகள் போன்றவர்களுக்கும் அமைச்சர் சுமேதா ஜி.ஜெய சேனாவினால் வழங்கப்பட்டன. அதேபோல முப்பண வெளி தோட்டம், ஜயசேனக கிராமத்தில் 25 பேர்ச் காணி வீதம், 100 அரசாங்க உத்தி யோகத்தர்களுக்கு வழங்கப்பட்டது. இங்கு ஏனைய கிராமங்கள் 10 ஏக்கரில் உருவாக்கப்பட்டுள்ளது. அதேவேளை இத்தோட்டத்திற்கு அண்மையில் வாழும் 28 தமிழ் குடும்பங்களுக்கு 7 பேர்ச் காணி வீதம் காயத்திரி எனும் பெயரில் கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சட்டரீதியாக 1919இல் பிரித்தானிய ஆளுநர், கிராமவாசிகளுக்கு அரச காணிகளை பங்கிடுமாறு அரசாங்க அதிபர்களை பணித்துள்ளார். இதன்படி, கிராம மக்களுக்கு தோட்ட காணிகள் வழங்கப்பட்டு காணி அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. பின்னர் 1935 இல் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் மூலமாக தோட்டக் காணிகள் விவசாய குடியேற்றங்களை உருவாக்க முயற்சிக்கப்பட்டது. இந்நூல் இந்த இரு தோட்ட மக்களுக்கு காணி உரிமையை காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவிடமிருந்து எவ்வாறு பெற்றுக் கொள்ள முடியும் என்பதற்கான ஒரு வழிவகையை எடுத்துரைத்துள்ளது. இது மேற்கொள்ளப்பட்டதா? அதனுடைய பலாபலன்கள் என்ன, என்பது இன்னும் கேள்விக்குறியாகவே அமைந்துள்ளன.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் நன்மைக்கான ஒரு விவசாய புரட்சி என்ற நூலில் எஸ்.விஜயசந்திரன், 2006இல் நடுப்பகுதியில் கிராமிய முறையிலான தோட்ட வீடமைப்பு திட்டங்களின் ஊடாக 7 பேர்ச் காணி தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு, சுய வீடமைப்பு திட்டங்கள் ஊக்குவிக்கப்பட்டன என குறிப்பிட்டுள்ளார். நிர்வாகம் வழங்கும் கடனை அறவிட்டதன் பின்னர், வீடுகள், தொழிலாளர்களுக்கு முழு உரிமையுடையதாகும். ஏறக்குறைய 10% சதவீதமான குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்றுள்ளன. இதனைத் தவிர தோட்ட தொழிலாளர்கள் காணி உடைமையற்ற வீட்டுரிமை அற்ற மனித குழுக்களாகவே வாழ்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடற்றர், நிலமற்றவர், வலுவற்றவர் - மலையக மக்களின் நிலம் மற்றும் வீட்டுரிமை என்ற தனது நூலில் பி.பி.சிவப்பிரகாசம் 2012இல் இவ்விரு நிலவுரிமைகளின் சட்டரீதியான அந்தஸ்து பற்றி விரிவாக விளக்கியுள்ளார். இலங்கையின், இன்றைய 1978ஆம் அரசியல் அமைப்பில், அடிப்படை உரிமைகள், மறைமுகமாகவே நிலம்-குடியிறுப்பை தெரிவு செய்வதற்கான உரிமையை அளிக்கும் விதிகளை கொண்டுள்ளன என குறிப்பிட்டுள்ளார். இவர், சர்வதேச சட்டங்களை பொறுத்தவரை மனித உரிமைகள் பிரகடனம் (Universal Declaration of Human Rights - UDHR) சர்வதேச பொருளாதார சமூக கலாசார உரிமைகள் (Inernational Covenant of Economic Social and Cultural Rights - ICESCR) என்பவை போதிய வாழ்க்கைக்கான தனித்துவ பாதுகாப்பிற்கான உரிமைகளையும், சொத்துரிமைக்கான உரிமையையும் உத்தரவாதம் செய்கின்றன என்பதை சுட்டிக்காட்டியுள்ளார். பெருந் தோட்ட மக்களின் நிலம் மற்றும் வீட்டுரிமை பற்றிய விடயம், மிக அண்மைக் காலத்திலேயே பேசப்பட்டு வந்துள்ளது. இவ்விடயம் சலுகை அடிப்படையிலேயே அணுகப்பட்டுள்ளது. ஆனால் உரிமை மற்றும் உடைமை அடிப்படையில் அணுகப்பட்டதற்கான ஆதாரங்கள் அருமையாகவே காணப்படுகின்றன என இந்நூல் மேலும் கூறுகின்றது.

இப்பிரச்சினைகளை இனங்காணவும் இவ்வுரிமைகள் மீது தாக்கத்தை கொண்டுள்ள பொறிமுறை, காரணிகள், வகிபாகங்கள் என்பவற்றை என்பவற்றை இனங்கண்டு தீர்விற்கான உபாயங்களை தேடவும் இந்நூல் முயற்சிக்கின்றது. தோட்ட மக்களுக்கும், கிராம மக்களுக்கும் இடையில், ஏற்படும் பிரச்சினைகளுக்கும், உள்ளூர் அரசியலில் இனப்பதற்றத்திற்கும் முரண்பாடுகளுக்கும் ஒரு கருவியாக நிலம் மற்றும் வீட்டுப் பிரச்சினைகள் அமைந்துள்ளன. நிலங்கள், 1935ஆம் ஆண்டின காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின்படி நிலமற்றவர்களுக்கு நிலத்தை பகிர்ந்தளிக்கும் அதிகாரத்தை காணி ஆணையாளருக்கு வழங்கியுள்ளது. 1895இல் முன்னர் குடியேறியவர் களுக்கே இத்தகு நிலம் வழங்கப்பட வழிசெய்யப்பட்டுள்ளது. 1979இல் காணி வழங்கல் (சிறப்பு விதிகள்) சட்டத்தின்படி ஜனாதிபதி நிலமற்ற, அதேவேளை நிலத்தை அபிவிருத்தி செய்வதற்காக ஆற்றல் மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறனைக் கொண்ட எந்தவொரு பிரஜைக்கும் விவசாய அல்லது பெருந்தோட்ட காணியை வழங்கலாம் என்பதையும் பெண்களுக்கு நிலவுரிமையை பெற்றுக் கொள்வதில் உள்ள சட்டரீதியான தடைகளும் (1935) சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பிரஜாவுரிமை பறிக்கப்பட்டதன் பின்னர், இம்மக்கள் இந்நாட்டின் பிரஜாவுரிமை இல்லாத காரணத்தினால் நிலப்பங்கீட்டின்போது ஓரங்கட்டப்பட்டனர். தோட்டத் தொழிலாளர்கள் மட்டுமன்றி, தோட்டத்திற்கு வெளியே வாழ்ந்த இந்திய வம்சாவளி மக்களையும் இது பாதித்தது. நாடற்ற நிலை முற்றிலும் நீக்கப்படும் வரை இந்நிலை நீடித்தது.

1972இல் தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்ட போது இம்மக்களுக்கு நன்மை பயக்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், எதிர்பார்ப்பிற்கு மாறாக, இம்மக்கள் பல தோட்டங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இத்தகைய பல வெளியேற்றங்களை இந்நூல் பதிவு செய்கிறது. தேசிய விவசாய பயிர் மற்றும் குடியேற்ற அதிகார சபை (National Agriculturl Development Settlement Authority - NADSA) அதிகார சபையின் நடவடிக்கைகளின்படி பலர் தோட்டங்களிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். உதாரணத்திற்கு கண்டி மாவட்டத்தின் கலஹா குருப் வாரியகல தோட்டம், நில்லம்பை தோட்டம், குரக்கல தோட்டம், தம்பிலிகல தோட்டம், கேகாலை மாவட்ட அட்டுகொட (கோலிந்தா) லவுக்கே கெவிலிப்பிட்டிய நாரங்கல ஆகிய தோட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. 1972ஆம் ஆண்டு காணிச் சீர்திருத்த சட்டத்தின் விளைவாக தனியார் தோட்டங்களின் எண்ணிக்கை அதிகரித்தன. 50 ஏக்கருக்கு மேற்பட்டவை அரசாங்கம் சுவீகரிக்க, அதற்கு குறைவானவை தனியாருக்கு கொடுக்கப்பட்டன. இங்குள்ள தொழிலாளர் பல மனித உரிமை மீறல்களுக்கு உட்படுகின்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1992இல் தோட்டங்கள் தனியார் மயப்படுத்தியதன் பின்னர், ஏற்பட்ட மாற்றங்களை இந்நூல் விரிவாக விளக்குகின்றது. பெருந் தோட்ட வீடமைப்பு சமூக நலநிதியம் (Plantation Housing Social Welfare Trust - PHSWT) ஊடாக வீடமைப்பு திட்டங்கள், அரச நிதியிலிருந்து பெறப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. 1994இல் லயன் அறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் உரிமை ஆவணம் எனக் கூறி, ஒரு தாளினை மக்கள் மத்தியில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பகிர்ந்தது, இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனது, முகப்பு படம் இங்கு இணைக்கப் பட்டுள்ளது. 1998இல் சந்திரசேகரன் அமைச்சராக இருந்த காலத்தில், தனி வீடுகள் கட்டப்படும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் உரிமைகள் பயனாளிகளுக்கு மாற்றப்படுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படவில்லை. லயன் வீடுகளின் எண்ணிக்கை குறைய தனி வீடுகளின் எண்ணிக்கை அதிகரித்த போக்கு அவதானிக்கப் பட்டது. இதனை அட்டவணை 3.1 எடுத்துக் காட்டுகின்றது.



1994ஆம் ஆண்டு இ.தொ.கா மற்றும் ஐ.தே.க குடியிருப்புகள் சொந்தம் என வழங்கிய பத்திரத்தின் முகப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை : 3.1**

வீடுகளின் வகைகளில் ஏற்பட்ட மாற்றம் (1996-2009)

| | 1996/97 | 2003 | 2009 |
|---|---|---|---|
| லயன் வீடு | 83.2 | 63.4 | 56.1 |
| தனி/ இரட்டை | 10.2 | 28% | 33.8 |
| ஏனையவை | 6.6 | 18.5 | 10.1 |
| மொத்தம் | 100.0 | 100.0 | 100.0 |

மூலம் - சிவப்பிரகாசம் (2012)

நிலஉரிமைக்கான போராட்டங்கள் பல வரலாற்றில் இடம் பெற்றமையை குறிப்பிடும் இந்நூலாசிரியர் இந்நிலைமைக்கு பல காரணிகளையும் கூறியுள்ளார். சமகால பிரச்சினைகளாக பின்வருவன குறிப்பிடப் பட்டுள்ளன.

1. கடன் அடிப்படையில் கட்டப்பட்ட வீடுகளது, கடன் மீள செலுத்தி முடிக்கப்பட்டதன் பின்னரும் எவ்வித உரிமை ஆவணமும் வழங்கப்படவில்லை. (Land Permit, Land Grant, Land deed, Land Title) இவை ஒன்றும் வழங்கப்படாமை எவ்வித உத்தரவாதமும் வழங்கப்படவில்லை.

2. கடன் பெற்றவர்களிடம் எவ்வித ஆவணமோ, தகவல்களோ இல்லை. அதைவிட கடன் பற்றிய விபரங்கள் என்பவற்றை இவர்கள் அறிந்திருக்கவில்லை. ஆய்வின் அடிப்படையில், 87% மானவர்கள், நில வீட்டுரிமை சம்பந்தமான ஆவணங்களின் முக்கியத்துவம் குறித்த ஒரு தெளிவற்ற புரிந்துணர்வை கொண்டுள்ளனர். லயன் அல்லது தனி வீடுகள் தங்களுக்கு சொந்தமானவை என்றே நம்புகின்றனர். அத்தோடு இதனை பெற்றுக் கொள்வதில் நுவரெலியா மாவட்டத்தில் தொழிற்சங்க அரசியல் தலைமைத்துவத்தில் தங்கியுள்ள நிலையில் ஏனைய மாவட்டங்களில் தங்களின் முயற்சியினாலேயே வென்றெடுக்க முடியும் என நம்புகின்றனர். 72% வீதத்தினர் லயங்களில் வாழ விரும்பாத நிலையில், 28%மானவர்களே தொடர்ந்தும் வாழ விரும்புகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மகாவலி அபிவிருத்தித் திட்டம் காரணமாக பல தோட்டங்கள் மூடப்பட்டன. கண்டி பள்ளேகலை, குருதெனியா, மாபேரித்தன்ன, தோட்டங்களும், பூண்டுலோயா நகரை அண்மித்த பல தோட்டங் களும், ஹபுகஸ்தலாவை பகுதியில் சில தோட்டங்களும் மூடப் பட்டன. இங்கு வாழ்ந்தவர்கள் குடியகன்று வேறு தோட்டங்களுக்கு நகர்த்தப்பட்டனர். கிராம மக்களுக்கு நிலம் வழங்கப்பட்டபோது ஒரு சில தோட்டத் தொழிலாளர்களுக்கே நிலம் வழங்கப்பட்டது.

பல தோட்டங்களில், நிலம் பயிர் செய்யப்படாது. கைவிடப்பட்ட நிலையில் இருந்துள்ளன. நிலவள பாதுகாப்பு, பெருந்தெரு அபிவிருத்தி திட்டங்களில் உள்வாங்கப்பட்டமையால் 74,000 ஹெக்டயர் காணி பயிர் செய்யப்படாமல் போயிற்று. இந்நிலப்பரப்பு மாற்றுச் செயற்பாடு களுக்கு பயன்படுத்தப்பட வேண்டும். அல்லது சிறு விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற அரசியல் கோரிக்கை வலுவடைந்துள்ளது. இதன்படி, கண்டி மாவட்டத்தின், கடதாசித் தோட்டம் (லிட்டில் வெளி) கலஹா அம்பலமான நிலங்கள் மாற்று செயற்பாடு அல்லது குடியேற்ற திட்டங்களுக்குள் உள்வாங்கப்பட்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது வரவு செலவு திட்ட முன்மொழிவுகளின்படி பயிரிடப்படாத தோட்ட நிலங்கள் அரசினால் கையேற்கப்படும். மலையகத்தில் 37,000 ஹெக்டயர் நிலங்கள், சிறு தேயிலை பயிர்ச் செய்கையாளர்களுக்கு 2 ஏக்கர் வீதம், 30 வருடங்களுக்கு வழங்கப்படும். (2012 வரவு செலவுத் திட்டம்) எனினும், இங்கு பெருந்தோட்ட தொழிலாளர்களின் நிலவுரிமை பற்றி குறிப்பிடப்படவில்லை. தொழிலாளர்கள் காய்கறித் தோட்டங்கள் செய்வதில் வீட்டின் விரிவாக்கல் கால்நடை வளர்ப்பு ஆகியவற்றுக்கு நிலத்தை பயன்படுத்த, நிர்வாகம் மறுத்துள்ளதோடு இதை மீறியவர்கள் வேலை நீக்கம் உள்ளிட்ட வேறு சட்ட நடவடிக்கைகளுக்குட்பட்டுள்ளனர். இதேவேளை தோட்ட நிலங்களில் வெளியார் குடியேற்றம் முரண்பாடுகளுக்கும், வன்செயல்களுக்கும் வித்திடுகின்றது.

மேல் கொத்மலை நீர்த்தேக்கம் உருவானபோது பாதிக்கப்பட்ட வர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டன. எனினும், அவர்களின் நில மற்றும் வாழ்வாதார பிரச்சினைகள் இன்னும் தீரவில்லை. நுவரெலியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டத்தின் இராணுவ முகாம்கள் திறக்கப்பட்டமையும் சுற்று வட்டத்தில் அதன் விரிவாக்கத்திற்கும் தோட்ட நிலங்கள் பறிபோக வழிவகுத்துள்ளது. 5000 ஏக்கர் நிலங்கள் பயிரிடப்படாத வெற்று நிலங்களாக இனங்காணப்பட்டுள்ளது. இது, தோட்ட மக்களை மாத்திரமன்றி, அனைத்து மக்களையும் பாதிக்கின்றவொன்றாகும்.

இரண்டு சம்பவ கற்கைகள், நிலப்பிரச்சினை உருவானதை விரிவாக விளக்குகின்றன. 1. கண்டி, ஹந்தானை 2. இம்பூல்பிட்டிய கல்லோயா பிரிவுகள் பற்றியது இவையாகும். கண்டி மாவட்டத்தில் ஹந்தானை தோட்டம், 1500 ஏக்கர் பரப்பினையும், 350 தொழிலாளர் களையும் கொண்டது. இத்தோட்டத்தில் தேசிய வீடமைப்பு திட்டத்திற்காக 850 ஏக்கரும், அரசியல்வாதி ஒருவருக்கு 80 ஏக்கரும், காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவின் வர்த்தக நோக்கிற்காக 50 ஏக்கர், தனியார் மருத்துவமனை ஒன்றுக்காக 30 ஏக்கரும், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையால் விற்கப்பட்டது. 50 ஏக்கர் இவ்வாறு இன்னும் பல செயற்பாடுகளுக்காக நிலம் சுவீகரிக்கப்பட்டு, தற்போது 1500 ஏக்கரில் வெறும் 78 ஏக்கர் நிலமே எஞ்சியுள்ளது. 1000 மக்கள் தொகையை கொண்ட இத்தோட்டத்தில் 350 தொழிலாளர் தங்களுக்கு வேலையின்றி அண்டிய நகரிலே பல்வேறு தொழில்களிலே ஈடுபட்டுள் ளனர். இவர்கள் தங்களுக்கு வசிப்பிடத்திற்கும் வாழ்வாதாரத்திற்கும் நிலத்தை கோருகின்றனர்.

இம்புல்பிட்டிய, கல்லோயா பிரிவின் 450 ஏக்கரில் 250 குடும்பங்கள் வாழ்கின்றனர். தேயிலை பயிர்ச்செய்கை 40 ஏக்கரிலேயே செய்யப்படுகிறது. சிலர் கற்குழிகளில் வேலை செய்கின்றனர். 1987 நாவலப்பிட்டி நகர அபிவிருத்தியுடன், ஆரம்பமாகி, காடு விஸ்தரிப்பு உட்பட மற்றும் நகர வர்த்தகர்களுக்கும், கிராம மக்களுக்கும் பல்வேறு காரணங்களுக்காக காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவினால் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் கல்லோயா வெற்று நில அபிவிருத்திக்காக விவசாயிகள் அமைப்பின் ஊடாக நிலவுரிமைப் போராட்டம் ஒன்று 2011இல் தொடங்கியுள்ளது.

இந்நூல் இறுதியாக தோட்டங்களில் வாழுகின்ற 200,000 குடும்பங்களுக்கு ஒவ்வொன்றிற்கும் 20 பேர்ச் வீதம் வழங்குவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10,117 ஹெக்டயர் தேவைப்படுமென்றும், தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் 74,000 ஹெக்டயர் பயிரிடப்படாததாகவும், 37,000 ஹெக்டயர் வெற்று நிலமாகவும் காணப்படுகின்றது. எனவே வீடமைப்பிற்கு தேவைப்படும் 10,000 ஹெக்டயரை சில நிபந்தனைகளுடன் உரிமையுடன் சொந்தமாக வழங்கலாம். அத்தோடு உற்பத்தி செயற்பாடுகளுக்காக 2 ஏக்கர் நிலம் வழங்கப்பட வேண்டும். இதனை நடைமுறைப்படுத்த சுயாதீன நில கமிஷன் ஒன்று நிறுவப்பட வேண்டும் எனவும் விதந்துரைந்துள்ளது.

கீதபொன்கலனின் மாற்றம் காணும் மலையக சமூகம் (2014) என்ற நூலில் முதலிரண்டு அத்தியாயங்களும் காணி உரிமை, வீட்டுரிமை பற்றியதாகும். 1989ஆம் ஆண்டு காணி சம்பந்தமான ஜனாதிபதி பணியகத்தின் செயற்பாடுகள் பற்றி இவர் விரிவாக விளக்கியுள்ளார். காணியற்ற பின்வரும் மூன்று பிரிவினரை இப்பணியகம் அடையாளம் கண்டுள்ளது.

1. விவசாயக் குடும்பங்கள்
2. தோட்டத் தொழிலாளர்
3. அரசாங்கத் தொழிலாளர்

இவர்களுக்கு, விவசாயம், குடியிருப்புத் தேவைகள், மற்றும் குடிசைக் கைத்தொழில் நோக்கங்களுக்காக நிலம் பிரித்து கொடுக்கப்படும். 10 இலட்சம் ஏக்கர் நிலம் பிரித்து கொடுப்பதற்காக இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. விண்ணப்பங்கள் கோரப்பட்டு, சுவர்ணபூமி திட்டத்தின் கீழ் காணிகளை வழங்கப்படும். இப்பணியகம், இதுவரை 7 இலட்சம் ஏக்கர் காணிகள் பகிர்விற்கு தகுதியானவர்களை அடையாளம் கண்டுள்ளது. 1994 மார்ச் இறுதி வரை, 337,500 ஏக்கர் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. அரச காணிகள் இவ்வாறு கட்டளைச் சட்டத்தின் கீழ், பதிவு செய்யப்பட்டவர்களுக்கு 1994ஆம் ஆண்டு இறுதிக்குள் 120,000 சுவர்ணபூமி உறுதிகளை வழங்குதல் அரசாங்கத்தின் நோக்கமாகும். இப்பணியகம் பெருந்தோட்ட காணிகளில் சிறு நில உடைமையாளர்களுக்கு 65,000 ஏக்கர் பிரித்து கொடுக்கப்பட்டன. ஆனால், இதில் தோட்டத் தொழிலாளர்கள் உள்ளடக்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவக் கற்கையுடனான சான்றுகளுடன் 3 மாவட்டங்களின் அனுபவங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

1. **களுத்துறை மாவட்டம் :** தெபுவன அரப்பலா கந்த தோட்டத்தில் 15 தொழிலாளர் குடும்பங்கள் நீண்டகாலமாக பயிர்ச் செய்கை செய்து வந்தவேளையில் அந்நிலத்தில் 2012 ஜனவரி முதல் தோட்ட நிர்வாகம் பலவந்தமாக செம்பனை பயிர்ச் செய்கையை மேற்கொண்டுள்ளது.

2. **கண்டி மாவட்டம்:** நாவலப்பிட்டி பாரண்டா மற்றும் போகில் ஆகிய தோட்டங்களில் 100 ஏக்கர் தேயிலைக் காணி, வெளி யாருக்கு விற்கப்பட்டுள்ளது. 206 குடும்பங்களைச் சேர்ந்த 2060 பேர் தோட்டத்தை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது. நீதிமன்ற தீர்ப்புகள் தொழிலாளர்களுக்கு வீட்டுரிமை இல்லை. வேலை செய்யும் வரைதான் வீடு சொந்தம் என்பதாகவே அமைந்திருந்தது. இது மக்களின் இருப்பை கேள்வி குறியாக்கி யுள்ளது.

3. **நுவரெலியா மாவட்டம் :** நுவரெலியா மாநாகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பம்பரகலை 38 மற்றும் ஏக்கர் ஸ்கிராப் 44 ஏக்கர் காணியை அரசாங்கம் சுவீகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

ஹொரணை, பர்த் தோட்டத்தில் கைத்தொழில் பேட்டை அமைக்குமுக மாக தேசிய முதலீட்டு சபை 1999இல்-1660 ஏக்கர் நிலத்தை பொறுப் பேற்று கொண்டது. இங்கு வாழ்ந்த 188 தொழிலாளர்களுக்கு 15 பேர்ச் காணி வழங்கப்பட்டு வீடமைப்பு திட்டம் அமைக்கப்பட்டது. இதன்படி குடும்பத்திற்கு 660,000 ரூபாவை ஒதுக்கியிருந்தது. பணம், வங்கியில் வைப்பு செய்யப்பட்டுள்ளது. 2012 வரை, 14 வீடுகளின் நிர்மாணம் நிறைவு செய்யப்படவில்லை. கைத்தொழில் பேட்டையும் தொடங்கப்படவில்லை.

வீட்டுரிமை பற்றிய நீண்ட அத்தியாயத்தில், பல அம்சங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பில், காணிப் பற்றி விசேடமாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் சர்வதேச உடன்பாடுகளில், இந்த உரிமை தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார சமூக, பண்பாட்டு, உரிமைகள் பற்றிய சர்வதேச உடன் பாட்டில், வீட்டினைப் பெறுவதற்கான உரிமை குறிப்பிடப்பட்டுள்ளது. தோட்ட குடியிருப்புகள் தோட்ட முகாமைத்துவத்தின் கீழ் இருப்பதால் உள்ளூராட்சி தாபனங்களோ, ஏனைய அரச நிறுவனங்களோ இவர்களது பிர்ச்சினையில் ஈடுபடவில்லை. 1985-2005 வரை, வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் உதவியுடன் சில திட்டங்கள், நடைமுறைப்படுத்தப் பட்டன. 1994ஆம் ஆண்டு, தோட்ட வீடமைப்பிற்காக பிரதி அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டதன் பின்னர் 2005 வரை 7 பேர்ச் காணியில் 30,000 வீடுகள் கட்டப்பட்டன. இந்த வீடுகளுக்கு பெற்றுக் கொள்ளப் பட்ட கடனை வட்டியுடன் திரும்ப செலுத்தியும் காணிக்கான உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை.

லயன் வீடுகளை தரம் உயர்த்தும் வேலைத்திட்டம் (Upgrading) 1992 வரை மேற்கொள்ளப்பட்டன. அதற்கு பின்னரேயே புதிய, வீடுகள் கட்டப்பட்டன. நெதர்லாந்து, நோர்வே ஆகிய வெளிநாட்டு உதவியுடன் சுயஉதவி வீடமைப்பு திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. செயற்றிட்டத்தின் கீழ் (ஜனசெவன) கடன் அடிப்படையில், அடிமட்ட, நடுத்தர மட்ட வருமானம் ஈட்டுவோரை மையப்படுத்திய ஒன்றாக இத்திட்டம் திகழ்ந்தது. இருப்பினும் இது தோட்டத் தொழிலாளர்களை சென்றடையவில்லை. இதற்கு அடிப்படைக் காரணமாக பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தைக் (பெ.ம.அ.நி) சுட்டிக் காட்டுகிறார். இந்திய அரசாங்கத்தின் வீடமைப்பு திட்டத்தின் கீழ் 4000 வீடுகளை தேசிய வீடமைப்பு அதிகார சபை (NHDA) கட்டுவதற்கு பெ.ம.அ.நி (PHDT) எதிர்ப்பு தெரிவித்தது. இந்த நிதியத்தின் மூலமுமே தோட்டங் களில் வீடுகள் கட்டப்பட வேண்டும் என்ற நிலைப்பாடே இதற்கு காரணமாகக் கூறப்பட்டது.

சுயவீடமைப்பு திட்டம், 20 பேர்ச் காணியில் கடன்பத்திரம் ஒன்றின் மூலம் கடன் வழங்கி, வீடு கட்டும் முயற்சியை பெருந்தோட்ட வீடமைப்பு, சமூக, நலன் பேணல் நிதியம் (Plantation Housing Social Welfare Trust) மேற்கொண்டது. இது முறையாக நிறைவேற்றப்படவில்லை. வீடமைப்பிற்கு நிலம் வழங்குவதற்கு கம்பனிகள் எதிர்ப்பு காட்டியமை யினால் மாடி வீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. சில கற்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றுகளின்படி கஹவத்தை, பெர்றனுவ தோட்டத்தில 45 மாதிரி வீடுகள், பிரான்ஸ் நாட்டு குடும்பத்தினர் 7 பேர்ச் நிலத்தில் கட்டியுள்ளனர். இந்த வீடுகளுக்கு காணி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ஒரு குடும்பம் ரூபா 300/= இனை செலுத்தி வருகின்றார்கள். (வருடம் குறிப்பிடப்படவில்லை) மேலும், வீடு கட்டும் முயற்சிகள் பல தோல்வியடைந்தமை பற்றியும் சுட்டிக் காட்டப்பட்டள்ளன. 2003இல் தற்காலிக குடிசைகளில் வாழ்ந்த 4000 குடும்பங்களுக்கு வீடு கட்டுவதற்காக தலா 30,000 ரூபா வீதம் மக்கள் வங்கியினூடாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்காக சேமிப்பு புத்தகம் வழங்கப்பட்டது. நீதிமன்ற தீர்ப்பு வழங்கப்பட்ட நிலையிலும் இது தொழிற்சங்க வாதிகளின் செயற்பாட்டால் இந்நிதியை பெற முடியாதுள்ளளது. 2007ஆம் ஆண்டு இடம் பெற்ற தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட 20 குடும்பங்களுக்கு அப்பேபியே என்ற பிரான்ஸிய அரச சார்பற்ற நிறுவனத்தினால், ரூபா 21 மில்லியன் செலவில் வீடுகள் கட்டப்பட்டன. எல்பிட்டிய பெருந்தோட்ட கூட்டுத் தாபனம் இதற்கு உதவியுள்ளது. 2004இல் மிலன்னேத்தாரி ஐ.நா. விசேட அறிக்கையாளர் இம்மக்களின் தனி குடியிறுப்புகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்துள்ளார். வீடமைப்பை மையப்படுத்திய இந்த அதிகாரத்தில் வீட்டுரிமையை பெற்றுக் கொள்வதில் உள்ள சிரமங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இராமசாமி ரமேஸ் மற்றும் சுகுமாரன் விஜயகுமார் (2022) ஆகியோரால் தொகுக்கப்பட்ட வழிகாட்டல் ஆவணமான ''மலையக மக்களின் காணி உரிமையின் வென்றெடுத்தல்'' என்பது கவனித்திற்குரியவொன்றாகும். மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள், வீட்டுத் திட்டங்களை அறிமுகப்படுத்தினரே தவிர காணி உரிமைகளை வழங்குவதில் விருப்பங்காட்டவில்லை. இலங்கையில் காணி என்பது இனத்துவ அரசியலோடு மிக நெருங்கிய தொடர்புக் கொண்டுள்ளது. 7 பேர்ச், காணியுடன் வீடமைக்கப்பட்டிருந்தாலும் எல்கடுவ கம்பனியால் மாத்தளையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு 10 பேர்ச் காணியில் சகல வசதிகளுடன் வீட்டுத்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. (Jun 2022) கொட்டக்கலை ஸ்டோனிகிளிப் தோட்டத்தில், 20 பேர்ச் காணியில், 47 வீடுகள் கொண்ட மாதிரி வீட்டுத் திட்டமொன்று நடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைப்படுத்தப்பட்டுள்ளது. மலையக மக்கள் நிலத்தை அடிப்படையாகக் கொண்டு தமது இருப்பினை உறுதி செய்வதில் தொடர்ந்தும் சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். இன்று காணி உரிமை சமூக மயப்படுத்தப் பட்டுள்ளதோடு அரசியல் விடயங்களிலும் இது முக்கியத்துவம் பெற்றுள்ளது. காணி உரிமை, வீட்டுரிமைக்கான காணியை கோரல், வாழ்வாதாரத்திற்கான காணி, அரசியல் அடையாளத்திற்கான காணி என்ற அடிப்படையில் இப்போது பிரச்சாரம் இடம்பெறுகிறது. நிறுவன மயப்படுத்தப்பட்ட பாதுகாப்புடன் கூடியவகையில், வெளியாள் உற்பத்தி முறைமைக்கு காணிகளை நீண்டகால குத்தகைக்கு வழங்க முடியும். நீண்டகாலத்தில். தோட்டத் தொழிலாளர்கள் சிறு உடைமை யாளர்களாக நிலைமாற்றம் செய்வது இதன் மூலம் சாத்தியமாகும் எனக் கூறும் இவ் ஆவணம் மலையக மக்களுக்கு காணியுரிமை யினை பெற்றுக் கொள்வதற்கு சாத்தியமான பொறிமுறைகளை அடையாளங்காணுதல், அதில் காணப்படும் சட்டரீதியான தடைகளை நீங்குவதற்கான மற்றும் முன்மொழிவுகளை பரிந்துரை செய்யும் நோக்கம் கொண்டது.

அபிவிருத்தி தேவைகளுக்காக, பெருந்தோட்டங்களை அபகரித்தல், பல்வேறு உதாரணங்களோடு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. நட்சா திட்டத்தின்கீழ் (NADSA) பூண்டுலோய பகுதியில், கருணகல் தோட்டம் (Choisy Estate) மூடப்பட்டு, சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு, 1976இல் தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டனர். நட்சா திட்டத்தில் குடியுரிமை உள்ளவர்களுக்கு மாத்திரமே காணி வழங்கப்படும் எனும் தீர்மானம் நடைமுறைப்பட்டது. ஆனால் நடைமுறையில் இது பின்பற்றப்படவில்லை. ஒரு சில தமிழர்களுக்கே இதில் காணிகள் வழங்கப்பட்டன. SPA-Centre for Coordnating Secretarit for Plantaiton Areas - அமைப்பின் அவதானிப்பின்படி, 1980 மே 5 வரைக்கும் வழங்கப்பட்ட 827 காணித்துண்டுகளில் 20 துண்டுகள் மாத்திரமே தமிழர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அமைச்சரவை தீர்மானத்தின்படி (2018 ஜூன் 28) எல்கடுவ பெருந்தோட்டத்திற்கு சொந்தமான 3388.69 ஏக்கர் காணி அரச தனியார் பங்குடைமையின் கீழ் 26 வருடத்திற்கு குத்தகைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டது. இதே போல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.பெ.கூ (SLSPC)க்கு சொந்தமான 2785.37 ஏக்கர் மற்றும் ஜனவசம (JEDB)க்கு சொந்தமான 7916.35 ஏக்கர் காணியும் குத்தகைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டது. செப்டம்பர் 2021இல் நாவலப்பிட்டி கலகொட வத்தை மற்றும் வட்டவளை மவுன்ஜீன் தோட்டத்திற்கு சொந்தமான 811 ஏக்கர் காணிகள் இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு (Farms Pride Pvt Ltd and Crysbro Group) 30 ஆண்டுகால குத்தகைக்கு வழங்க அனுமதி வழங்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தெல்தொட்டை மற்றும் கிரேட்வெளி தோட்டங்களுக்கு சொந்த மான 350 ஏக்கர் காணி Hilside Agro Pvt Ltdக்கு வழங்கப்பட்டது. 25-07-2022 ஆம் திகதி யாவருக்கும் காணி எனும் திட்டத்தை பிரதமர் ஆரம்பித்து, அதன்படி கொழும்பு, குருணாகல், புத்தளம் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இத்திட்டம், கலபொட, மவுன்ஜீன் போன்ற இடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டன. என்றாலும் இத்திட்டம் தொடரவில்லை.

**சட்டரீதியான அம்சங்கள்**

1935ஆம் ஆண்டு 19ஆம் இலக்கம் கொண்ட காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டமானது (Land Development Ordniance - LDO) சிங்களவர் நலன் சார்ந்தே இயற்றப்பட்டது. இதன்போது மலையகத் தமிழர்கள் முற்றாக புறக்கணிக்கப்பட்டனர். இதனை, இடது சாரித் தலைவர்கள் எதிர்த்து குரல் கொடுத்தனர். 1972 நிலச் சீர்த்திருத்தச் சட்டத்தின்படி பாதிக்கப்பட்ட மலையகத் தமிழர்கள் பற்றி எடுத்துரைக்கின்றது. 50 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களை சுவீகரித்தபோது தோட்ட உத்தியோ கத்தர்களின் குடியிறுப்பு, தொழிலாளர்களின் லயன் அறைகளுக்கென 1/8 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்ட வேண்டும் என கூறப்பட்டது. தனியா ருக்கு சொந்தம் எனினும், உத்தியோகத்தர் தொழிலாளர்கள் வசிக்கும் உரிமையை உறுதி செய்வதாக இது அமைந்துள்ளது. ஆனால் இதனை உறுதிப்படுத்த தொடர்ந்து அரசாங்கங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை.

தோட்ட உத்தியோகங்கள் புதிய தொழில்கள் பெரும்பான்மை யினருக்கே வழங்கப்பட்டன. இவை வன்முறைகள் உருவாவதற்கு வழிவகுத்தது. தோட்டங்களுக்கான முழு உரிமையும் (Absolute

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ownership) காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவிற்கு இருந்தாலும், அவற்றை அரச நிறுவனங்களான அ.பெ.கூ மற்றும் ஜனவசம (JEDB or SPC)க்கு மாற்றியபடியால், அந்த உரிமை மாற்றத்தினால் அது இந்த இரு நிறுவனங்களுக்கும் அவ்வுரிமை பாரப்படுத்தப்பட்டது. எனவே காணி சீர்த்திருத்த ஆணைக்குழு நிலத்தை உரிமை மாற்றம் செய்யும் போது இந்த இரு நிறுவனங்களின் அனுமதியும் பெற்றுக் கொள்ள வேண்டும். பின்னர் 1992இல் இவைகள் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டமையினால் கம்பனிகளின் பணிப்பாளர் சபையின் சம்மதமும், பொன் பங்குடமையாளரின் சம்மதமும் பெறவேண்டும் என கூறப்பட்டது. தற்போதைய தோட்ட காணிகளின் உரிமை நிலையை அட்டவணை 3.1 விளக்குகின்றது.

**அட்டவணை 3.2**

**தற்போதைய காணிகளின் உரிமை நிலை (ஹெக்டயர் - 2018)**

| இல | விபரம் | காணியின் அளவு | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | தனியார் கம்பனி | 70752 | (35.0) |
| 2 | அரச நிறுவனங்கள் (JEDB or SPC) | 9033 | (4.5) |
| 3 | சிற்றுடைமைகள் | 121,697 | (59.5) |
| | மொத்தம் | 200,482 | (100.0) |

மூலம் : தோட்டக் கைத்தொழில் அமைச்சு 2018

அ.பெ.கூட்டுத்தாபன தோட்டங்கள் சில கா.சீ.ஆணைக்குழுவிற்கு சொந்தம் ஆகும். ஜனவசம தோட்டங்கள், கா.சீ.ஆணைக்குழுவிற்கு சொந்தமானவை அல்ல. ஆகவே காணிகள் தொடர்பில் கா.சீ.ஆணைக் குழு மற்றும் அ.பெ.கூட்டுத்தாபனம் மற்றும் ஜனவசம் தொடர்பு படுகின்றது.

1889ஆம் ஆண்டின் தோட்டத் தொழிலாளர் (இந்தியர்கள்) கட்டளைச் சட்டத்திற்கு 1941ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சீர்த்திருத்தத்தின்படி குடியிருப்புகள் பற்றிய ஏற்பாடு செய்யப்பட்டது. இக்குடியிருப்புகள், தொழிலாளர்களுக்கு சொந்தமானவை அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கட்டிடத்தை அபிவிருத்தி செய்ய அவர்களுக்கு உரிமை இல்லை. 1971 - 2ஆம் இலக்க தோட்ட வீடுகள் பற்றிய விசேட ஏற்பாடுகள் சட்டத்தின்படி தொழில் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் வீட்டை விட்டு வெளியேறுமாறு நீதிமன்ற தீர்ப்பு வரும்வரையிலும், தொடர்ந்து அந்த வீட்டில் வசிப்பதற்கு உரித்துடையவர்கள் என 1994இல் ஐக்கிய தேசிய கட்சியால் (U.N.P) லயன் அறைகளின் உரிமையை தோட்டத் தொழிலாளர்களுக்கு மாற்றுவதற்கு ஒரு சான்றிதழ் வழங்கப்பட்டது. ஆனால் அது உரிமையை சட்டபூர்வமாக உறுதிப்படுத்துவதாக இருக்கவில்லை.

காணி உரிமை வழங்குதல், சம்பந்தமாக பல தேர்தல் வாக்குறுதிகள் வழங்கப்பட்டன (2005 - மகிந்த சிந்தனை). 2015இல் பிரதமரின் பாராளுமன்றத்தின் பொருளாதார கொள்கைபடி 10 வருடங்களுக்கு மேல் வசிப்பவர்களுக்கு ஒரு சிறிய காணித் துண்டும் வீடொன்றும் வழங்கப்படும் எனக் கூறப்பட்டதோடு, இது 2017இல் வரவு செலவு திட்டத்திலும் உள்வாங்கப்பட்டது.

2006-2015 காலப்பகுதியை உள்ளடக்கிய பெருந்தோட்ட மக்களின் சமூக அபிவிருத்திக்கான தேசிய நடவடிக்கை திட்டத்தில் (National Plan of Action for the Social Development of the Plan of Action) வீடமைப்பு மற்றும் காணி தொடர்பாக தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் பெருந்தோட்ட பிராந்தியத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தில் காணியுரிமை தொடர்பாக நேரடியாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. 2019ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ச "Vistaas of Prosperity and Spendour" என்ற கொள்கைத் திட்டத்திலும், காணியுரிமை சம்பந்தமாக எதுவும் குறிப்பிடப்படவில்லை.

சட்டரீதியான தலையீடுகள் என்ற தலைப்பில், பிராந்திய பெருந்தோட்டங்களின் கீழுள்ள காணிகள் சட்டத்தின் அடிப்படையில் அரச காணிகளா? என்ற வினா எழுப்பப்பட்டுள்ளது. அரச காணிகள் என எடுத்துரைத்து பின்னர், குத்தகைக்காலம் முடியும் முன்னர் மீளப்பெறுவது கடினமான காரியம் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் ஒப்பந்தத்தின் ஏற்பாடுகள் மீறப்படுமாயின், அல்லது ஒப்பந்தத்தை முடிவிற்கு கொண்டு வருவதன் மூலம், அல்லது பொது நோக்கத்திற்கு அவசியப்படுகின்ற காணியை மீளப் பெற முடியும். எனினும், காணி சீர்த்திருத்த ஆணைக்குழு (LRC) தனது காணிகளை அரச கூட்டுத்தாபனங்களுக்கு முழுமையாக ஒப்படைப்பு செய்துள்ளமை யினால், அவைகளிடமிருந்து காணிகளை மீளப்பெற முடியாது என்பது சட்டநிலைமையாகும். இதனை மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் தீர்ப்புகளில் காணலாம்.

வேலை நிறுத்தம் செய்யப்பட்ட ஒருவர், தொடர்ந்து தனது வரிசை வீட்டில் வசித்ததால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அவர்கள் தண்டிக் கப்பட்டுள்ளனர். பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நிறுவனமோ, அல்லது அதன் கீழுள்ள தோட்ட வீடமைப்பு கூட்டுறவு சங்கங்களோ, காணி உரித்துடன் வீட்டுரிமை வழங்கக்கூடிய சட்ட அந்தஸ்து கொண் டவை அல்ல. 1941ஆம் ஆண்டு 5ஆம் இலக்க தோட்ட தொழிலாளர் கட்டளைச் சட்டத்தின் பின் பெருந்தோட்டங்களில் வாழும் குடும்ப மொன்று ஒரு லயன் அறையை பெருந்தோட்ட உரிமையாளர்கள் வழங்க வேண்டும் என்ற சட்ட ஏற்பாடு கவனிக்கத்தக்கது. தேசிய வீடமைப்பு அதிகார சபை, தனி வீடுகள், கடன் அடிப்படையில் கட்டி அவற்றிற்கான கடனை மீள செலுத்திய பின்னரும், காணி உரித்தாவணம் வழங்கப்படவில்லை. இலங்கையின் பிரஜையாக இருந்தும், அத்தோடு சட்டங்கள் ஊடாக, பிரஜைகளுக்கான காணியுரிமையை உறுதி செய்வதற்கான ஏற்பாடுகள் இருந்தும் அவ்வுரிமையை இம்மக்களுக்கு உறுதிப்படுத்துவதில் சிக்கல்கள் இருக்கின்ற நிலையில் அவற்றை களைவதற்கு அரசு இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சம்பவ கற்கையாக நாவலப்பிட்டி போகில் தோட்டத்தில் இடம் பெற்றுள்ள நிலைமை விபரிக்கப்பட்டுள்ளது. LRCயிடமிருந்து 100 ஏக்கர் நிலத்தை இல்லப் பெரும குடும்பம் பெற்றுள்ளது. இங்கு 100 லயன் வீடு களும், டிரஸ்ட் நிறுவனத்தால் கட்டப்பட்ட 25 வீடுகளும் உள்ளன. 760 பேரை உள்ளடக்கிய 115 குடும்பங்கள் உள்ளன. இவர்கள், பரம்பரையாக 150 வருடங்கள் இங்கேயே வாழ்கின்றனர். நீதிமன்ற தீர்ப்பின்படி, இல்லம் பெரும் தோட்டத்தை வாங்கியதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர், இங்கு வசிப்பவர்களை வெளியேற்ற முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டது. இந்த வழக்கில், தோட்டத் தொழிலாளர்கள் சம்பந்தப் பட்டிருக்கவில்லை. இந்த தீர்ப்பை எதிர்த்து மக்கள் வழக்கு தொடர்ந்தனர். 2012இல் ஆரம்பித்த இந்த வழக்கு 2019இல் தீர்ப்பு வழங்கப்பட்டது. தோட்டத்தை வாங்கியவருக்கு சார்பாக எனினும் பாதிக்கப்பட்டவர்கள் வெளியேறாத காரணத்தினால் ஜனவசம குடும்பத் திற்கு மாதாந்தம் 500,000 ரூபா செலுத்தப்படுவதாக அறிவித்தது. இதற்கிடையில் வழக்கு தாக்கல் செய்த 86 குடும்பங்களுக்கு அரச தொழில் முயற்சியாண்மை அமைச்சால் ஹரிதபூமி கொடைகள் வழங்கப்பட்டன. 2020 மார்ச் மாத விசாரணையின் பின்னர் இல்லப் பெருமான குடும்பத்தினருக்கு போகில் தோட்டத்தில் வேறு 100 ஏக்கர் வழங்க ஜனவசமிற்கு 2 மாதங்கள் வழங்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு இன்றும் தொடர்கிறது. இம் மக்களுக்கு அறிவிக்காமல், நீதிமன்ற தீர்ப்புகள் வழங்கப்பட்டமை அநீதியானதென மக்கள் மனதில் ஆழமான உணர்வு தோன்றியுள்ளது. காணிகள் மீது தொழிலாளர்களுக்கு ஹரிதபூமி மூலம் ஒரு உரித்தாண்மை இருந்தாலும் அது நிபந்தனையுடன் கூடியதாகவும், தெளிவற்றதாகவும் உள்ளது.

கலாநிதி ரமேஸின் (2019) மேற்கொண்ட ஆய்வானது 2015இற்கு பிந்திய நல்லாட்சி காலத்தில் நுவரெலியா மாவட்டத்தில் நிர்மாணிக்கப் பட்ட வீடமைப்பு மற்றும் காணிப்பகிர்வு நிகழ்ச்சித் திட்டம் பற்றிய தாகும். இவ்வாய்வில் காணி உரிமை குறித்த முக்கியமான சில விடயங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. உரித்துக்களுக்கு ஆவணங்கள் வழங்கப்பட்டிருந்தாலும் தெளிவான உரிமத்திற்காக (Clear Title Deed) இன்னும் காத்திருக்கின்றனர். நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் நில அளவைப்படம் (Survey Plan) சரியாக இல்லாதிருப்பது, சிக்கல்களை தோற்றுவிக்கும். பொருத்தமான காணிகளை வழங்குவதில் பெருந் தோட்ட கம்பனிகளின் நிலைப்பாடு பிரச்சினை தோற்றுவிக்கின்றது. 7 பேர்ச் காணி என்றிருந்தாலும் சரியான நில அளவை இன்மையானது பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளது. காணி உரிமையை தனிவீடுகள் பெற்றுக் கொள்வதில் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத் திற்கு உடன்பாடில்லை என்பது பரவலான கருத்தாக காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி சமூக அபிவிருத்தி நிலையம் வெளியிட்ட புதிதாக கட்டப் பட்ட வீடுகளுக்கான உரிமையை பெற்றுக் கொள்ளுதல் என்ற ஆய்வு (2015) தோட்டங்களில் பல வகைகளில் கட்டப்பட்ட வீடுகளில் தோட்ட நிர்வாகம் மற்றும் வீடமைப்பு அதிகாரசபை மூலமாக கடன் பெற்று கட்டப்பட்டு முழுக்கவும் திருப்பி செலுத்தியுள்ள 3900 பேர் களின் விபரம் பற்றியதாகும். 2015 இற்கு பின்னர் புதிதாக கட்டப்பட்ட வீடுகளுக்கு உரித்துக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் கடன் பெற்று முழுமையாக அவைகளை மீள் செலுத்தியவர்கள் கண்டி (930), நுவரெலியா (697), பதுளை (317), காலி (643), கேகாலை (528), ஹட்டன் (301) என்றவாறு காணப்படுகின்றனர். இவர்களின் வீடுகள் 77% மானவை 7 பேர்ச் காணியைக் கொண்டவையாகும். 19% மானவை 7 பேர்ச்சிற்கு குறைவானதாகும். அத்துடன் 4%மானவை 7 பேர்ச்சிற்கு அதிகமாகவும் காணப்படுகின்றன. ஏறக்குறைய 99%மானவர்களின் கடன் சம்பளத்திலேயிருந்து கழிக்கப்பட்டுள்ளன என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், 88%மானவர்கள் தங்களது கடனை 15 வருடங்களில் செலுத்தியுள்ளனர். ஏனையவர்கள் 15 வருடங்களுக்கு அதிகமான காலப்பகுதியில் மீள செலுத்தியுள்ளனர். ஒரு சிலருக்கு சில ஆவணங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவை வீட்டுடைமைக்கு உரித்தானவை அல்ல. வாய்மூலமான உறுதி மொழிகளே வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வின் பரிந்துரைகளாக பின்வருவன குறிப்பிடப்பட்டுள்ளன. (1) எல்லோருக்கும் 550 சதுர அடி வீடும், 7 பேர்ச் காணியும் உறுதி செய்யப்பட வேண்டும். (2) ஒவ்வொரு வீட்டிற்கும் நில அளவை படம் வரையப்பட வேண்டும். உரிமங்களை (deeds) வழங்கும் அதிகாரம் பெற்ற காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு, அமைச்சரவை அனுமதியுடன் செயற்பாடு விரைவுபடுத்தப்பட வேண்டும். கடன் கொடுத்து அதன் மூலம் வீட்டைக் கட்டும் செயற்பாடு வெளிப்படைத் தன்மையுள்ளதாகவும் வகைகூறும் தன்மையுடையதாகவும் இருத்தல் வேண்டும். எனவே, இதனை நடைமுறைப்படுத்துகின்ற மனிதவள அபிவிருத்தி அதிகார சபை மீளமைப்பு செய்யப்பட வேண்டும். தோட்ட நிர்வாகம் மூலமாக மீளளிக்கப்பட்ட கடன் தொகை, அமைச்சிற்கு செலுத்தப்பட்டதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது குறித்து விசாரணை செய்ய வேண்டும். ஏனெனில் இத்தொகை அமைச்சின் நிதியிலிருந்தே வழங்கப்பட்டமையாகும்.

சுதந்திரத்திற்கு பின்னர் தேசிய மயமாக்கப்பட்ட நிலங்கள், கிராமத்தவர்களுக்கு பகிரப்பட்டதால் அவர்களது வாழ்வில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டது. ஆனால் தோட்ட சமுதாயம், இதில் உள்ளடக்கப்படவில்லை எனக் கூறும் பேராசிரியர் சந்திரபோஸ், ''இலங்கையின் பெருந்தோட்ட சமூகத்திற்கான வீடமைப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்கான'' பிரேரணை ஒன்றில், 1972ஆம், 1975ஆம் ஆண்டு காணிச் சீர்த்திருத்தத்தின் பின்னர், அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்கு 35.10%மான நிலமும் ஜனவசமவிற்கு 34.17%மான நிலமும் தனிப்பட்டவர்களுக்கு 11.13% நிலமும் வழங்கப் பட்டன. மீதமுள்ள 20% நிலம் பல்வேறு அரச நிறுவனங்களுக்க பல்வேறு தேவைகளுக்கு வழங்கப்பட்டன. மேலும், மக்களின் சுகநலனை கவனிக்க 1992இல் நிதியம் ஒன்றை நிறுவின. பின்னர் இது 2002இல் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நிதியம் என பெயர் மாற்றப்பட்டது. இதன் மூலம் கடன் அடிப்படையில் கட்டப்பட்ட வீடுகள், கடன் திருப்பி செலுத்திய பின்னர் உரிமை பத்திரம் வழங்கப்படும் என உறுதி கூறப்பட்டாலும் அவை வழங்கப்படவில்லை. வீடுகளுக்கு உரிமை வழங்குவதற்காக சில பிரேரணைகள் முன்வைக்கப் பட்டுள்ளன. அவையாவன; (1) தோட்ட தொழிலாளர் வீடமைப்பு கூட்டுறவு சங்கங்கள், (2) மகிந்த ராஜபக்ஷவின் புதிய ஸ்ரீலங்காவை நோக்கிய எதிர்கால தொலைநோக்கு என்ற மகிந்த சிந்தன (3) இந்திய வீடமைப்பு திட்டத்தின் மூலம் 4000 வீடுகள் என்பனவாகும். இந்த பிரேரணைகளின் அடைவுகள் முக்கியத்துவமற்றவையாகக் காணப் பட்டன. தற்போது, 238,095 குடும்பங்கள் அல்லது 1 மில்லியன் சனத்தொகையே தோட்டங்களில் வசிக்கின்றனர். இவர்களின் பதிவு செய்யப்பட்ட குடும்பங்கள் 168,595 ஆகும். ஏனையவர்கள் தோட்டங்களுக்கு வெளியே வாழுகின்றனர். வீடுகளுக்கோ அல்லது வாழ்வாதாரத்திற்கு காணி வழங்கப்படும்போது தோட்டங்களை சார்ந்தவர்கள் என அடையாளப்படுத்தப்பட்ட 238,098 குடும்பங் களையும் கவனத்தில் கொள்ளவேண்டும். 2021 வரை 45,000 வீடுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டப்பட்டுள்ளன. இதனை கணக்கிலெடுத்தால், ஏறக்குறைய 193,095 வீடுகள் தேவைப்படும். இவருடைய கணக்கின்படி 180,000 குடும்பங் களுக்கு 27 பேர்ச் நிலம் என்ற அடிப்படையில், 12000 ஹெக்டயர் நிலமே தேவைப்படும். (1 ஹெக்டரியல், 395 2 பேர்ச்) 1 ஹெக்டயரில் 15 குடும்பங்கள், 27 பேர்ச் என்ற அடிப்படையில் அமர்த்தப்படலாம். ஆகவே, 180,000 பேருக்கு தேவைப்படுவது 12000 ஹெக்டயர் ஆகும். தற்போது 35,000 ஹெக்டயர் நிலம் தோட்டப்புறங்களில் கைவிடப்பட்ட நிலையில் பயிரிடப்படாத நிலையில் காணப்படுகின்றது. மொத்தத்தில் 10.9% சதவீதமான தோட்ட தேயிலை நிலங்களே வீடமைப்பிற்கு தேவைப்படும் என இவர் எடுத்துரைக்கிறார். அத்தோடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க டிசம்பர் 2022இல் நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி கூட்டத்தில் கூறியவாறு கம்பனிகளுக்கு கொடுக்கப்பட்ட நீண்டகால குத்தகையை, கைவிடுமாறு அரசியல் தலைவர்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பது இவரின் சிபாரிசாகும்.

பெ. முத்துலிங்கத்தின் ''மலையகம் - நிலைமாற்றத்தினை நோக்கி (2023) என்ற தொகுப்பு நூலில் அடங்கியுள்ள சில கட்டுரைகள் காணி மற்றும் வீட்டுரிமை பற்றியதாகும். 1989இலிருந்து 30 ஆண்டுகளாக பத்திரிகைகளில் எழுதப்பட்ட இக்கட்டுரைகள் வீடு மற்றும் காணி குறித்த உரிமை பிரச்சினைகளை எடுத்துக் காட்டியுள்ளன. கிராமிய தோட்ட ஒருங்கிணைப்பு என்ற செயற்றிட்டத்தின் மூலம் தோட்டங்களில் காணப்படுகின்ற வசதிகளை எல்லைப்புற கிராம மக்கள் அனுபவித்தல் மற்றும் தோட்டங்கள் விளைச்சல் குறைவானவை என்று அடையாளப் படுத்தப்பட்ட 'C' வகுப்பு நிலங்களில் கிராமத்தவரை குடியேற்றுதல், இறுதியில் தோட்ட மக்களுக்கு எதிராக அமைந்துவிடும் என்பதை வசிப்பிடமற்ற தொழிலாளர்களாக அமைந்துள்ள சக்திமிக்க கிராம மக்களையும் வசிப்பிட தொழிலாளர்களாக அமைந்துள்ள சக்தியற்ற தோட்ட மக்களையும் ஒப்பிட்டு, கிராம - தோட்ட ஒன்றிணைவு தோட்ட மக்களுக்கு பாதகமாக அமைந்துவிடும் என எடுத்துக்காட்டி, தோட்ட மக்கள் சக்தியுள்ளவர்களாக மாறுவதற்கு தோட்ட நிர்வாகத்தி லிருந்து விடுபட்டவர்களாய் கிராம முறை உருவாக்கப்பட்டு அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியுள்ளவர்களாக மாற்றப்பட வேண்டும். 1992இல் அப்புத்தளை, பிட்ராத்தமலை தோட்டத்தில் காணிப் பகிர்வு முயற்சிக்கப்பட்டபோது, தொழிலாளர்களின் எதிர்ப்பாக அம்முயற்சி கைவிடப்பட்டமை பதிவு செய்யப்பட்டுள்ளது. கிராமிய மக்களுக்கு 'மயானபூமி' வழங்கப்படாமை காரணமாக சிங்கள தலைவரிகளின் எதிர்ப்பும் கிராமிய தோட்ட நிலவுரிமை பிரச்சினைக்கு உதாரணமாக காட்டப்பட்டுள்ளது. 1992இல் தோட்டங்கள் மறுசீரமைத்தல் என்ற அடிப்படையில் 6 பேர்ச் காணியில் வீடு கட்டல் முறை பின்பற்றப்பட்டது. சொந்த நிதியில் வீடுகளை கட்டிக் கொண்டாலும் அவற்றிற்கு உரிமை பாராட்ட முடியாது. சுவர்ணபூமி, ஜயபூமி என்ற வீடமைப்பு திட்டங்கள், காமினி திசா நாயக்க பிரேமதாச, சந்திரிகா போன்றவர்களால் நடைமுறைப்படுத்தப் பட்டதோடு ராஜித சேனரட்டன 'ரத்னபூமி' என்ற திட்டம் (1998) அறிமுகப்படுத்தப்பட்டபோது பிரதேச சபைகளுக்கு 20 பேர்ச், நகர சபைகளுக்கு 10 பேர்ச் மாநகரசபைகளுக்கு 5 பேர்ச் என வரையறைக்கப் பட்டபோது, தோட்ட மக்களுக்கு இது குறித்து ஒன்றும் குறிப்பிடப்பட வில்லை. வீட்டுரிமையோடு இணைந்த ஒன்றாக வீடுகளின் அமைப்பும் காணப்படுகின்றது. பி.சந்திரசேகரன் அறிமுகப் படுத்திய தனிவீட்டுத் திட்டம் அமுலாகி கொண்டு வரும் வேளையில் ஆறுமுகம் தொண்டமானின் மாடி வீட்டுத் திட்டம் நிலப் பற்றாக்குறை காரணமாக அறிமுகப்படுத்தப் பட்டு, பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் அது கைவிடப்பட்டது. மாடி வீட்டுத் திட்டத்தின் பிரதான குறைபாடாக காணப்பட்டது. யாதெனில் அதன் பரப்பளவும் அதனை உரிமை மாற்றம் செய்வதில் காணப்படும் சிக்கல் நிலையு மாகும். இதன்போது விரைவாக கட்டி முடிக்கப் பட வேண்டும் என அறிமுகப்படுத்தப்பட்டு பொருத்து வீடுகள் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டும். இந்த முறைமை வட பகுதியில் அறிமுகப்படுத்த முனைந்தபோது பலத்த


பி.சந்திரசேகரன்


ஆறுமுகம் தொண்டமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்ப்புக் காட்டப்பட்டது. மலையகப் பகுதிகளில் இதனை அறிமுகப்படுத்த பலத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அது வெற்றியளிக்கவில்லை. 1987இல் யாவருக்கும் புகலிடம் என்ற கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டவேளை, தோட்டப்புற வீடுகளும் குடியிருப்பாளருக்கு உரிமையாக்கப்பட வேண்டும் என்பது வலுப்பெற ஆரம்பித்தது. சுயவீடமைப்பு திட்ட அடிப்படையில் பெருந்தோட்ட கூட்டுத்தாபனம், 10 பேர்ச் காணி, 30 வருட குத்தகைக்கு வழங்கி, 20,000 ரூபா கடனை 8% வட்டியில் வழங்கி, 15 வருடகாலத்தில் மீள் செலுத்த வேண்டும் என கூறப்பட்டது. ஆனால், இத்திட்டம், நடைமுறைப்படுத்தப்பட்டதாக பதிவு செய்யப்படவில்லை. இறுதியாக கோட்டாபய ஜனாதிபதியாகிய 2020 குறைந்த மாடி வீட்டுத் திட்டம் முன்மொழியப்பட்டது. ஆனால் இது நடைமுறைக்குட்படுத்தப் படவில்லை.

இந்த ஆவணங்களிலிருந்து இந்த தொழிலாளர்களுக்கு வீட்டுரிமையும் காணியுரிமையும் மறுக்கப்பட்டமை, தெளிவாக விளங்குகின்றது. நாட்டினது பல்வேறு நிலப் பங்கீட்டுத் திட்டங்களில் இந்த மக்கள் கொள்கை ரீதியாகவும் சட்டரீதியாகவும் விலக்கி வைக்கப்பட்டமை எடுத்துக் கட்டப்பட்டுள்ளன. லயத்து வீடுகள் வரையறுக்கப்பட்ட வகையில் தொழிலாளர்களாக இருக்கும் வரையும் சொந்தம் கொண்டாடலாம். இவர்களுக்கு பல்வேறு காலகட்டங்களில் உரிமைப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தாலும் அவற்றின் சட்ட ரீதியான செல்லுபடித்தன்மை கேள்விக்குரியதாகவே இருந்துள்ளது. நிலம் அரசுக்கு சொந்தம் என்ற நிலையில், காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழு பொறுப்பேற்ற அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஜனவசம போன்றவற்றிற்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டு பின்னர் இந்த நிறுவனங்களிடமிருந்து பிராந்திய தனியார் கம்பனிகளுக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டமையால், தோட்டங்களின் முழுமையான உரிமை (Absolute Ownership) யாரிடம் என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# நிலவுரிமை பற்றிய மக்களின் பார்வை

அத்தியாயம் மூன்று காணி உரிமை பற்றிய தற்போதைய நிலையை வெளிவந்துள்ள அறிக்கைகள், நூல்கள் போன்றவற்றில் பதிவு செய்யப் பட்டவற்றை மையப்படுத்தியவொன்றாக அமைந்தது. இவ்வத்தி யாயத்தில் நிலவுரிமை சம்பந்தமாக மக்களின் கருத்துக்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை எடுத்துக் கூறுகின்றது. இதற்காக 2023ஆம் ஆண்டு ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மாதங்களில் மலையக மாவட்டங்கள் அனைத்திற்கும் களவிஜயம் மேற்கொள்ளப்பட்டு குவிவுமையக் கலந்துரையாடல் (Focus Group Discussion) முறையை பின்பற்றி தகவல்கள் திரட்டப்பட்டன. நுவரெலியா, பதுளை, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை மற்றும் மாத்தறை ஆகிய எட்டு மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட சிலரோடு, நிலவுரிமை விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது. கலந்துரையாடலில் பங்குக் கொண்டவர்களின் எண்ணிக்கையானது நேரம், காலநிலை என்பவற்றின் தாக்கங்களுக்குட்பட்டமையால் சில இடங்களில், ஒரு சிலராக அமைய சில இடங்களில் பங்குப்பற்றியவர்கள் 20இற்கு மேற்பட்டவர்களும் கலந்து கொண்டனர். ஒவ்வொரு மாவட்டத்திலே யேயும் நிலப் பிரச்சினைகளின் தன்மை, அவற்றை எதிர்கொண்ட முறைமை வித்தியாசமானவையாக அமைந்திருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கலந்துரையாடல்கள் சில குறிப்பிட்ட விடயங்கள் பற்றியதாகவே அமைந்திருந்தது. முதலாவது இதுவரை நிர்மாணிக்கப்பட்ட வீடுகளுக்கு வழங்கப்பட்ட உரிமங்களின் செல்லுபடியாகும் தன்மை, அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்புடையதா? என்பதை பற்றியதாகும். இரண்டாவது வீடுகளுக்காக வழங்கப்படுவது 7 பேர்ச் காணி என்ற கொள்கை அடிப்படையில் என்பதால் வாழ்வாதாரத்திற்காக, 20 பேர்ச் காணி வழங்க வேண்டும் எனும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இது ஏற்படுத்தும் விளைவுகள் பற்றியதாகும். இது பயிரிடப்படாத நிலங்களிலிருந்தா? இவற்றை குத்தகை அடிப்படையிலா, அல்லது உரித்துடனா வழங்கப்பட வேண்டும். இது தொழிலாள குடும்பங்களின் தேவைகளை பூர்த்தி செய்யுமா? என்பவையே ஆராய்ச்சிக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன. மூன்றாவதாக தற்போது நடைமுறைப்படுத்தப்படும், வருமான பங்கீட்டு முறைமை அல்லது வெளிவாரி உற்பத்தி முறை பற்றியதாகும். இது எந்தளவிற்கு ஏற்புடையதாக அமைந்துள்ளது என்பதுவே கலந்துரை யாடப்பட்டது. நான்காவதாக சிறு உடமையாளர்களாக இவர்கள் மாறுவது அல்லது மாற்றுவதென்பதாகும். இதனோடு, நிலவுரிமை, அல்லது நிலப்பங்கீடு பற்றிய விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

## 1. நுவரெலியா மாவட்டம் - மஸ்கெலியா

நுவரெலியா மாவட்டத்தின் மஸ்கெலியா எனும் இடத்தில் 05.04.2023ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில் ஏறக்குறைய எட்டுபேர் பங்குபற்றினர். இவர்களில் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் சட்டத்தரணி ஒருவரும் கலந்து கொண்டனர். வழங்கப்பட்டு வருகின்ற காணி உரிமங்கள் (Deeds) பற்றி பலவிதமான சந்தேகங்கள் தெரிவிக்கப்பட்டதோடு சில இடங் களில் இவை காணி பதிவாளர் காரியாலயத்தில் பதிவு செய்யப்பட்ட தாகவும் கூறப்பட்டது. பல இடங்களில் அனுமதிபெறாது நிர்மாணிக்கப் பட்ட வீடுகள், நீதிமன்ற தீர்ப்புகளின்படி இடித்தொழிக்கப்பட்டுள்ளன. காணிகளை நிர்வாகத்தின் அனுமதியின்றி சொந்தமாக்கிக் கொண்ட வர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். தேசிய வீடமைப்பு அதிகார சபை நிர்மாணித்துள்ள வீடுகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. பல தனி வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றிற்கான உரிமங்கள் பெற இவர்கள் தகுதியுள்ளனர். சில தோட்டங்களில் வெளிவாரி உற்பத்தி முறைமை, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது இதன் வெற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்வி பற்றி தீர்க்கமாக எதுவும் கூற முடியாத நிலை காணப்படுகிறது. வீட்டிற்கான 7 பேர்ச் காணியுடன் 20 பேர்ச் காணி வழங்கப்பட வேண்டும். வழங்கப்படும் முறைமை தோட்டத்திற்கு தோட்டம் மாறு பட்டதாக அமையலாம்.

**நுவரெலியா மாவட்டம் - இராகலை**

நுவரெலியா மாவட்டத்தின் இராகலை எனும் இடத்தில் 06.04.2023 கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் மொத்தமாக பத்து பேர் பங்குபற்றினர். இவர்களில் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், தொழிற் சங்க பிரதிநிதிகள், ஆசிரியர்கள், பெண் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இங்கு பிரதானமாக கலந்துரையாடப்பட்டன. விடயம் வெளிவாரி உற்பத்தி முறைமையாகும். மகாஊவா தோட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட இம்முறையானது பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளது. இதற்கு பலவித எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்ட போதும் நிர்வாகம் தொடர்ந்தும் இதனை நடைமுறைப்படுத்தியுள்ளது. இதற்காக நிலங்கள் குத்தகை அடிப்படையில் மொத்தமாகவே வழங்கப்பட்டுள்ளது. கலந்துரையாடலுக்குப் பின்னர் தோட்டத்தை பார்ப்பதற்காக சென்றபோது அவை கைவிடப்பட்ட நிலையில் பராமரிப்பின்றி காணப்பட்டன. 2003ஆம் ஆண்டில் கோணபிட்டிய, குட்வூட் தோட்டத்தில் 2 ஏக்கர் வீதம் கிராமத்தவர்களுக்கு வழங்கப்பட்டு உரித்து வழங்கப் பட்டுள்ளது. சில தோட்டங்களில், தனி வீடுகள் கட்டப்பட்டுள்ளன. ஆனால் உரித்துகள் வழங்கப்படவில்லை. இது குறித்த விடயங்கள் குறிப்புரை ஒன்றில் இங்கு சேர்க்கப்பட்டுள்ளது.

**குறிப்புரை 1**

**மஹா ஊவ (Maha Uva) தோட்டம்**

நுவரெலியா மாவட்டத்தின் வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள மஹா ஊவ தோட்டம் மொத்தமாக 342.25 ஹெக்டேயர் நிலப்பரப்பை கொண்டது. இதில் இரண்டாவது பிரிவு 84.5 ஹெக்டேயரும், மூன்றாவது பிரிவு 61 ஹெக்டேயரும், தொழிற் சாலைப் பிரிவு 99.25 ஹெக்டேயரும், டேம் பிரிவு 97.5 ஹெக்டேயரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பரப்பும் அடங்கும். 1972 முதல் 1992 வரை மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையால் (JEDB) நிர்வகிக்கப்பட்ட இத்தோட்டம் 1992ஆம் ஆண்டு முதல் மத்துரட்ட பெருந்தோட்ட கம்பனியால் நிர்வகிக்கப்படுகின்றது.

2015ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 04ஆம் திகதி முதல் இத்தோட்டத்தின் தேயிலைச் செடிகள் தொழிலாளர்களுக்கு பராமரிப்புக்கென வழங்கப்பட்டது. பெரும்பாலும் 1500 செடிகளே வழங்கப்பட்டன. ஒரு சிலருக்கு அதற்கு அதிகமாகவும் தேயிலைச் செடிகள் வழங்கப்பட்டன. பத்தாயிரம் செடிகளை பெற்றுக் கொண்ட சிலரும் உள்ளடங்குவர். இதன்போது இரண்டாம் பிரிவில் 105 தொழிலாளர்களும், மூன்றாம் பிரிவில் 102 தொழிலாளர்களும், தொழிற்சாலை பிரிவில் 130 தொழிலாளர்களும், டேம் பிரிவில் 112 தொழிலாளர்களுமாக மொத்தம் 424 தொழிலாளர்கள் பணிபுரிந்தனர். இவர்களில் 364 பேருக்கு காணித்துண்டுகள் அல்லது தேயிலைச் செடிகள் பராமரிப்பிற்கென வழங்கப்பட்டதோடு அவர்களுக்கு தோட்டத்தில் வேலை வழங்குதல் நிறுத்தப்பட்டது. இதனால் தொழி லாளர்கள் நிரந்தர வருமானத்தை இழந்ததோடு ஊழியர் சேமலாப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதி (EFP), ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி (ETF) மற்றும் சேவைக்கால கொடுப்பனவு என்பவற்றையும் இழந்தனர்.

இதேவேளை 2015ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தொழிற்சாலை மூடப்பட்டது. இதே ஆண்டு தோட்டம் மூடப்பட்டபோது இருந்த 424 தொழிலாளர்களில் 364 பேருக்கு ஆரம்பத்தில் பராமரிப்பிற்கு தேயிலைச் செடிகள் வழங்கப்பட்டன. மிகுதியாக இருந்த 60 தொழிலாளர்களில் 21 பேர் தொழில் நியாய சபையில் வழக்கு தொடுக்க 03 பேர் ஓய்வு பெற்றனர். 36 பேர் (டேம் பிரிவில் 25 பேரும், தொழிற்சாலை பிரிவில் 11 பேரும்) மட்டும் தொடர்ந்தும் பராமரிப்பிற்கான காணியை பெறாது தோட்டத்தில் வழமை போல் வேலை செய்தனர்.

2016ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பயோ புட்ஸ் தனியார் நிறுவனம் (Bio Foods (Pvt) Ltd) பத்து வருட ஒப்பந்தத்தில் தோட்டத்தையும் தொழிற்சாலையையும் பொறுப்பெடுத்தது. தொழிலாளர்கள் பறித்து கொடுக்கும் கொழுந்திற்கு கிலோ ஒன்றுக்கு 40/= ரூபா வழங்கப்பட்டது. 2013ஆம் ஆண்டில் மேலும் 33 தொழிலாளர்களுக்கு தேயிலைச் செடிகள் பராமரிப்பிற்காக பிரித்து கொடுக்கப்பட்டது. மிகுதியாக இருந்த மூன்று தொழிலாளர்களுக்கு எவ்வித காணி துண்டுகளும் வழங்கப்படவில்லை. 2022 செப்டெம்பர் மாதத்தில் பயோ நிறுவனம் ஒப்பந்தத்திலிருந்து வெளியேறியதை அடுத்து, மத்துரட்ட பெருந்தோட்ட கம்பனி மீண்டும் தோட்டத்தின் நிருவாக பொறுப்பை தன்வசம் கொண்டு வந்தது. இருப்பினும் தொழிலாளர்களுக்கு நிரந்தர தொழில் வாய்ப்பு வழங்கப்படவில்லை. உரம் மருந்து பாவனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதோடு சகல உள்ளீடுகளுக்கான செலவினத்தையும், முழு பராமரிப்பு செலவினத்தையும் தொழி லாளர்களே பொறுப்பெடுக்க வேண்டும். இதே காலப்பகுதியில் 20 பேர் தங்கள் பொறுப்பிலிருந்த தேயிலைச் செடிகளை வேறு நபர்களுக்கு குத்தகைக்கு கொடுத்துள்ளதோடு ஒரு சிலர் விலைக்கு விற்றும் உள்ளனர்.

இந்த கால பகுதியில் குறிப்பாக தோட்டம் தொழிலாளர்களின் பராமரிப்பில் விடப்பட்ட பிறகு கீழே குறிப்பிட்டுள்ளவைப் போன்ற பல்வேறு விதமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தொழிலாளர்கள் நிரந்தர தொழிலையும் வருமானத்தையும் இழந்துள்ளனர்.
- ஊதியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மற்றும் சேவைகால பணம் என்பவற்றையும் இழந்துள்ளனர்.
- இப்போது தோட்டத்தில் நலன்புரிச் சேவைகள் கிடைப்பதில்லை.
- தோட்டத்திலிருந்து தோட்ட வைத்திய அதிகாரியின் சேவை இப்போது கிடைப்பதில்லை.
- தோட்ட மருந்தகத்தை உடைத்து விட்டனர்.
- அவசர தேவைகளுக்காக தோட்டத்தின் வாகன வசதி கிடைப்பதில்லை.
- தோட்டத்துரை உட்பட ஐந்து பேர் மட்டுமே நிரந்தர உத்தியோகத்தர்களாக உள்ளனர்.
- தற்பொழுது கொழுந்தை நிறுப்பதற்காக நீண்ட தூரம் நடக்க வேண்டியுள்ளது.
- நீண்ட நேரத்தை காணியை பராமரிப்பதற்காக எவ்வித வருமானமுமின்றி செலவிட வேண்டியுள்ளது.
- சாப்பாட்டிற்கு மற்றும் தேநீருக்காக நேரத்தை ஒதுக்க முடியாதுள்ளது.
- கொழுந்திற்கான கொடுப்பனவு (இன்று கிலோவிற்கு 70/=) மிக குறைவாக உள்ளது.
- முன்னர் வாகனம் இல்லாவிட்டாலும் போக்குவரத்து கொடுப்பனவு வழங்கப்பட்டது. இன்று அதுவும் கிடைப்பதில்லை.
- இப்பொழுது தொழிற்சங்க செயற்பாடுகள் முடங்கி விட்டன.
- ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்கப்பட்ட மாதாந்த தேயிலைத் தூள் இப்பொழுது கொடுக்கப்படுவதில்லை.
- தோட்டத்தில் மரணம் சம்பவித்தால் குழி வெட்ட தோட்ட நிருவாகம் வழங்கிய 4 தொழிலாளர்கள் இப்பொழுது வழங்கப்படுவதில்லை.
- மரணத்தின் போது தோட்ட நிருவாகம் வழங்கிய பெட்டிக்கான காசு இப்போது கிடைப்பதில்லை.
- பாடசாலை மாணவர் இடைவிலகல்கள் இப்பொழுது அதிகரித்துள்ளன.

- சிவம் பிரபாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுவரெலியா மாவட்டம் - பொகவந்தலாவை, கொட்டியாகலை தோட்டங்கள்

நுவரெலியா மாவட்டத்தின் பொகவந்தலாவையில் கொட்டியாகலை தோட்டத்தில் 21.04.2013இல் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் ஒரு விசேட சந்திப்பாக அமைந்தது. இந்த தோட்டத்தில் வழங்கப்பட்ட காணி உரிமங்கள், கம்பளை காணி பதிவு காரியாலயத்தில் பதிவு செய்யப்பட்டதாக கூறப்பட்டமையால், இதனை உறுதிப்படுத்திக் கொள்ளவும் பதிவு செய்வதில் ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்சினைகளை அறிந்து கொள்வதற்காகவும் இச்சந்திப்பு இடம்பெற்றது. இச்சந்திப்பில் தேசிய தோட்ட தொழிலாளர் சங்க வட்டார அமைப்பாளரும், தோட்டத் தலைவரும் கலந்து கொண்டனர். இத்தோட்டத்தில் 2020இல் இந்திய உதவி திட்டத்தின் கீழ் 155 வீடுகள் கட்டப்பட்டன. 105 வீடுகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டன. சிலரைத் தவிர எவரும் காணிப்பதிவு காரியாலயத்திற்கு செல்லவில்லை. பதிவு செய்த ஒருவர் மக்கள் வங்கியில் கடனைப் பெற்றுக்கொள்ள முயற்சித்துள்ளார். இது சாத்திய மாகவில்லை. கடன் விண்ணப்பம், நிராகரிக்கப்பட்டமைக்கு, காணி உரிமமா? அல்லது வேறு காரணமா என்பது அறியப்பட வேண்டும். உரிமங்கள் வழங்கப்படாத 50 பேரும் அதனை அமைச்சில் பெற்றுக் கொள்வதற்கு எவ்வித அக்கறையும் காட்டவில்லை என்பதும் உரிமம் வழங்கப்பட்ட அனைவரும் அதனை பதிவு செய்வதில் எவ்வித ஆர்வமும் காட்டவில்லை என்பதுவும் இங்கு வெளிப்பட்ட உண்மைகளாகும்.

### 2. பதுளை மாவட்டம்

#### i. ஊவா சக்தி நிலையம்

பதுளை மாவட்டத்தின் ஊவா சக்தி நிலையத்தில் 19.04.2023இல் இடம்பெற்ற கலந்துரையாடலில் நிலைய இயக்குனர் ஊடகவியலாளர் தொழிற்சங்க பிரதிநிதிகள் ஓய்வு நிலை அரசாங்க உத்தியோகத்தர்கள் உட்பட ஏழு பேர் கலந்து கொண்டனர். வழங்கப்பட்டு வரும் காணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமம் பற்றியே இங்கு அதிகம் கவனம் செலுத்தப்பட்டது. ஒரு உரிமத்திற்கு காணப்பட வேண்டிய பல அம்சங்கள் பசுமை பூமி (ஹரித பூமி) என்ற தலைப்பில் வழங்கப்பட்ட உரிமத்தில் உள்ளடக்கப்பட வில்லை என்பதை கலந்துக் கொண்டுடோர் சுட்டிக் காட்டினர். தேசிய வீடமைப்பு அதிகார சபை (NHDA)வினால் வழங்கப்பட்ட உரிமங்கள் இப்பகுதியில் அதிகம் இருக்கவில்லை. 7 பேர்ச் வீட்டுக் காணியோடு 20 பேர்ச் காணி வாழ்வாதாரத்திற்கு வழங்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது. வெளிவாரி உற்பத்தி முறையானது சில தோட்டங் களில் வெற்றிப் பெற்றுள்ளது எனக் கருதப்பட்டாலும் பல தோட்டங் களில் இது தோல்வியடைந்துள்ளது. பல தோட்டங்களில் தற்காலிக குடில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் உரிமம் கவனிக்கப்பட வேண்டும். சில இடங்களில் பிரதேச செயலாளர்கள் மூலமாக நிலங்கள் பங்கீடு செய்யப்பட்டுள்ளதோடு அங்கு வீடுகளும் கட்டப்பட்டுள்ளன. அவர்கள் நிலவரி செலுத்துகிறார்கள். 10 வருடங்கள் சென்றதன் பின்னர் அவர்களுக்கு உரிமம் வழங்கப்படும் என்று சொல்லப் பட்டுள்ளது. தோட்ட உத்தியோகத்தர்கள் வீட்டை விட்டு வெளியேறாத நிலையில் அவர்களது சேமலாப நிதி கொடுப்பனவு தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

**ii. மடுல்சீமை**

மடுல்சீமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் 20இற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இப்பகுதி யில், பல தோட்டங்களில் வெளிவாரி உற்பத்திமுறை பின்பற்றப் பட்டுள்ளது. மடுல்சீமை தோட்டத்தில் இது கைவிடப்பட்டுள்ளது. ஆனால் நமுனகல தோட்ட கம்பனியில் இது மேற்கொள்ளப் பட்டு வருகிறது. மழைக்காடு கணக்காய்வு (Rainforest Audit) செய்யப்பட்டதன் பின்னர் பல இடங்களில் இது கைவிடப்பட்டுள்ளது. சில தோட்டங்களில், றோபரி (Roberry) தோட்டம், ஊவாகெட்டவில் 1998இல் 20 பேர்ச் நிலம் கொடுக்கப்பட்டுள்ளது. வெளிவாரி உற்பத்தி முறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிருப்தியுற்றவர்கள் சிறு உடமையாளர்களாக மாறுவதற்கு தயாராக உள்ளனர். தோட்ட நிர்வாகத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விலகி அவர்கள் வழங்கும் வரப்பிரசாதங்கள், சலுகைகளை விட்டு விடவும் விருப்பம் கொண்டுள்ளனர்.

### iii. ஊவா சக்தி நிலையம்

ஊவா சக்தி நிலையத்தில் இரண்டாவது கலந்துரையாடலில் தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள், சட்டத்தரணிகள் மற்றும் வர்த்தகர்களை உள்ளடக்கிய இளைஞர்கள் ஒன்பது பேர் கலந்துகொண்டனர். சிலருடைய குடும்பத்தினர் நீண்ட காலமாக நிலங்களை சொந்தமாக வைத்துள்ளனர். ஆனால் உரிய உரிமங்கள் இல்லாததால், அவற்றை குடும்ப அங்கத்தினர்களுக்கு மாற்றுவதற்கு முடியாதுள்ளனர். தற்போதைய நிலைமைக்கும் சிறு உடமையாளர் எனும் நிலை மைக்குமிடை ஒப்பீடு செய்கையில் தற்போதைய நிலைமையுடன், 7 பேர்ச் வீட்டுக்காணியும் 20 பேர்ச் வாழ்வாதார காணியும் கிடைக்கப் பெறுவது சிறப்பானது என கருதினர். இவர்களது பயம் என்னவென்றால் சில சக்திமிக்க சிற்றுடமையாளரிடம், பலவீனமான சிற்றுடைமை யாளர்கள் தங்களது நிலங்களை விற்று விட்டு அவர்களின் கீழே வேலை செய்ய ஆரம்பித்து விடுவர் என்பதாகும். இது தோட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகத்தின் கீழ் இருப்பதை விட மோசமானதாகும் என்ற கருத்தும் இவர்களால் தெரிவிக்கப்பட்டது.

### iv. ஸ்பிரிங்வெலி தோட்டம்

இடர் நிலைமையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் (NHDA) கட்டப்பட்ட வீடுகளின் பயனாளிகளை உள்ளடக்கியதாய் இந்த சந்திப்பு அமைந்திருந்தது. இவர்களுக்காக கட்டப்பட்ட வீடுகள் முற்றுப்பெற்றிருந்தாலும் சில அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளபாதை, மின்சாரம் என்பவை வழங்கப்படாதிருக்கின்றது. இந்த நிர்மாணத்திற்கு பிரதேச செயலாளர் பொறுப்பாகவிருக்கின்றவேளை தோட்ட நிர்வாகமும் தன்னை ஈடுபடுத்திகொண்டுள்ளது. சிலருக்கு கூரைத்தகடுகள் வழங்கப்பட்டுள்ளது. பயனாளிகள் சிலருக்கும் நிர்வாகத்திற்குமிடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலை காரணமாக வீடுகளின் சாவிகள் பயனாளி களுக்கு வழங்கப்படவில்லை. இந்தப் பிரச்சினை சம்பந்தமாக தற்போது பேச்சுவார்த்தை இடம்பெற்று வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**v. ஊவா சக்தி நிலையம்**

ஊவா சக்தி நிலையத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட மூன்றாவது சந்திப்பில் மூத்த பிரஜைகள் 8 பேர் கலந்து கொண்டனர். இவர்கள் தொழிற் சங்கம், ஆசிரியர் சேவை, சமூக செயற்பாடுகள் போன்றவற்றில் ஈடுபாடு காட்டியவர்களாவர். ஹபுகஸ்தன்ன, தெமோதரை, நெடுருவல் போன்ற பிரிவுகளின் நிலம் கிராமத்தவர்களுக்கு, காணி சீர்த்திருத்த ஆணைக் குழுவினால் பகிரப்பட்டுள்ளது. பிமதுபிரு நிலம் 16 பேர்ச் வீதம் வழங்கப்பட்டு தற்போது உரிமம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. சிலர் கிராமத்தவர்களை போல சட்டரீதியாக அப்போது நிலத்தை கையகப்படுத்தி சிறு உடமையாளர் என்ற அந்தஸ்தோடு இருக்கின்றனர். இந்த நிலைமை சேனேப் பயிர் செய்கையிலேயே காணப்படுகின்றது. ஏறக்குறைய 1000 ஏக்கருக்கு மேற்பட்ட இந் நிலங்கள் காணி சீர்த்திருத்த ஆணைக்கு (LRC) மூலம் வழங்கப்பட்டு அனுமதி உரித்துகள் வழங்கப்பட்டுள்ளன.

**3. கண்டி மாவட்டம் - பல்லேகல**

கண்டி மாவட்டத்தின் பல்லேகல எனும் இடத்தில் 26.04.2023இல் மக்கள் பிரதிநிதி ஒருவருடனான சந்திப்பு இடம்பெற்றது. பிரதான ஒருவரை நேர்காணல் (Key Person Interview) என்ற முறையில் இதனை அழைக்கலாம். மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் பிரதி தலைவருமான டி. மதியுகராஜாவுடனான நேர்காணலில் அவர் பிரதிநிதிப்படுத்தும் கட்சியின் ஒரு பத்திரிகை செய்தியின் உறுதிபடுத்து முகமாக சில விடயங்களை கேட்டறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. இதன்போது அவர் (1) 10 பேர்ச் கொட்டகலை ரொசிட்டா தோட்டம் வீடமைப்பு திட்டம் (2) அரை ஏக்கர் நிலமும் 30 பேர்ச் வீடும், முன்னால்கல தோட்டம் 42 பயனாளிகள் (3) கலஹா, பட்டியாகம தோட்டம் 30 பேர்சஸ் (4) ஹொரோன்பேர்த் தோட்டம் 260 தனிவீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கூறினார். இவற்றுள் கொட்டகலை ரொசிட்டா தோட்டம், கலஹா பட்டியாகம தோட்டம் இவற்றில் 15 பேர்ச், 30 பேர்ச் என்பவை தனியார் தோட்டங்களில் இருந்து பெறப் பட்டு, மத்திய வருமான பிரிவினருக்கான வீட்டுத்திட்டமாக அமைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேர்காணலின் பின்னர் 1995ஆம் ஆண்டில் தேசிய கால்நடை அபிவிருத்தி சபைக்கு (NLDB) சொந்தமான தோட்டங்களில் காணிகள் பிரித்து கொடுக்கப்பட்டுள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. நெதிமடல திகன மற்றும் ரஜவெல, 350 குடும்பங்களை கொண்டதாக தென்னை மற்றும் கால்நடை வளர்ப்பை மேற்கொள்ளும் தோட்டமாகும். தேசிய கால்நடை அபிவிருத்தி சபையானது கோல் கிளப் உருவாக்கத் திற்காக ரஜவெல பண்ணயை பெற்று 1997இல் 202 பேர்களுக்கு அரை ஏக்கர் வீதம் வழங்கப்பட்டது. தற்போது இந்த எண்ணிக்கை 500 ஆக அதிகரித்துள்ளது. பள்ளேகல தோட்டம், குண்டசாலை அரச பெருந்தோட்ட சபைக்கு சொந்தமானதாகும். விக்டோரிய அணைக்கட்டு நிர்மாணித்ததற்கு பின்னர் 216 நிரந்தர தொழிலாளர்களுக்கு 20 பேர்ச் காணியும் தொழில் செய்யாது வசித்தவர்களுக்கு (Non-Workers) 10 பேர்ச் காணியும் கொடுக்கப்பட்டது. ஆனால் இந்த இரண்டு நிலப் பங்கீட்டிற்கு பின்னர் அவர்கள் தொடர்ந்து வசிப்பிட உரிமையை அனுபவித்தாலும் இன்னும் சட்டரீதியான உரிமங்கள் வழங்கப்பட வில்லை. கலஹா பகுதியில் ஜனவசமிற்கு சொந்தமான அம்பலமான தோட்டததில், 184 பேருக்கு 1/2 ஏக்கர் வீதம் மாகாண சபை மூலமாக வழங்கப்பட்டு, அவர்கள் சிறு உடைமையாளர்களாக நிகழ்கின்றனர். பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் (SLSPC) நிக்கல்ஸ் தோட்டத்தில் 90

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் தொழிலாளர்களுக்கு 1/2 ஏக்கர் கொடுக்கப்பட்டுள்ளது. நாவலப்பிட்டியில், லோவர் கொத்மலையில் திஸ்பனை எனும் இடத்தில் இதேபோன்று நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன.



சௌமியமூர்த்தி
தொண்டமான்

மதியுகராஜா கூறியவற்றை மேலும் உறுதிப்படுத்த கலஹா பகுதியின் பாடசாலை அதிபர் R. தயாளன் என்பரோடு தொடர்பு கொண்டபோது அவர் தெரிவித்த விடயங்கள் பின்வருமாறு அமைந்தன. 1. பட்டியாகம என்ற தனியார் தோட்டம், 1993இல் மூடப்பட்டு 1994இல் தோட்டம் பிரிக்கப்பட்டு விற்கப் பட்டது. மறைந்த சௌமியமூர்த்தி தொண்ட மானின் தலையீட்டால், 47 பேருக்கு நிலத் துண்டுகள் வழங்கப்பட்டன. இவற்றுள் 40 பேர் அதனை விற்றுவிட்டனர். வழங்கப்பட்ட நிலத்தில், வீடுகள் கட்டப்பட்டுள்ளன. சிலர் தேயிலை, மரக்கறி போன்றவற்றை உற்பத்தி செய்வதோடு, கால்நடைகளையும், வளர்க்கின்றனர்.

அம்பலமான தோட்டம் ஜனவசமிற்கு சொந்தமானது. 1995இல் இது பிரிக்கப்பட்டு, இ.தொ.காங்கிரசின் முயற்சியால் ஒவ்வொரு தொழிலாளிக்கும் அரை ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. 184 பேர் இந்தவகையில் பயன்பெற்றனர். இவர்களில் 10 பேர் தங்களது காணியை விற்றுவிட்டனர். இங்கு தேயிலையே பயிரிடப்படுகின்றது. இவர்களுக்கு வழங்கப்பட்ட உரிமம் (காணி உறுதி) பிற்சேர்க்கை (3) ஆக இணைக்கப்பட்டுள்ளது. இது கண்டி காணி காரியாலயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இது 16 பேர்ச் காணித்துண்டுக்குரியதாகும்.

**4. மாத்தளை - எல்கடுவ**

மாத்தளையில் எல்கடுவ அங்கராங்கந்தை தோட்டத்தில் 27.04.2023 அன்று இடம்பெற்ற கலந்துரையாடலில் தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இது ஜனவசமவிற்கு சொந்தமான வொரு தோட்டமாகும். இங்கு 47 தொழிலாளர்கள் வேலை செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தோட்டம் 2002 வரையில் நட்டத்தில் இயங்கியமையினால் மூடப்பட்டு காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டது. பயிரிடல் கைவிடப்பட்டமையினால் தொழிலாளர்கள், தாங்களாகவே தேயிலையை பறித்து விற்று தங்களது வாழ்வாதாரத்தை தேடிக் கொண்டனர். அருகிலுள்ள கிராமத்தவர்கள் இந்நிலத்தை கைப்பற்ற முயற்சித்தமையினால் தோட்ட இளைஞர்கள் இதனை தடுப்பதற்காக நீதி மன்றம் சென்றமையினாலே நீதிமன்ற தீர்ப்பின்படி 26 ஏக்கர்கள் 47 தொழிலாளர்களுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டது. ஆனால் இது நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆனால், மக்கள் தங்களது சக்திக்கேற்ப தாங்களாகவே நிலத்தை பெற்று வீடுகளையும் நிர்மாணித்து கொண்டனர். 1987இல் இத்தோட்டம் நான்காக பிரிக்கப்பட்டு உபாலி (Upali) எனும் கம்பனியினால் வேறு ஒருவருக்கு கைமாற்றப்பட்டது. 2019இல் மக்களது எதிர்ப்பு காரணமாக நிலம் அளவையிடப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும், சிலருக்கு நிலங்கள் கிடைக்கப் பெறவில்லை. எனினும் நிலம் பெற்றவர்களுக்கு காணிவுறுதி கிடைக்கவில்லை. இத்தோட்டம் பற்றி விபரங்களை குறிப்புரை இரண்டு விளக்குகின்றது.

**குறிப்புரை 2**

இலங்கையின் மத்திய மாகாணத்தின் வடபகுதியில் அமைந்துள்ள மாத்தளை (Matale) மாவட்டத்தில் காணப்படும் 11 பிரதேசசெயலகப் பிரிவுகளில் ஒன்றாக ரத்தோட்டை (Rattota) பிரதேச செயலகம் காணப்படுகின்றது. இது மாத்தளையின் வட பகுதியில் அமைந்துள்ளது. இப்பிரதேச செயலகத்தின் கீழ் சுமார் 55 கிராம சேவையாளர் பிரிவுகள் காணப்படுகின்றது. அவற்றுள் ஹங்கரங்கந்த என்னும் கிராமமானது ஹங்கரங்கந்த E3678 எனும் (Hagarankandha. E367B) கிராம சேவையாளர் பிரிவின் கீழ் அமைந்துள்ளது. இக்கிராமமானது எல்கடுவை (Elkaduwa) நகரில் இருந்து 3KM தூரத்தில் அமையப்பெற்றுள்ளது. இதன் வடக்கே எல்கடுவை-உனுகலை பிரதான வீதியையும் கிழக்கே உனுகலை கிராமத்தையும் மேற்கே ஹங்கரங்கந்த கொலனியையும் தெற்கே ரத்வத்தை தோட்டத்தையும் எல்லையாக கொண்டுள்ளது. தேயிலை வளமிக்க ஒரு கிராமமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஹங்கரங்கந்த தோட்டத்தில் தற்போழுது சுமார் 90 குடும்பங்களை சேர்ந்த மக்கள் வசிக்கின்றனர். இக்கிராமம் எவ்விதமான வசதிகளும் இன்றி கவனிப்பாரற்ற நிலையில் காணப்படும் ஒரு பின்தங்கிய கிராமமாகும். நிரந்தர தொழிலின்றி இம்மக்கள் தங்களின் வாழ்வாதாரத்தை கொண்டு செல்கின்றனர்.

2000ஆம் ஆண்டு காலப்பகுதியில் இத்தோட்டம் ஜனவசமவின் கீழ் இயங்கி வந்தது. இக்காலப்பகுதிகளில் தோட்டத்தில் இருந்து கிடைத்த வருமானம் போதியளவாக காணப்படவில்லை. நஷ்டத்தை நோக்கிய பாதையில் நகர்ந்தது இதனால் 2000ஆம் ஆண்டுகளில் இருந்து இத்தோட்டத்தை சீர் செய்வதற்காக எடுத்த முயற்சிகள் யாவும் தோல்வியடையவே 2002ஆம் ஆண்டில் இத்தோட்டம் முழுமையாக மூடப்பட்டது. ஒரு தோட்டம் கைவிடப்பட்டால் அத்தோட்டத்தின் உரிமையை காணி சீர்திருத்த ஆணைக்குழு (LRC) பெற்றுக்கொள்ளும். எனவே ஹங்கரங்கந்த தோட்டம் காணி சீர்திருத்த ஆணைக் குழுவின் கீழ் உள்வாங்கப்பட்டது. இக்காலப்பகுதிகளில் 47 தோட்டத் தொழிலாளிகள் தோட்டத்தில் வேலை செய்து வந்தனர். அதன் பின்னர் மக்கள் வேலையின்றி அன்றாடம் தங்களின் உணவு தேவைகளைக்கூட பெற்றுக்கொள்ள முடியாத இக்கட்டான சூழ்நிலைக்குத்தள்ளப்பட்டனர்.

தோட்டபுறத்தில் வசிக்கும் இம்மக்களின் வாழ்வாதாரம் தேயிலையை நம்பியே காணப்பட்டது. திடீரென தோட்டம் மூடப்பட்டமையினால் மக்களின் வாழ்க்கை முழுமையாக பாதிக்கப்பட்டது. இதனால் தோட்டத்தில் காணப்பட்ட தேயிலையைப் பறித்து அவற்றை தனியாருக்கு விற்று தங்களின் தேவைகளை நிவர்த்தி செய்து கொண்டனர். இதற்கும் பாதிப்பு ஏற்படும் வகையில் 2004ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் பின்னர் தோட்டத்தின் அந்நியப் பகுதிகளில் இருந்த மக்கள் தோட்டத்தின் காணியை அபகரித்துக்கொள்வதற்கு எத்தனித்தனர். பிரச்சினை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமானின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. எனவே அவர் இதனை ஜனாதிபதியின் (மஹிந்த ராஜபக்ஸ) கவனத்திற்கு கொண்டு சென்று ஜனாதிபதியின் கட்டளைக்கு அமைய மத்திய மாகாண பொலிஸாரினால் இப்பிரச்சினை முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. அதன் பிறகும் அயல் பகுதியைச் சேர்ந்த மக்களினால் தோட்ட காணியை அபகரிக்க முற்பட்ட சந்தர்ப்பங்களில் தோட்ட இளைஞர்களினால் தடுத்து நிறுத்தப்பட்டது. தோட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையாக கைவிடப்பட்ட பின்னர் வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கின் முடிவில் தோட்ட வேலையின்றி கைவிடப்பட்ட போது தோட்டத்தில் இறுதியாக வேலை செய்யும் 47 பேருக்கும் அரை ஏக்கர் நிலம் பிரித்து கொடுப்பதாக கூறி வழக்கு முடிவிற்கு வந்தது. இதற்காக 26 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. ஆனால் இதுவரை ஒரு பிடி நிலம் கூட மக்களுக்கு பிரித்து கொடுக்கப்படவில்லை. அதுமட்டு மன்றி தோட்டவேலையில் ஈடுபடாமல் இருந்த மக்களுக்கு நிலம் கொடுக்க வேண்டும் அல்லது அவர்கள் பற்றிய எந்தவொரு கதையும் பேசப்படவில்லை. இவ்வழக்கின் முடிவின் பின்னர் வேலை செய்த மக்களுக்கான சேவைக்கால பணம் வழங்கப்பட்டது.

காலப்போக்கில் தோட்ட மக்கள் தங்களுக்கு தேவையான நிலங்களை தாங்களே பிடித்துக்கொண்டு வீடுகளை அமைத்து வாழத்தொடங்கிவிட்டனர். சிலர் தோட்டத்தின் தேயிலைப் பகுதிகளை பிடித்து அவற்றை சுத்தம் செய்து அதில் வரும் தேயிலையை விற்று தங்களின் பணத்தேவைகளை பூர்த்தி செய்துகொண்டனர். ஆனால் இன்னமும் காணி இல்லாத ஒரு மக்கள் கூட்டம் இக்கிராமத்தில் வாழ்கின்றனர். அவர்கள் இன்னமும் அதே இருநூறு வருடகாலம் பழமைவாய்ந்த அதே லயன் குடியிருப்புகளில் வாழ்கின்றனர்.


காணி சீர்திருத்த ஆணைக்குழுவானது 2010ஆம் ஆண்டிற்கு பின்னர் இத்தோட்டத்தை நான்கு பிரிவுகளாகப் பிரித்து நான்கு தனியாருக்கு கொடுப்பதற்கு முடிவு செய்தது. ஆனால் 1987ல் ஹங்காரங்கத்த தோட்டத்தை பெற்றுக் கொண்ட உபாலி கம்பனி இத்தோட்டத்தை 99 வருடங்களுக்கு குத்தகைக்கு எடுத்துள்ளமை யினால் அந்த முயற்சியும் தோல்வியில் முடிவடைந்தது. பின்னர் உபாலி கம்பனியினால் விடப்பட்ட குறையினை பூர்த்தி செய்யும் வகையில் இன்னொரு தனியாரிடம் தோட்டம் கொடுக்கப் பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டு தோட்ட மக்கள் தங்களின் நிலையை ஊடகங்களுக்குக் கொண்டு சென்றதன் பின்னர் காணி சீர்திருத்த ஆணைக் குழுவினால் மக்களினால் பிடிக்கப்பட்ட காணிகளை அளவீடு செய்து அதற்கான உறுதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு. நில அளவைத் திணைக்களத்தால் காணிகளை அளந்து அதற்கான எல்லைகள் பிரித்து கொடுக்கப்பட்டன. ஆனால் இதற்கு பின்னரும் காணி இல்லாத மக்கள் இந்த கிராமத்தில் இன்னமும் வசிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹங்காரங்கத்த தோட்டத்தை பொறுத்தவரை அவர்கள் பல தலைமுறைகளாக இப்பிரதேசத்தில் வாழ்ந்தாலும் அவர்களுக்கான சரியான நிலம் இன்றுவரை கிடைக்கப்பெறவில்லை. நிலம் வெறுமனே நிலமாக மட்டுமே காணப்படுகின்றது. தோட்ட நிலத்தை தாங்களாகவே பிடித்து வீடுகள் அமைத்து வாழும் மக்களுக்கு அதற்கான சரியான உறுதிப்பத்திரம் இல்லை. நிலங்களை பிடிக்காத மக்களுக்கு எவ்வித நிலமும் சொந்தமின்றி எதோ வாழ்வதற்காக வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். 2002ஆம் ஆண்டு இக்கிராமம் முழுமையாக கைவிடப்பட்டு சுமார் 21 வருடங்கள் முடிவடைந்த நிலையில் இம்மக்களின் காணிகள் தொடர்பாக எவ்விதமான முடிவும் இன்று வரை கிடைக்கப் பெறவில்லை.

- செந்தமிழ்ச் செல்வி

இதைத் தொடர்ந்து பிட்டகந்தை, தம்பலகளை தோட்டத்திற்கு செல்லக்கூடியதாக இருந்தது. இங்கு 7 பேர்ச் வீதம் வீடுகள் கட்டப்பட்டு, உறுதிகள் வழங்கப்பட்டுள்ளது. 1993இல் கட்டப்பட்டு 2018இல் பசுமை பூமி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளது. 7 பேர்ச் காணியை விட வீட்டின் அளவை, வசதிக்கேற்ப சிலர் பெருக்கிக் கொண்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. இரத்தினபுரி - ஹப்புகஸ்தன்ன தோட்டம்

இரத்தினபுரி மாவட்டத்தின் ஹப்புகஸ்தன்ன தோட்டத்தின் மேல் ரட்னகங்க பிரிவு தொழிலாளர்களுடன் 13.05.2023இல் கலந்துரையாடப் பட்டது (மேல் ரட்னகங்க பிரிவு Upper Ratnaganga Divsion - URG) .

இத்தோட்டப் பிரிவின் தொழிலாளர்கள் 20க்கு மேற்பட்டவர்கள் இதில் கலந்து கொண்டனர். இதில் அதிகமாக கலந்துரையாடப்பட்டது வெளிவாரி உற்பத்தி முறைமை பற்றியாகும். இது குறித்த கருத்துக்கள் வித்தியாசமானவை யாக இருந்தன. சிலர் வருமானம் அதிகரித்துள்ளதாக கூறிய அதேவேளை, இந்த முறைமை, அதிக சிரமங்களோடு நடைமுறைப்படுத்தப்படுகின்றது எனச் சிலர் கூறினர். தொழிலாளர்கள், தாங்களாகவே நிலத்தை கையகப்படுத்தி சிறு உடமையாளர்களாக நடந்து கொள்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அவை நிலுவையிலுள்ளன. தோட்ட நிலங்கள் அதிக அளவில் பயிரிடப்படாத நிலையிலுள்ளதாலும், தோட்டங்களில் வேலை செய்வதற்கு தொழிலாளர்கள் இன்மையாலும் இவர்களுக்கு இத்தகைய ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளது போல தெரிகிறது. இத்தகைய சிறு உடமையாளர்கள் தங்களது விளைச்சலை பறிக்கப்பட்ட தேயிலை கொழுந்தை வெளியாருக்கு கூடிய விலையில் விற்கப்பட்ட நிலையில், தோட்ட நிர்வாகம் தங்களுக்கும் அவற்றை விற்க வேண்டும் என உடன்பாடு செய்துள்ளதாக தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தோடு தோட்டத்தில் வீடுகள் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் 7 பேர்ச் நிலத்தில் கட்டப்பட்டுள்ளன. இவைகள் கடன் அடிப்படையில் 1995ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிர்மாணிக்கப் பட்டுள்ளன. இவற்றிற்காக பெற்ற கடன் அதிகார சபைக்கு திருப்பி செலுத்தப்பட்டுள்ளன. அதற்கான ரசீதுகளை பயனாளிகள் வைத்துள் ளனர். எனினும், தங்களுக்குரிய உரித்து இன்னும் கிடைக்கவில்லை என்பதே அவர்களின் கோரிக்கையாக உள்ளது. சிலருக்கு 1996/97இல் 7 பேர்ச் நிலத்துண்டு வீடு கட்ட வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் சிலர் சொந்த செலவில் வீடுகளை கட்டியுள்ளனர்.

**இரத்தினபுரி - கஹவத்தை**

இந்த கலந்துரையாடல் 14.05.2023இல் ஆசிரியர்கள், செயற்பாட்டா ளர்கள் மற்றும் சட்டத்தரணி உட்பட்ட குழுவினரோடு இடம்பெற்றது. இவர்கள் வெளிவாரி உற்பத்தி முறைமை என்ற கருத்து நிலைப்பாட்டிற்கு எதிரான கருத்தினை முன்வைத்தனர். இத்தகைய நிலையில் முழுக் குடும்பமே தோட்ட பராமரிப்பில் ஈடுபடக்கூடிய நிலை உருவாவதோடு கல்விமீதான அக்கறை குறையக்கூடிய வாய்ப்பு உண்டு. இந்த பிரதே சத்தில் நிலத்திற்கான உரித்து வழங்கப்படவில்லை.

எந்தான பகுதியில் மியனவித்த தோட்டப்பிரிவில் சில தொழிலாளர் களுடனான சந்திப்பில் ஒரு குடும்பம் வேறு தோட்டத்திலிருந்து வந்து இங்கு ரூபா 135,000/= கொடுத்து வீடொன்றை விலைக்கு வாங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்து வருகின்றமை தெரியவந்தது. இந்த வீட்டிற்கு இவர்கள் மூன்றாவது சொந்தக்காரர்கள் ஆவர். இங்கு வெளிவாரி உற்பத்தி முறைமை குத்தகை (பது) நடைமுறையில் உள்ளது. விளைச்சலை நிர்வாகத்திற்கு வழங்கி வருகின்றனர். கைவிடப்பட்ட காணி நிலங்களை கையகப்படுத்தி சிறுதோட்ட உடைமையாளர்களை போல செயற்பட்டு வருகின்றனர். கிராமத்தவர்கள் இப்படி செய்வதால் தாங்களும் அதனை பின்பற்றி வருகின்றோம் என்பது இவர்களது நிலைப்பாடு ஆகும். இக்காணிகள் குறிப்பிட்ட சிலர் மூலமாக கைமாறுதல்களும் இடம்பெற்று வருகின்றன.

### 6. மாத்தறை மாவட்டம் - தெனியாய

தெனியாய திருச்சபை மண்டபத்தில் சமூக செயற்பாட்டாளர், ஆசிரியர்கள் பெண் பிரதிநிதிகள் உட்பட 11 பேருடனான கலந்துரையாடல் 25.05.2023 இடம்பெற்றது. பயிரிடப்படாத சதுப்பு நிலங்கள், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அனுமதியுடன் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான உதவிகளை விவசாய சேவைகள் உதவி ஆணையாளர் (ACAS) காரியாலயத்தில் பெற்று கொள்ளக்கூடியதாக உள்ளது. சில தோட்டங்களில், வெளிவாரி உற்பத்தி முறைமை நடைமுறையிலுள்ளது. இந்த பகுதியில் ஏறக்குறைய 90,000 சிறு உடைமையாளர்கள் உள்ளனர். இவர்களின் பெரும்பாலானவர்கள் பெரும்பான்மை இனத்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவர். என்சல்வத்தை பெவர்லி பிரிவில் 250இற்கு மேற்பட்டவர்கள் சிற்றுடமையாளர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும் பாலானவர்கள், பெரும்பான்மை இனத்தைச் சார்ந்தவர்கள் ஆவர். இவர்களுக்கெதிராக 60 நீதிமன்ற வழக்குகள் இடம்பெற்ற வருகின்றன. சில தோட்டங்களில், வெளிவாரி உற்பத்தி முறைமையானது சமயாசமய (Casual) தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஒப்பந்தங்கள் அவர்களது சம்மதமின்றி எழுதப்பட்டுள்ளன.

### டெனியாய தோட்டம்

இந்த தோட்ட காரியாலயத்தில் வெளிவாரி உற்பத்தி முறையில் ஈடுபட்டுள்ள தோட்டத் தொழிலாளர்கள், தொழிற்சங்க தலைவர் உட்பட, 5 பெண்களும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். இது, முழுமையாகவே வெளிவாரி உற்பத்தி முறை பற்றியதாகவே அமைந்திருந்தது. விளைச்சலுக்கேற்ப வகைப்படுத்தப்பட்ட எல்லாவகையான தேயிலை நிலங்களும் (A, B, C) உள்ளடக்கப்பட்டுள்ளன. மேற்கொள்ளப்பட்ட தெரிவு பற்றி அனைவரும் திருப்தியை வெளிப்படுத்தினர். ஆரம்ப செலவுகளை (உரமிடுதல், புல் வெட்டுதல், மருந்து தெளித்தல் போன்றவற்றிற்கானவை) நிர்வாகம் செலுத்தி, பின்னர் அவற்றுக்கான செலவு பயனாளிகளின் வருமானத்தில் கழிக்கப்பட்டது. VPP பயிர்கள் மூலம் மீள் நடுகை செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26 நாட்கள் வேலை வழங்கப்பட்டாலும் அவற்றில் கட்டாயமாக வேலை செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி (EPF & ETF) போன்றவற்றிற்கு, வெளிவாரி உற்பத்தி முறை வருமானத்தில் கழிக்கப்படுவதோடு, சமூக நல நடவடிக்கைகளுக்கும், சிறுதொகை கழிக்கப்பட்டு, தோட்ட வீடமைப்பு கூட்டுறவு சபையில் வைப்பு செய்யப்பட்டு வருகிறது. இம்முறையில், அதிகரித்த வருமானத்தை பெறுகின்றனர். சிலர் 60 முதல் 70 ஆயிரம் வரை பெறுகின்றனர். இவர்களில் ஒருவர் ஒரு தடவை 137,000 ரூபாவுக்கு அதிகமாகப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.


தற்போது அனைவருக்கும் 2 ஏக்கர் கொடுக்கப்பட்டுள்ளது. இவை சிறு உடைமையாளர்கள் எனும் அந்தஸ்துடன் கொடுக்கப்படுமாக இருந்தால், அதனை பொறுப்பேற்கவும் இவர்கள் தயாராக உள்ளனர். அதேவேளை நிர்வாகத்தின் உதவியின்றியும் இவற்றை இவர்கள் நிர்வகிக்கவும், தயாராக உள்ளனர்.

### தெனியாய - சீத்தாஎலியா மற்றும் சின்னத்தோட்டம்

இது ஒரு தனியார் தோட்டம் 10 குடும்பங்களை சேர்ந்தவர்களுடன் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன் உடைமையாளர் அங்கு வசிப்பதில்லை. உற்பத்தியானது வெளிவாரி உற்பத்தி முறை மூலமே இடம்பெறுகின்றது. 50% வீத உற்பத்தியை தோட்டத்திற்கு செலுத்த வேண்டும். அவர்கள் கட்டாயமாக அங்கு வேலை செய்ய வேண்டும். இத்தோட்டத்தில் லயத்தின் ஒரு காம்பிராவை தவிர, வேறு எவருக்கும் மின்சாரம் கிடையாது. தோட்டப் பராமரிப்பு தொடர்பான பொறுப்புகள் அனைத்தும் தொழிலாளர்களிடமே உள்ளது. விளைச்சல் நாளொன்றிற்கு 10-15 கிலோ என்பதால், வருமானம் குறைந்த நிலையில் இவர்கள் சிரமப்படுவதாக கூறினர். மின்சாரம் உள்ள வீட்டில் இரண்டு மாணவிகள் உயர்தரம் முடித்து, ஒருவர் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளார். இத்தோட்டத்தின் நிலைமையை இம் மாணவிகளில் ஒருவர் எழுதியது குறிப்புரை 3 ஆக சேர்க்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புரை 3



"எழில் கொஞ்சும் இயற்கை சூழ்ந்துள்ள இம்மலையகத்தில் வாழும் பெரும்பாலான மக்களின் வாழ்க்கையானது கறுப்பு நிற புள்ளியாகவே இன்றும் காணப்படுகிறது" இவ் வாக்கியத் திற்கு இணங்க இவ்வாறு பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒன்றாக இவ் பிரதேசமும் காணப்படு கின்றது. அதாவது சீதாஎலிய கந்தில்பான தெனியாய பிரதேசம். இந்த பிரதேசத்தில் சுமார் தற்போதைய நிலையில் பத்து குடும்பங்கள் வசிக்கின்றன. ஒரு காலத்தில் 50 குடும்பங்கள் வசித்த இப்பிரதேசமே தற்போது இந்நிலையில் காணப்படுகிறது. ஏனென்றால் இப்பிரதேச மானது தனியார் மயமாக்கப்பட்ட பிரதேசமாகும். எனவே அவர்களி டத்தில் தங்கி வாழும் சூழ் நிலைக்கேற்பவே எங்களின் வாழ்க்கை நிலைமை சென்று கொண்டிருக்கின்றது.

இப்பிரதேசம் மட்டுமன்றி இன்னும் இம் மலையகத்தில் எத்தனை பிரதேசங்கள் காணப்படுகின்றன என்பதை நினைத்தால் மனமானது கலங்கி நிற்கிறது. இந்த அடிப்படையில் எமது பிரதேசத்தை நோக்கி னால் 10 குடும்பங்களில் 15 மாணவர்கள் பாடசாலை செல்கின்றனர். அதாவது இவர்களின் வீடமைப்பை பார்த்தோமானால், சதுர வடிவிலான மூன்று அறைகளே காணப்படுகின்றன. தமது எல்லா தேவைகளையும் அம்மூன்று அறைகளிலேயே நிவர்த்தி செய்து கொள்கின்றனர். அதாவது இப்பிரதேசத்தில் காணப்படும் தேயிலை தோட்டத்தில் கட்டாயமாக வேலை செய்ய வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே இம் மக்களின் வாழ்க்கை முறை சென்று கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அடிப்படையில் கொள்வனவு தேயிலை (Bought Leaf) முறையே இங்கு காணப்படுகிறது. (வெளிவாரி உற்பத்தி முறையே இவ்வாறு கூறப்படுகின்றது.) இம்முறையான 50% வீதமே இம் மக்களுக்கு வருமானமாக கிடைக்கிறது. மீதம் 50% வீதம் தோட்ட அதிகாரிக்கு செல்கிறது. அதுவும் நாங்களே தேயிலை தோட்டத்தை சுத்தம் செய்து, உரம் இட்டு, கவ்வாத்து செய்து பராமரித்து கொள்ள வேண்டும். அதுவும் கடந்த காலத்தின் நாட்டின் பொருளாதாரத்திற்கு அமைய இதன்மூலம் பெற்ற வருவாய் போதுமானதாக காணப்பட்டது. ஆனால் நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைக்கேற்ப இம்மக்களால் ஈடுகொடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது. அதாவது ஒரு நாளைக்கு 10 கிலோவும், 15 கிலோவும் எடுக்கும் கொழுந்தின் அளவுக்கு கிடைக்கும் பணமானது இவர்களின் வறுமையை சமாளிக்கவே போதுமானதாக காணப்படுகிறது. இதன் மூலம் மேலதிக படிப்பு மற்றும் தொழில் வாய்ப்புகளுக்கும் செல்ல முடியாத நிலைமை காணப்படுகின்றது. இம்மக்கள் எத்தனை வருடம் இப்பிரதேசத்தில் வாழ்ந்தாலும் முன்னேறுவதற்கான வாய்ப்பு கிட்ட வில்லை. அந்நிலையிலும் தன்னை காப்பாற்றி கொள்வதற்காக சில பெற்றோர் வெளிநாடுகளுக்கு சென்று வேலை செய்துள்ளனர். இதனால் பிள்ளைகள் சரியான வழிகாட்டல் இல்லாமல் படிப்பினை பாதியிலேயே நிறுத்தி வேலைகளுக்கு செல்கின்ற நிலைமையும் காணப்படுகின்றது.

அந்த வகையில் எந்த கஷ்டங்கள் வந்தாலும் நானும் என் சகோதரியும் முன்னேற வேண்டுமென பாடுபட்டு இந்நிலையை அடைந்துள்ளோம். அதற்கு எங்கள் பெற்றோருக்கே முதல் நன்றியினை தெரிவித்து கொள்கின்றேன். ஏனென்றால் எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் எங்கள் படிப்பிற்காக பண வசதி மற்றுமன்றி பொருள் வசதியும் அமைத்து கொடுத்தனர். ஆகவே இக்கட்டுரை மூலம் கூற வருவது என்னவென்றால் எக் கஷ்டங்களிலும் தன் படிப்பினையும் தன்னம்பிக்கையும் இலட்சியத்தையும் விட்டு கொடுக்காது இருத்தல் வேண்டும்.

நாங்களும் இப்பிரதேசத்தில் நீர், உணவு, மலசலகூடம், மின்சாரம், தனியறைகள் என்ற வசதி இல்லாமல் தான் கஷ்டப்பட்டு படித்தோம். ஒரு மனிதன் தன் இலக்கை நோக்கி செல்லும் போது எவ்வாறான பிரச்சினைகள் வந்தாலும் அதனை எதிர்கொண்டு சென்றால் தான் வெற்றி கிடைப்பது நிச்சயம்.

- மு.யுனிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**என்சல்வத்தை - தோட்டம் - பட்னா பிரிவு**

இந்த தோட்டத்தின் சமூக அக்கறையுள்ள 7 பேர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். இங்கு 105 குடும்பத்தினர் வாழுகின்றனர். 975 ஹெக்டயர் நிலப்பரப்பு காணப்படுகின்றது. அதிக அளவிலான பெங்கிரா/மானோ காடு காணப்படுவதால் இதனை சிறு உடைமையாக எடுத்து 20 வருடங்களாக பயிரிட்டு வருகின்றனர். 2017இல் காணிச் சீர்த்திருத்த ஆணைக் குழுவின் அனுமதி 2500 பேருக்கு வழங்கப்பட்டது. அப்போது 75 தோட்ட தொழிலாளர்களுக்கும் இந்த அனுமதி கிடைத்துள்ளது. இது வருடாந்த அனுமதியினால் இதனை புதுப்பிக்க இவர்கள் சிரமப்படுகின்றனர். இவர்களுக்கு வழிகாட்டுவதற்கு தகுந்த தொழிற் சங்க மற்றும் அரசியல் தலைமைகள் இல்லை என குறைபட்டு கொண்டனர். வெளிவாரி உற்பத்தி முறையோடு, சிறு உடைமையார்களாகவும் இவர்கள் தொழில்படுகின்றனர். இந்த தோட்டத்தின் அமைவிடம், மலை உச்சியில், இராஜாங்கனை காட்டுப் பிரதேசத்திற்கு அண்மித்தது. அத்தோடு, லயன் அறைகள் காணப்படவில்லை. அனைத்தும் தாங்களாகவே அமைத்துக் கொண்ட தனி வீடுகளாகும்.

**7. கேகாலை மாவட்டம்**

(i) தெரணியகலயில் 14.06.2023இல் ஒழுங்கு செய்யப்பட்ட கலந்துரையாடலில் சமூக அக்கறையுள்ள 7 பேர் கலந்து கொண்டனர். இந்திய வீடுகள் இப்பகுதியில் கட்டப்பட்டுள்ளன. ஆனால் உறுதிப்பத்திரம் வழங்கப்படவில்லை. தொழிலாளர்கள் தாங்களாகவே கடன்பெற்று வீடு கட்டியுள்ளனர். கடன்பெறும் போது உறுதிப்படுத்தியவர்கள் கடனை கட்ட வேண்டிய நிலையிலுள்ளனர். இங்கு வீடமைப்பே பிரதான பிரச்சினையாக உள்ளது. ஒரு வீடமைப்பு திட்டத்தின் கீழ், 355 தொழிலாளர்கள் வீடுகளை பெற்றுள்ளனர். ஆனால் காணி உறுதி இன்னும் கிடைக்கவில்லை சில தோட்டங்களில் 30 பேருக்கு நிலம் கொடுக்கப்பட்டுள்ளது. தேயிலை உற்பத்தி செய்யப்படும் தோட்டங்களில் வெளிவாரி உற்பத்தி முறைமை பின்பற்றப் படுகின்றது. சில சிறு உடமையாளர்களாக இருப்பவர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தங்களது காணிவரியை செலுத்த முடியாதிருக்கின்றனர். ஒரு புதிய கிராமிய திட்டத்தில் (கம்மான) அசமனகந்த என்ற இடத்தில் 7 பேர்ச் காணி கொடுக்கப்பட்டுள்ளது. அனுமதியில்லாத வீடுகள் சில கட்டப்பட்டுள்ளன. (மாலிகெட தொழிற்சாலை பிரிவு 1) ஆனால் நீதிமன்றம் இவற்றை அனுமதித்துள்ளது. இலுக்கத்தன்ன தோட்டத்தில் உபகுத்தகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(ii) புளத்தோபிட்டிய தமிழ்ப் பாடசாலையில் பல பெற்றோர்கள், சந்திப்பில் கலந்து கொண்டனர். உருமிவெல தோட்டத்தில் டிரஸ்ட் நிதியம் வழங்கிய 30,000 ரூபாவுடன் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 1995இல் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி சபையினால் (NHDA) கடனுதவியுடன் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 15 வருடங்களில், கடன் மீளவும் செலுத்தப்பட்ட நிலையில், இன்னும் உரிமை சட்டரீதியாக உறுதிசெய்ப்படவில்லை. உருமிவெல தோட்டத்தில் கட்டப்பட்ட வீடுகள் கைமாற்றப்பட்டுள்ளன. வெளிவாரி உற்பத்தி முறையில், ரப்பர் உற்பத்தியில் வெளியாட்களும் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) தெஹியோவிட்ட: நகர்ப்பகுதியை சார்ந்த ஒரு இடமாகும். இங்கு ஒழுங்கு செய்யப்பட்ட கலந்துரையாடலில் தோட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர்கள் உட்பட 5 பேர் கலந்து கொண்டனர். வேறு பிரதேசங்களிலிருந்து அவிசாவளை நோக்கி ஆடைத் தொழிற்சாலையில் வேலை செய்வதற்காக தொழிலாளர்கள் இங்கு வந்துள்ளனர். இவர்கள் வாடகை வீடுகளிலிருந்து தோட்டங்களில் வேலை செய்கின்றனர். தோட்ட உத்தியோகத்தர்கள் வீடமைப்பு திட்டங்களில் பயன் பெறுவதில்லை. சிலர் தோட்டங்களில் தொடர்ந்தும் அனுமதியின்றி வாழ்ந்து வருகின்றனர். சிலர், சிறு உடமையாளருக்கு பதிலாக வெளிவாரி உற்பத்தி முறையை விரும்புகின்றனர். காரணம் தோட்ட நிர்வாகத்தில் வழங்கும் சில நலன்கள் தொடர்ந்து கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பாகும்.

## 8. களுத்துறை மாவட்டம்

(i) களுத்துறை மாவட்டத்தின் மத்துகம நகரத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் சமூக அக்கறையாளர்கள் 10 பேர் கலந்து கொண்டனர். இடர்முகாமைத்துவ அமைச்சின் கீழ், 10 இலட்சம் பெறுதியுள்ள 39 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 2015இல் உதவி அரசாங்க அதிபரால் 12 பேர்ச் நிலத்தோடு வீடுகள் கட்ட உதவி செய்யப்பட்டுள்ளது. இதில் 4 தோட்டத் தொழிலாளர்கள் நன்மை பெற்றுள்ளனர். அஸ்கெலிய தோட்டத்தில் தலா 7 பேர்ச் பரப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. ஆனால் அவற்றிற்கு மின்சாரம் நீர்வசதி போன்றவை இன்னும் கிடைக்கவில்லை. கீக்கியான கந்த பகுதியில் தனி வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அத்தோடு, தற்காலிக குடில்களும் காணப்படுகின்றன. சிலர் அனுமதியின்றி 1/4 ஏக்கர் நிலப்பரப்பினை கையப்படுத்தி 8-9 வருடங்கள் தேயிலை பயிரிட்டு வருகின்றனர். அரம்பலாங்கந்தையில் 20 நிலப்பரப்புகள் வழங்கப்பட்டுள்ளன. வெளிவாரி உற்பத்தி முறைமை அதிகமாக நடைமுறையில் இல்லை. நிலப்பங்கீடு பெரும்பான்மையோருக்கு வழங்கப்பட்டபோது, தோட்டத்தமிழ் மக்கள் உள்வாங்கப்படாததே பிரதான ஆதங்கமாக வெளிப் படுத்தப்பட்டது.

## குவியக்குழு கலந்துரையாடல்களின் முடிவுகள்

தொகுத்து நோக்குகையில் எட்டு மாவட்டங்களிலும் இந்த சந்திப்புகளின் தெரிவுகள் எழுமாறாக அமைந்திருந்தாலும் கலந்து கொண்டவர்கள், கலந்துரையாடப்படும் விடயங்கள் குறித்து ஈடுபாடு காட்டியுள்ளவர் களாகவும் அது குறித்த தெளிவுள்ளவர்களாகவும் இருந்தமை இக்கலந்துரையாடல்களை பயனுறுதியுள்ளதாக்கியுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் நிலவுரிமை குறித்த பிரச்சினைகள் சிக்கலானதும் உணர்வுபூர்வமாகவும் அமைந்திருந்தமை தெளிவாக வெளிப்பட்டுள்ளது. முக்கியமாக நிலவுரிமைக்கான உரிமம் (Deed) வெளிவாரி உற்பத்தி முறைமை (Out grower model) சிற்றுடைமையாளர்களாக மாற்றம் பெறல், நிலப்பகிர்வில் புறக்கணிப்பு, சில மாவட்டங்களில் வீடமைப்பிற்கும், வாழ்வாதாரத்திற்குமான காணித்துண்டுகளை பெற்றுக் கொண்டமை போன்றவற்றை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. பதுளை, இரத்தினபுரி, மாத்தறை (தெனியாய) ஆகிய பிரதேசங்களில் சுயமாகவே சிற்றுடைமையாளர்களாக உரிய அனுமதியில்லாமல், செயற்படுகின்ற நிலைமைகளை அவதானிக்க முடிகின்றது. தென் மாகாணம், இரத்தினபுரி போன்ற பிரதேசங்களில் மலையகத்தவர்கள் பெரும்பான் மையோர் மத்தியில் வாழ்வதால் பெரும்பான்மையோருக்கு கிடைத்த போது சிறுபான்மையோரை, முற்றிலும் புறக்கணிக்க முடியாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமையில் இவர்களில் குறைந்த அளவு எண்ணிக்கையினர் பயன் பெற்றுள்ளனர். அத்தோடு பெரும்பான்மையோரை பின்பற்றி அவர்களை போல இவர்களும் நிலத்துண்டுகளை பெற்றுக் கொள்ள முயற்சித்துள்ளனர். இவர்கள் அதிர்ஷ்டவசமாக, வாக்காளர்களாக இருந்தமையினால், உள்ளூர் அரசியல்வாதிகளின் அனுசரணையும் கிட்டியுள்ளது. பல இடங்களில் தாங்களாகவே சுயமாகவே வீடுகளை நிர்வாகத்தின் ஒப்புதலுடனோ அல்லது ஒப்புதல் இல்லாமலோ நிர்மாணித்துள்ளனர். ஆனால் சட்டரீதியான உரிமம் இவர்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. மற்றும் அரச தோட்டங்கள் அபிவிருத்திக்காக, அரசாங்கம் பொறுப்பேற்றபோது அங்கு வாழ்ந்த தொழிலாளர்களுக்கு நிலத்துண்டுகள் கிடைத்துள்ளன. கண்டி, பல்லேகல கலஹாவில் சில தோட்டங்கள் மொனராகலையில் சில தோட்டங்களில் இவ்வாறு பயனடைந்தவர்களைக் காணக்கூடியதாக இருந்தது. இவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவானது என்பது குறிப்பிடத்தக்கது. தனியாருக்கு சொந்தமான தோட்டங்களில் தொடர்ந்து வாழ்வோர் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். உத்தியோகரீதியாக அல்லது வீடுகளை நிர்மாணித்தவர்கள் நிலத்தை கையகப்படுத்தி நீண்டகாலமாக பயன்படுத்தி வருகின்றவர்களின் நிலைமை, கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியதாகும்.

களவிஜயத்தின் போது வெளிப்பட்ட விடயங்களில் முக்கியத்துவம் வாய்ந்ததாக, வீடுகளுக்காக வழங்கப்பட்ட உரிமம் பற்றிய விடயம் அமைகின்றது. இங்கு இரண்டு விடயங்கள் தெளிவுபடுத்தப்பட வேண்டும். ஒன்று தோட்ட நிலங்களின் பூரண உரிமை பற்றியது (Absolute Ownership) சட்ட அடிப்படையில் இது குறித்த ஒரு விளக்கமின்மை தொடர்ந்து விவாதிக்கப்படுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. ஏற்கனவே அவதானிக்கப்பட்டதைபோல, 1972ஆம் ஆண்டு வரைக்கும் தனியாரின் கைகளில் இருந்த தோட்ட நிலம், 50 ஏக்கர் உச்ச வரம்பின்படி, அரச நிலமாக சீர்திருத்த ஆணைக்குழுவினால் பொறுப்பேற்கப்பட்டது. பின்னர் 1975ஆம் ஆண்டு வெளிநாட்டு கம்பனிகளிடமிருந்து தோட்ட நிலங்களையும் காணி சீர்த்திருத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணைக்குழு பொறுப்பேற்றது. இவை பின்னர் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை (Janatha Estate Development Board - JEDB) சுருக்கமாக ஜனவசம, மற்றும் அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் ஆகியவற்றிற்கு கைமாற்றப்பட்டன. 1992ஆம் ஆண்டில் இவை மீண்டும் தனியார் கம்பனிகளுக்கு கைமாற்றப்பட்டன. இந்த இரண்டு நிறுவனங்களுக்கும் உருவாக்கப்பட்ட கம்பனிகளுக்கிடையில் ஒப்பந்தம் (Inventure) ஒன்று நிறைவேற்றப்பட்டது. தோட்ட நிலம் குறித்த சரத்து ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. குத்தகை வழங்கியோர் (Lessor) நிலத்துண்டை பெறவேண்டி ஏற்பட்டால் அதனை குத்தகை பெற்றோரின் (Lessee) சம்மதத்துடனே பெற்றுக் கொள்ள முடியும். கிராம விஸ்தரிப்பு போன்ற வற்றிற்கு நிலம் பெறும்போது, குத்தகை பெற்றோரின் சம்மதம் பெற வேண்டும என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு, இங்கு தோட்டத் தொழிலாளர் குடியிருக்கும் லயங்கள் குடிசை (Cottages) மற்றும் மரக்கறி தோட்டங்கள் என்பவை உள்ளடக்கப்பட்டுள்ளது. இச்சரத்து பின்வருமாறு அமைந்துள்ளது (K) Not with standing the terms 3 (c) below, the lessee shall permit the release by the lessor without receipt of compensation for such release the line rooms and cottage occupied by estate workers (other the staff and management) as at the date of execution of these present the said Estate workers or to recognised organisations formed by the said Estate for the purpose of holding such line rooms and Cottages" இந்த சரத்திலிருந்து எளிதில் விளங்கிக் கொள்ளக்கூடியது இந்த குறிப்பிட்ட நிலம் தோட்ட நிர்வாகத்திற்கு உரியதல்ல. தோட்டத் தொழிலாளர்களுக்கு உரித்தானது. இவற்றை நட்ட ஈடின்றி விடுவிக்க வேண்டும். ஆனால் அவர்கள் தோட்டத் தொழிலாளர்களாக இருக்கும் வரை இந்த வசிப்பிட உரிமை இவர்களுக்கு உண்டு என்பதே. இந்த ஒப்பந்த அடிப்படையில் தோட்ட கம்பனிகள், இந்த நிலத்தின் பூரண உரிமையாளர், அரச நிறுவனங்களே (JEDB & SPC) அன்றி காணி சீர்த்திருத்த ஆணைக்குழு அல்ல எனும் கருத்து வெளிப்படுகின்றது. இந்த அடிப்படையில் காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழு சில சந்தர்ப்பங்களில் தோட்ட நிலத்தை வெளியாருக்கு கையளிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது தோட்ட கம்பனிகள் அதனை ஏற்றுக் கொள்ளாமல் வழக்கு தாக்கல் செய்த சந்தர்ப்பங்களையும் அறியக்கூடியதாக இருக்கின்றது. சட்டவல்லுநர்களின் வியாக்கியனத்தின் (Interpration) படி, பூரண உரிமை அரச நிறுவனங்களுக்கேயுள்ளன. காணி சீர்த்திருத்த ஆணைக்குழுக்கு அல்ல என்ற நிலைப்பாடும் காணப்படுகிறது.

எவ்வாறாயினும், புத்தகத்தின்படி உள்ள சட்டமும் (Law in Book) செயற்பாட்டில் உள்ள சட்டமும் (Law in action) வேறாக காணப்படுகின்றன. தோட்ட நிலங்கள் அரச நிலங்கள் அதனை பொறுப்பேற்றுள்ளவர், பொன்பங்குடமையாளரான (Golden Shareholder) திறைசேரி செயலாளர். எனவே தோட்ட நிலங்களை வீடுகள் நிர்மாணித்தல் உட்பட ஏனைய தேவைகளுக்கு விடுவிக்கும் தோட்ட கம்பனிகளின் சம்மதம், தோட்ட கைத்தொழில் அமைச்சின் தோட்ட கண்காணிப்பு பிரிவின் (Plantation Managementand Manitoring Divion - PMMD) சிபாரிசின்படி, பொன் பங்குடமையாளரின் ஒப்புதலுடன் அமைச்சரவை தீர்மானம் மேற்கொள்கிறது. இதற்கு பின்னால், சம்பந்தப்பட்ட விடய அமைச்சு காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவோடு தொடர்பு கொண்டு காணியை தோட்ட கம்பனிகளிடமிருந்து பெற்று வீடமைப்பினை மேற்கொள்ள வசதி செய்கிறது. அமைச்சு, காணி சீர்த்திருத்த ஆணைக் குழுவின் தலைவருக்கு அறிவித்ததன் பின்னர் எவ்வாறு ஒரு சட்ட ரீதியான உரிமம் வழங்கப்படுகின்றது என்பது பிற்சேர்க்கை 2இல் இணைக்கப் பட்டுள்ள கடிதங்கள் விளக்குகின்றன. பிற்சேர்க்கை 2 (1) காணி சீர்த்திருத்த ஆணைக்குழு தலைவர் நுவரெலியா வட்டார காணி ஆணைக்குழுவின் இயக்குநருக்கு எழுதிய கடிதம். 10 பேருக்கு 7 பேர்ச் படி நுவரெலியா வோல்ட்டீரிம் தோட்ட வீடுகள் நிர்மாணித்திற்காக எழுதப்பட்டது. பிற்சேர்க்கை 2 (2) இன்படி மாவட்ட காரியாலயம் மேற்கொண்ட நடவடிக்கைகள் தலைமை அலுவலகத்திற்கு பதிலளிக்கும் கடிதம் ஆகும். எவ்வாறு அளவை படம் (Survey Plan) தயாரிக்கப் பட்டுள்ளது. மொத்த அளவீடும் (Block and plan) எல்லைகளை நிர்ணயித்து, ஒவ்வொரு வீட்டிற்குமான (தனிப்பட்ட அளவையும்) காட்டப்பட்டுள்ளன. 7 பேர்ச் நிலத்துண்டுகள், ஒதுக்கப்பட்டுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைநாட்டு புதிய கிராமங்கள்
உட்கட்டமைப்பு மற்றும்,
சமுதாய அபிவிருத்தி அமைச்சு.

தனிவீட்டு உரிமையாளர்களுக்கு,

**காணி உறுதிப்பத்திரங்களை பதிவுசெய்தல் தொடர்பான அறிவுறுத்தல்**

மேற்படி அமைச்சினால் தங்களுக்கு இலவசமாக வழங்கப்படும் தனி வீட்டிற்கான காணி உறுதிப்பத்திரத்தை பெற்றுக் கொண்ட பின்னர், இவ்வுறுதிப்பத்திரத்தினை உங்களுடைய மாவட்டத்தில் அமைந்துள்ள காணி பதிவகத்திற்கு எடுத்துச்சென்று அதனை பதிவுசெய்து கொள்ளவேண்டும் (காணி உறுதிப்பத்திரத்தை பதிவுசெய்தலின்போது காணி உரிமையாளரின் அடையாள அட்டையை எடுத்துச்செல்வது அவசியம்).

மாவட்ட காணி பதிவகத்தால் பதிவுசெய்து கொள்வது தொடர்பாக ஏதாவது பிரச்சினைகள் அல்லது குறைபாடுகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டால், இவ்வுறுதிப்பத்திரத்தினை நீங்கள் உங்கள் மாவட்டத்தில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழு (LRC) அலுவலகத்திற்கு எடுத்துச்சென்று பிரச்சினைகளை அல்லது குறைபாடுகளை பூரணப்படுத்திய பின்னர் மீண்டும் மாவட்ட காணி பதிவகத்தில் பதிவு செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்டவாறு காணி உறுதிப்பத்திரத்தை பதிவு செய்யாவிடின், இக்காணி உறுதிப்பத்திரம் செல்லுபடியற்ற ஓர் ஆவணமாகவே கருதப்படும். எனவே இப்பதிவு செய்தல் வேலையினை தவறாது மேற்கொள்ளும்படி அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.


செயலாளர்,
மலைநாட்டு புதிய கிராமங்கள்
உட்கட்டமைப்பு மற்றும்,
சமுதாய அபிவிருத்தி அமைச்சு.

பெயர் விபரங்கள் பிற்சேர்க்கை 4 (3) இல் தரப்பட்டுள்ளன. பின்னர் இவற்றை உள்ளடக்கியதாய் சட்டரீதியான உரிமம் தயாரிக்கப்பட்டு உரித்தாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. பின்னர் இதனை அவர்கள் காணி பதிவு காரியாலயத்தில் இதனை பதிவு செய்து கொள்ள வேண்டும். இது குறித்த அமைச்சின் அறிவுறுத்தல் தரப்பட்டுள்ளது.

நிலப்பங்கீடும் உரிமம் வழங்குதலும் 1990களில் இடம் பெற்றமை, மக்களின் கலந்துரையாடல்களிலிருந்து வெளிப்பட்ட ஒன்றாகும். கண்டியில், கலஹாவில், கொட்டகலை ரொசிட்டாவில் மறைந்த சௌமியமூர்த்தி தொண்டமானின் முயற்சியால், தோட்ட நிலங்கள், பெறப்பட்டு ஒரு குறிப்பிட்ட விலைக்கு விற்கப்பட்டு, புதிய வீடமைப்பு திட்டங்கள், உருவாக்கப்பட்டன. இவைகள் தோட்ட நிலங்கள் என்றாலும் அதன் பயனாளிகள் மத்தியதர வர்க்கத்தை சேர்ந்தவர்களாக இருந்தனர் (கொட்டகலை, ரொசிட்டா) இவர்களுக்கு உரிய உரிமத்தை பெற்றுக் கொண்டனர். தோட்டங்களை அபிவிருத்தி தேவைக்காக தோட்ட நிலத்தை இழந்தபோது இழந்த குடியிறுப்பாளர்களுக்கு நிலம் பகிரப்பட்டது. கண்டி மற்றும் கலஹா பிரதேசம் இது. விசேட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை, 2015இல்
வழங்கிய தற்காலிக உரிமைப் பத்திரம்.



சூழ்நிலையால் உருவாகியவொன்றாகும். ஆனால் தோட்டத் தொழிலாளர்களுக்கு சட்டரீதியாக, நிலப்பங்கீடு என்ற தற்போதைய கோரிக்கைக்கு 1990களில் இடம்பெற்ற நிலப்பங்கீடு இணைவான ஒன்றல்ல என்பது குறிப்பிடத்தக்கது.


காணி உரிமங்கள் குறித்து பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் இதனை பெற்றுக் கொண்டவர்கள், மத்தியில் பல்வேறு சந்தேகங்களும், நம்பிக்கையீனமும் தோற்றுவித்துள்ளது. இதனை தெளிவுபடுத்துமுகமாக மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கத்தின் தலைவரான எஸ்.டி.கணேசலிங்கத்தோடு ஒரு நேர்காணல் செய்யப்பட்டது. இதன் மூலம் பின்வருவன தெளிவுபடுத்தப்பட்டது.

1. 1994இல் இ.தொ.கா, மற்றும் ஐ.தே.க ஆகியோரால் லயங்களுக்கு உரித்தான பத்திரம், முகப்பு பக்கம் மாத்திரம் கிடைக்கப் பெற்றுள்ளது. பக்கம் 40இல் இது தரப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. 2015ஆம் ஆண்டில் நல்லாட்சி காலத்தில் வழங்கப்பட்ட ஹரிதபூமி பத்திரமும், தெளிவான உறுதிப்பத்திரமும் பிற்சேர்க்கை 4 (3)
3. ஜனவசமவினால் வழங்கப்பட்ட உரிமைப் பத்திரம் பிற்சேர்க்கை (3)இல் தரப்பட்டுள்ளது.
4. பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் வழங்கிய உரிமைப்பத்திரம் பிற்சேர்க்கை (5)
5. தேசிய வீடமைப்பு அதிகார சபை கடன் கொடுத்து அதன் தவணையாக செலுத்தியபோது அதற்காக பற்றுச்சீட்டுகள் வழங்கி, முழுமையாக கடனை திருப்பி செலுத்தும் போது உரிமை பத்திரம் வழங்கப்படும் என கூறப்பட்டுள்ளது.

இதோடு, தோட்டங்கள் 1992இல் கைமாற்றப்பட்டு பங்குகள், விற்பனைக்கு விற்றபோது மொத்தத்தில் 10%மான பங்குகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட்டன. இந்த பங்குகளின் மூலம், தோட்ட மேற்பார்வையில், பங்குடமையாளர்களின் வருடாந்த கூட்டங்களில் பங்கேற்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. இந்த பங்குகளுக்கு என்ன நடந்தது என்பது குறித்து மேலும் இந்த சான்று பத்திரத்திற்கும் நிலவுரி மைக்கும் நேரடியாக தொடர்பு இல்லாததது காரணமாக ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை.



கள விஜயத்தின் போது அனைத்து மாவட்டங்களுக்கும் அழைத்துச் சென்று களப் பணிகளை இலகுபடுத்திய மா. நடராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

# நிலவுரிமையை பெற்றுக் கொள்வதில் எதிர்நோக்கும் சவால்களும் சாத்தியங்களும்

நிலவுரிமையை தொழிலாளர்கள் அடைந்து கொள்ளும் செயற்பாடுகளில் மின்னல் போல் அங்குமிங்கும் சில ஒளிக் கீற்றுகள் தென்பட்டுள்ளமையை முன்னைய அத்தியாயங்கள் வெளிப்படுத்தியுள்ளன. இதனை முழுமை யாக அடைந்து கொள்வதில் இதுகாலவரைக்கும் பல்வேறு இடர்பாடுகள் மற்றும் தடைகள் காணப்பட்டன. பிரதானமாக எளிதில் அடையாளங் காணக் கூடிய மூன்று பிரச்சினைகள் உள்ளன. முதுலாவது அரசியல் ரீதியானது. இரண்டாவது, பொருளாதார ரீதியானது. மூன்றாவது சமூக ரீதியானது. இந்தத் தடைகள் (Constraints) தற்போது படிப்படியாக மாறுதலைடைந்து வருகின்றமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

வரலாற்று ரீதியாக, அரசியல் அரங்கில் 1920இற்கு பிற்பட்ட காலத்தில் தோட்டத் தொழிலாளர்கள் ஒரு சமூகமாக நிலைபெறத் தொடங்கிய காலகட்டத்தில் அரசியல் பிரதிநிதித்துவம் பற்றி பேசப்பட்ட போது இந்திய எதிர்ப்பு வெளிப்படத் தொடங்கியது. இந்த எதிர்ப்பிற்கு பின்னால் அமைந்திருந்தமை தோட்டத் தொழிலாளர்கள் தொழில் நிமித்தம் வருகைத் தந்து, இங்கேயே தங்கி விடும் நிலையில், கிராம மக்களுக்குச் சொந்தமான நிலங்கள் இவர்களுக்குப் பகிர்ந்து அளிக்கப் படும் அபாயம் இல்லையெனினும் அவர்களின் மக்கள் தொகை விரிவடையும் போது கிராம மக்களது சேனைப் பயிர்ச் செய்கைக்கு இடமில்லாது போய்விடும் என்ற அச்சம் பெரிதாக சுட்டிக் காட்டப் பட்டது. இந்த அடிப்படையிலேயே உள்ளூர் அரசியல் தலைவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது எதிர்ப்பை வெளியிட்டனர். இந்த எதிர்ப்பின் உச்சக் கட்ட வெளிப்பாடு யாதெனில் இந்தியர்களை இந்த நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்பதாகவே அமைந்திருந்தது. ''கடைசி இந்தியன் இந்த நாட்டை விட்டு வெளியேறினான் என்பதை கேட்டாலேயே எனக்கு தூக்கம் வரும்'' என்று அரச சபையிலே S.W.R.D.பண்டாரநாயக்கா ஆற்றிய உரை இதனை வெளிச்சம் போட்டு காட்டுகின்றது (R.Hoole-2023). இதே போன்று ஏனைய உள்ளூர் தலைவர்களும் முழக்கமிட்டுள்ளனர். 1964 சிரிமா சாஸ்திரி ஒப்பந்தம் நிறைவேறிய பின்னர் அன்றைய இந்திய தமிழர்களின் சனத்தொகையில் அரைவாசிப்பேர் இந்தியாவிற்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டதன் பின்னரும் 1971இல் மக்கள் விடுதலை முன்னணி (J.V.P) இந்திய விஸ்தரிப்பு வாதத்தை ஒரு பேசுப் பொருளாக்கி தோட்டத் தொழிலாளர்களை இவர்கள் இந்திய கலாட்படைகள் என அடையாளம் கண்டனர். 1920-1970 வரையான காலப்பகுதியில் பல்வேறு அரசியல் மாறுதல்கள், சர்வசன வாக்குரிமை, அரச சபை, பாராளுமன்றம் போன்றவற்றின், இந்தியர்களுக்கு வாக்குரிமை கிடைத்து அரசியல் பிரதிநிதித்துவம் என்பன கிடைத்திருந்தாலும், 'இந்திய எதிர்ப்பு' நீறுபூத்த நெருப்பாக இருந்து வந்துள்ளது. இந்த பின்புலத்திலேயே நிலவுரிமைக்கான எதிர்ப்பினை நோக்கவேண்டியுள்ளது.

1946இல் அன்றைய விவசாய அமைச்சர் உருளவள்ளி (நெவ்ஸ்பரி) தோட்டத்தில், சிங்கள கிராமத்தவர்களை குடியேற்ற எடுத்த முயற்சிக்கெதிராக அந்த தோட்டத்தில் மாத்திரமல்ல எட்டியாந் தோட்டை மாவட்டத்தில் உள்ள பல தோட்ட மக்கள் இந்த குடியேற்ற முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்தமையை உருளவள்ளி போராட்டம் என வரலாறு பதிவு செய்துள்ளது. இது வெற்றியளிக்கவில்லை யென்றாலும் தோட்ட மக்கள் தங்கள் வசிப்பிட வாழ்வாதார உரிமையை விட்டுக் கொடுக்கத் தயார் நிலையில் இல்லையென்பதை இது எடுத்துக் காட்டுகின்றது. இந்த தினமாகிய 1946 மே, 21ஆம் திகதி இன்று, சில அமைப்புகளினால் இன்று காணி தினமாக நினைவுபடுத்தப்படுகின்றது. 1977ஆம் ஆண்டு, நுவரெலியா மாவட்டத்தில் தலவாக்கலை பிரதேசத்தில் டெவன் தோட்ட நிலம் காணி பகிர்விற்காக அரசாங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவீகரிக்க முயன்றபோது, அதற்கான எதிர்ப்பானது சிவனு லட்சுமணனின் உயிர்த் தியாகத்தோடு அந்த முயற்சி கைவிடப்பட்டது. ஆனால், 1977இற்குப் பின்னால் தோட்டங்கள் அரசமயமாக்கப்பட்டதால் நிலப்பகிர்வு அதிகரித்த அளவில் இடம்பெற்றது. இதற்கு சான்று பகிர்வதாக அமைவது சிறு தோட்ட உடைமைகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அபரிமிதமான வளர்ச்சியாகும்.

இவ்விதமாக தோட்ட தொழிலாளர்களின் நிலஉரிமைக்கெதிரான நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த அதேவேளை, 1990களுக்கு பின்னர் அரசாங்க கொள்கைகளில் இவ்விடயம் குறித்து சாதகமான மாற்றங்களை காணக்கூடியதாக உள்ளது. 1993இல் ஆண்டு நுவரெலியாவில் இடம்பெற்ற ஒரு தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் நிலஉரிமை ஆவணம் ஒன்று விநியோகிக்கப்பட்டது. இந்த ஐ.தே. கட்சி கூட்டத்தில், ரணில் விக்கிரமசிங்கவும் அப்போதைய இ.தொ.கா தலைவரும் கலந்து கொண்டனர். பின்னர் இது உரித்தை உறுதிப்படுத்தும் ஓர் ஆவணம் அல்ல என அறிந்து அதனைப் பெற்றுக் கொண்ட மக்கள் அவ்வளவு திருப்தியடையவில்லை. (நுவரெலியா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற பிரதிநிதி வீ. புத்திரசிகாமணி தனிப்பட்ட முறையில் இதனை எனக்கு உறுதிப்படுத் தினார்) உரிமை ஆவண வழங்கலின் ஆரம்பமே ஏமாற்றமாக இருந்தாலும் (முத்துலிங்கம், 2023) பிற்காலத்தில் நம்பிக்கைக்குரிய வாக்குறுதிகள் பல வழங்கப்பட்டுள்ளன. 1995 செப்டம்பரில் அன்றைய எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க நுவரெலியாவில் இடம் பெற்ற பொதுக்கூட்டமொன்றில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். ''நான் பிரதம மந்திரியாக இருந்தபோது, லயக்காம்பராக்களையும் அதனோடு ஒட்டியிருந்த நிலத்துண்டுகளையும் அங்கு வசித்தவர்களுக்கு சொந்தமாக்கப்பட வேண்டும், என்ற பிரேரனை காணப்பட்டது. ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை. தற்போது அதனை நிறைவேற்ற வேண்டியது முக்கியமான தேவையாகும்.'' (மாணிக்கம், 2015, பக்கம் 19) தோட்டத் தொழில் அமைச்சர் ரத்னசிரி விக்கிரமசிங்க ''ஒவ்வொரு தோட்டத்திலும் புதிய வீடுகள் அமைக்கப்படும் எனவும் அதற்காக நிலம் ஒதுக்கப்படும் எனவும் தோட்டங்கள் தனியார்மயப்படுத்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுவதற்கு முன்னர் தோட்ட முகாமைத்துவம், இதற்கான நிலத்தை ஒதுக்க வேண்டும் எனக் கேட்கப்படும்.'' எனக் குறிப்பிட்டுள்ளார். பிரதி அமைச்சர் அத்தாவுட செனவிரத்ன ''ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 அல்லது 10 பேர்ச் காணியும் வீடு கட்டுவதற்காக கடனும் கொடுக்கப் படும்'' என குறிப்பிட்டுள்ளார். இவை 1995, ஒக்டோபர், 1ஆம் திகதி ஆற்றப்பட்ட உரைகள் ஆகும். இவை, தோட்டங்களை தனியார் மயப்படுத்த தொழிற்சங்கங்களை ஆதரவு பெற வெளிப்படுத்தப்பட்ட ஆசை வார்த்தைகள் என மாணிக்கம் (2015) குறிப்பிடுகின்றார்.

நிலவுரிமையை பொறுத்தவரை வீட்டுரிமையே, இங்கு முதன்மை பெறுவதை கவனிக்க வேண்டியுள்ளது. 1978ஆம் ஆண்டு 14ஆம் இலக்க தேயிலை தோட்டத் தொழிலாளர் (இந்தியர்) திருத்தச் சட்டத்தின் 2ஆம் சரத்தின்படி இவர்களுக்கு பிரத்தியே லயன் அறை கொடுக்கப்பட வேண்டும். பிள்ளைகளைத் தவிர, வேறு யாருக்கும் அதனை பகிர்ந்தளிக்க முடியாது. தோட்டத்திலிருந்து அவர்கள் நீக்கப் பட்டாலும் நீதிமன்ற தீர்ப்பு வரும்வரைக்கும் அர்களை வெளியேற்ற முடியாது (வாமதேவன், 2018). இந்த ஏற்பாடு காரணமாக தேயிலைத் தோட்டத்திலே தொழிலாளர்களாக இருக்கும் வரை இவர்களுக்கு கொடுக்கப்பட்ட லயத்து அறையில் வாழுகின்ற உரிமை அவர்களுக்கு உள்ளது.

வீடமைப்பு, மற்றும் வீட்டுரிமை குறித்து 1997களுக்கு பின்னர் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. தோட்ட வீடமைப்பு, உட்கட்டமைப்பு சமூக அபிவிருத்தி என்ற பெயரில் ஒரு தனி அமைச்சின் உருவாக்கம், தனி வீடுகளின் உருவாக்கத்தில் கொள்கை ரீதியான மாற்றத்திற்கு வழிவகுத்தது. இதற்கு முன்னர் இரட்டை வீடுகள் (Twin House) தோட்டங்களில் காணப்பட்டாலும் கொள்கைரீதியாக அரச வளங்களை பயன்படுத்தி வீடமைப்பு நிர்மாணங்கள் இக்காலப்பகுதியிலே உருவா கின. 1994-2014 காலப்பகுதியில் 25,000க்கு மேற்பட்ட தனி வீடுகள் பல்வேறு வீடமைப்பு திட்டங்களில் அமைச்சு, தேசிய வீடமைப்பு அதிகார சபை, சில அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாக, நிர்மாணிக்கப் பட்டன. இந்த எண்ணிக்கை அதிகரித்த வண்ணமே உள்ளன என்பது இவ்விடத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்வாதாரத்திற்கான காணி**

வாழ்வாதாரத்திற்கான காணி என்பது இதுவரையில் வெறுமனே கோரிக்கை மட்டத்திலேயே இருந்து வருகின்றது. 20பேர்ச் காணி தேவையெனவும் பயிரிடப்படாத நிலங்களை பகிர்ந்தளிக்க வேண்டும் எனவும் கோரிக்கைகள் தற்போது பரவலாக முன்வைக்கப்படுகின்றன. இத்தகைய சூழ்நிலையில் இரண்டு விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கான தினக்கூலி ரூபா 1000/- என்ற கோரிக்கை வலுவடைந்த நிலையில் தோட்ட முதலாளிமார் சம்மேளனம் இதனை வழங்க முடியாத நிலையில் இதற்கு மாற்றீடாக வெளிவாரி உற்பத்தி முறை அல்லது வருமான பகிர்வுமுறை (Out Grower System or Reveneu Sharing Model) என்ற மாதிரியை தோட்ட நிருவாகங்கள் உற்பத்திக்காக அறிமுகப்படுத்தியுள்ளது. பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகள் (Regional Plantation Companies) பலவற்றில் இம்முறை பின்பற்றப்படுகின்றது.

இம்முறைமையின் கீழ் ஒரு குறிப்பிட்ட பரப்பு அல்லது தேயிலை செடிகள் ஒரு தொழிலாளிக்கு ஒரு வருடம் அல்லது 6 மாதகுத்தகைக்கு விடப்பட்டு அந்த நிலப்பரப்புகளை பராமரித்து அதன் விளைச்சலை கம்பனி நிர்வாகத்திற்கு நிச்சயிக்கப்பட்ட விலையில் கையளிக்க வேண்டும். தேயிலை மலையின் பராமரிப்பு வேலைகளான புல் வெட்டுதல், மருந்தடித்தல், உரமிடுதல், கவ்வாத்து வெட்டுதல் போன்ற வற்றை தொழிலாளிகள் தங்களது செலவிலே செய்து முறையாக கொழுந்தை பறித்து நிர்வாகத்திற்கு அளிக்க வேண்டும். இவற்றை செய்ய தவறின் வழங்கப்பட்ட நிலப்பரப்பை எந்த நேரமும் தோட்ட நிர்வாகம் மீளவும் பெற்றுக் கொள்ளும். வழங்கப்படும் வேலை நாட்களில் தோட்டத்திலே வேலை செய்ய வேண்டும். இந்த வருமானத்தில் அவர்களுக்குரிய சேமலாப நிதி தொழிற்சங்க சந்தா போன்றவை கழிக்கப்படும். இதனால் இவர்களது வருமானம் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுகின்றது. தோட்ட நிர்வாகத்தின் மேற்பார்வை இன்றி சுதந்திரமாக இவர்கள் தங்களுக்கு விரும்பிய நேரத்தில் வேலை செய்ய வாய்ப்பு ஏற்படுகின்றது. குறிப்பிட்ட காலத்திற்கு சொந்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணி என்ற உணர்வேற்படுகின்றது. இதன் மூலம் இவர்களுக்கு முயற்சியான்மையில் (Entrepreneurship) பயிற்சி ஏற்படுகின்றது. இதனால் ஒரு சிற்றுடைமையாளர்களாக மாறுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுகின்றதென இந்த முறைமையை அறிமுகப்படுத்தி தோட்ட முதலாளிமார் சம்மேளன அதிகாரி ரொஷான் இராஜதுரை (2020) தனது அறிக்கையொன்றில் குறிப்பிடுகின்றார்.

இந்த முறைமை பல தோட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தாலும் இவை முற்றிலும் வெற்றியளித்துள்ளது அல்லது தோல்வியடைந்துள்ளது என்று சொல்வதற்கில்லை. எல்லா தோட்டங்களிலும் ஒரே மாதிரியான முறைமை பின்பற்றப்படாமை, ஒப்பந்த நிபந்தனைகள் பற்றி தொழிலாளர்களுக்கு சரியாக விளங்கப்படுத்தப்படாமை ஆகிய நடைமுறை பிரச்சினைகள் இதில் காணப்படுகின்றன.

வழங்கப்பட்ட நிலப்பரப்பு விளைச்சல் குறைவான பகுதி என்பதால், அங்கிருந்து போதிய விளைச்சலைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. தொழிலாளர் பற்றாக்குறையை போக்கவே இந்த முறைமை மாற்று உபாயமாக முன்வைக்கப்படுகின்றது. தொழிலாளர் தெரிவில் பாராபட்சம் காண்பிக்கப்படுகின்றது என்றவாறு பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவை சில இடங்களில் வெற்றி பெற்றதாகவும் (தெனியாய தோட்டம்) தோல்வியடைந்ததாக (மகாஊவா, கந்தப்பளை) உதாரணங்களாக காட்ட முடியும். இந்த முறைமை காரணமாக இவர்கள் சிற்றுடைமையாளராக மாற்றம் பெறுவதற்கான பயிற்சி ஏற்படுகின்றது என்ற அவதானம் கவனத்திற்குரியது. இரண்டாவது விடயம் தேயிலை உற்பத்தியில் தற்போது முக்கியத்துவம் வகிக்கின்ற சிற்றுடைமையாளர் முறைமையாகும். தேயிலை உற்பத்தியில் தற்போது 4 வகையானவர்கள் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

01 பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகள் (Regional Plantation Companies)

02 அரச நிறுவனங்களான; (i) மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை (Janatha Estate Development Board - JEDB)

(ii) அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் (State Plantation Corporation - SPC)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. தனியார் தோட்டங்கள் (Private Estate)

04. சிற்றுடமைகள் (Small Holdings)

வரலாற்று ரீதியாக நோக்குகையில் 1972ஆம் ஆண்டு காணிச் சீர்த்திருத்தச் சட்டம் அறிமுகப்படுத்தும் வரை அனைத்து தோட்டங்களும் தனியார் மற்றும் வெளிநாட்டு கம்பனிகள் வசமே இருந்து வந்தன. 1975ஆம் காணிச் சீர்த்திருத்த சட்டத்தின் பின்னர் வெளிநாட்டு கம்பனி களிடம் இருந்த தோட்டங்கள் அனைத்தையும் அரசாங்கம் பொறுப் பேற்று கொண்டது. அத்தோடு உள்நாட்டு தனியாருக்கு சொந்தமாக இருந்த தோட்டங்களின் உரிமையாளர் ஒருவர் 50 ஏக்கர் தோட்டத்தையே சொந்தமாக வைத்திருக்கலாம் என்ற காணி உச்ச வரம்பு நிர்ணயிக்கப் பட்டு அதற்கு மேலதிகமான காணிகளை அரசாங்கம் பொறுப்பேற்று கொண்டது.

ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மேல் இருந்தால் ஒவ்வொருவருக்கும் 50 ஏக்கர் பெற்றுக் கொள்ளலாம் என்ற வசதி இருந்தமையின் அடிப்படையில் சில தனியார் தோட்டங்கள் தற்போது 200-250 ஏக்கர் பரப்பினைக் கொண்டதாக காணப்படுகின்றன. நான்காவதாக சிற்றுடைமையானது 10 ஏக்கருக்கு குறைவாக உள்ள நிலப்பரப்பாகும். இவற்றில் தனியார் தங்களது குடும்ப அங்கத்தினரையோ அல்லது பிற தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி இந்த நிலப்பரப்பினை பராமரித்து விளைச்சலைப் பெற்று தனியார் தொழிற்சாலைக்கு சந்தை விலையில் விற்பனை செய்யலாம். 1967இல் இம்முறைமை உருவாக்கப் பட்டு தற்போது அது ஒரு பாரிய வளர்ச்சியை அடைந்துள்ளது. இத் தகைய உடைமைகள் 1980களில் ஒரு இலட்சமாக இருந்து 2020களில் நான்கு இலட்சமாக உயர்ந்துள்ளது. நாட்டின் மொத்த தேயிலை உற்பத்தியில் தற்போது 70 சதவீத பங்கினையும் பெருந்தோட்ட கம்பனிகள் 30 சதவீத பங்கினையும் கொண்டுள்ளன.

இன்றைய தோட்ட கம்பனிகள், பரந்த நிலப்பரப்பை கொண்டிருந் தாலும் தொழிலாளர் பற்றாக்குறைக் காரணமாக அவை முழுவதையும் பயன்படுத்த முடியாத நிலைமையைக் காணமுடிகின்றது. மேலும் தற்காலத்தில் பயிரிடப்படாத நிலங்களின் அளவும் அதிகமாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வதும் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் பாரிய அளவில் வீழ்ச்சிக் கண்டுவருகின்றமையும் அவதானிக்கத்தக்கது. தொழிலாளர்களின் பற்றாக்குறை வேறு பகுதிகளிலிருந்து தொழிலாளர் களை கொண்டு வருதல் போன்றவை இடம்பெற்று வருகின்றது. இத்தகைய பின்புலத்தில் நிலவுரிமை வழங்குதல் என்பது எவ்வாறு நிறைவேறும். அதற்கான பொறிமுறை எத்தகையது என்பதே இறுதியாக விடைக் காணப்பட வேண்டிய வினாவாகும்.''

உரிமைகளை பொறுத்தவரை அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் அமைச்சர்களின் கூற்றுக்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதோடு அரசியல் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்களில், தோட்டத் தொழி லாளர்களுக்கான வீட்டுரிமையை வழங்குவதை உறுதிமொழியாக அறிவித்துள்ளமையும் பதிவு செய்யப்பட்டுள்ளது.



மஹிந்த ராஜபக்ஷ

இதனை நடைமுறைப்படுத்த வேண்டுமெனில் அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானத்தின் அடிப்படையிலேயே அமைய வேண்டும். இந்த வகையில் கவனத்திற்குரியவைகளாக அமைவது 2005இல் வெளியிடப்பட்ட மகிந்த சிந்தனை என்ற தேர்தல் விஞ்ஞாபனமாகும் (மகிந்த சிந்தனை எதிர்கால நோக்கு, 2010). இதில் தோட்ட சமுதாயம் வீட்டினை சொந்தமாக கொண்ட ஒரு சமுதா யமாக உருவாக்கப்படும் என இது கூறுகின்றது. மேலும் பெருந்தோட்ட பொருளாதாரத்திற்கு அதிகம் அழுத்தம் கொடுக்கப்படும் எனவும் இதன் மூலம் சிறு உரிமையாளர்கள் மிகவும் மும்முரமாக ஊக்கு விக்கப்படுவார்கள் எனவும் குறிப்பிடப்பட்டது.



கோட்டாபய ராஜபக்ஷ

2015 கோட்டாபயவினால் வழங்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தின் இறுதி அத்தியாயத்தில் தோட்ட சனத்தொகை என்ற பகுதியில் சில உறுதிமொழிகள் வழங்கப்பட்டுள்ளன. எல்லோரும் சமமான உரிமையை அனுபவிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சமமானவர்கள் என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்பன போன்ற பல விடயங்கள் கூறப்பட்டிருந்தாலும் வீட்டுரிமை பற்றியோ நிலவுரிமை பற்றியோ இதில் ஒன்றும் குறிப்பிடப் படவில்லை. இது மகிந்த சிந்தனையிலிருந்து வேறுபட்டதொன்றாக இருந்தமை குறிப்பிட வேண்டியதாகும்.

மகிந்த சிந்தனை 2006ன் படி ஒவ்வொரு தோட்டத் தொழிலாளர்களுக்கும் ஒரு நிலத்துண்டு வழங்கப்படும் எனவும், ஏனைய பிரஜைகளைப் போல சொந்தமாக இந்த சமுதாயம் நிற்க நான் உதவி செய்வேன் எனவும் தாங்கள் வசிக்கும் வீடுகளில் வசிக்கின்ற நிலத்திற்கு சட்டரீதியான உரிமங்கள் வழங்குவதற்கு கொள்கை தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த கொடுக்கல் வாங்கல்கள் எவ்வித செலவுமின்றி மேற்கொள்ளப்படும். தற்போதைய நிகழ்ச்சித் திட்டத்தின்படி 20 வருடங்களின் பின்னர் தொழிலாளர்களுக்கு சட்ட ரீதியான உரித்து வழங்க தகுதி உள்ளவர்கள் இதனை அத்தகைய நிலங்களுக்கு நான் உரிமம் வழங்குவேன் (மகிந்த சிந்தன, 2006). ஆனால் 2010ல் தேசிய திட்டமிடல் திணைக்களம் இதனை ஒரு கொள்கை ஆவணமாக வெளியிடப்பட்ட போது இவைபற்றி அதில் ஒன்றும் குறிப்பிடவில்லை என்பது கவனிக்கத்தக்கது. 'கந்துரட்ட உதானய' என்ற மாகாண மட்டத்திலான அபிவிருத்தி முனைப்புகளில் தோட்டங்களுக்கும் கிராமங்களுக்குமிடையில் காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகளில் நிலவும் வித்தியாசங்கள் நீக்கப்படும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.


சஜித் பிரேமதாசா

இதே காலப்பகுதியில் ஒரு 'பலம் பொருந்திய தேசமும் நியாய பூர்வமான சமூகமும்' என்ற தலைப்பில் சஜித் பிரேமதாசாவின் புதிய ஜனநாயக முன்னணி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் 'மலையக மக்கள்' என்ற தலைப்பில் ஒரு அத்தியாயத்தில் நில உரிமைகள் பற்றி விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. இந்த மலையக தமிழ் மக்களின் நிலமின்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அநுரகுமார திசாநாயக்க

யையும் வீட்டுப் பிரச்சினையும் தீர்த்து வைப்போம். 7 பேர்ச் உரிமையோடு கூடிய சொந்த காணியில் வீடமைக்க வசதி செய்யப்படும். ஜனாதிபதி செயலணி ஒன்று நிறுவப்பட்டு மலையக மக்களின் வாழ்வினை உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பன போன்ற பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பிரதான கட்சிகளின் இத்தகைய நிலைப்பாடுகள் முக்கியமானது.

இந்த வகையில் அதிக முக்கியத்துவம் பெற்ற ஆவணமாக தேசிய மக்கள் சக்தியின் ஹட்டன் பிரகடனம் (22/10/2003) அமைகின்றது. காணி மற்றும் வீடமைப்பு குறித்து இப்பிரகடனத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**காணி மற்றும் வீடமைப்பு - ஹட்டன் பிரகடனம் 22.10.2023**

''பெருந்தோட்டங்களில் வசிக்கும் மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று வீடமைப்பு ஆகும். 2012/2013 தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்கள அறிக்கையின்படி அவர்களில் 67.9% வீதமானவர்கள் இன்னமும் லயன் அறைகளில் வாழ்கிறார்கள். மேலும் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி மலையகத் தமிழ் மக்கள் சுபிட்சமாக சமுதாயமென்றவகையில் அவர்களின் அபிவிருத்திக்கு உதவுகின்ற வீடமைப்புத் திட்டமொன்றின் மூலமாக அவர்களுக்கு உயிர்வாழ்வதற்குப் பொருத்தமான வீடுகளை வழங்குகின்ற வேலைத் திட்டமொன்றை ஆரம்பிக்கும். சில தோட்டங்களில் தொழிலாளர்கள் ஓய்வுபெறும்போது அவர்களை வீடுகளில் இருந்து கட்டாயப்படுத்தி வெளியேற்றுவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன. தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி அத்தகைய நடவடிக்கைகளைத் தடுக்கும் பெரும் பாலான தோட்டக் குடும்பங்கள் பணத்தையும் உழைப்பையும் செலவிட்டு தமது வீடுகளை அமைத்திருந்தபோதிலும் காணிகளைப் பதிவு செய்கின்ற அங்கீகரிக்கப் பட்ட உறுதிகள் இன்னமும் கிடையாது. உறுதிகள் இல்லாத பிரச்சினை இந்த சமுதாயத்திற்கு மாத்திரமன்றி நாட்டின் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த குடியிருப்பாளர்களும் எதிர்நோக்குகின்ற பிரச்சினையாக அமைவதோடு இந்த சிக்கலுக்கு நியாயமான தீர்வினைக் கண்டறிகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் மலையகத் தமிழ் மக்களுக்கு அவர்களின் வீடுகளில் தடைகளின்றி தொடர்ச்சியாக வசிப்பதற்கான உரிமையை தேசிய மக்கள் சக்தி உறுதி செய்கின்றது. பெருந்தோட்டப் பிரதேசங்களில் பயிர்செய்யப் படாத பிரதேசங்கள் மற்றும் கைவிடப்பட்ட காணிகளை மலையகத் தமிழ் சமுதாயத்தின் தொழிலற்ற இளைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஈடுபடுத்தும்.''

தேசிய மக்கள் சக்தியின் பிரகடனம், ஒரு முக்கிய மாற்றத்தை குறிக்கின்றது. 1971இல் அவர்கள் கொண்டிருந்த நிலைப்பாடு தற்போது மாற்றமுற்று வருகின்றது. இது அரசியல் அடிப்படையில் தொழிலாளர்கள் தமது நிலவுரிமையை பெற்றுக் கொள்வதற்கான சாத்தியங்கள் அதிகரித் துள்ளது என்பதைக் காட்டுகின்றது. பதவிக்கு வரும் எந்த அரசாங்கமாக இருந்தாலும் இந்த காணி விடயத்தில் ஒரு சார்பான நிலையை பின்பற்றக் கூடிய வாய்ப்புகள் அதிகமென நம்பலாம்.


ரணில் விக்ரமசிங்க

'நாம் 200' என்ற நிகழ்வு 02-11-2023 இடம் பெற்றபோது, சட்டரீதியான உரிமத்தோடு 10 பேர்ச் காணி தோட்டத் தொழிலாளர்கள் அனைவருக்கும் வழங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவித்தார்' (வீரகேசரி 03-11-2023).

பொருளாதாரரீதியாக முக்கியம் பெற்றதாக திகழ்வது தோட்ட முறைமையும் அதன் அமைப்பும் ஆகும். தோட்ட முறைமை பற்றி 2ஆம் அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. தோட்ட அமைப்பின் முக்கிய அம்சங்கள் அதிக நிலப்பரப்புக்கேற்ற அளவிலான தொழிலாளர்கள் தொடர்ச்சியாக தேவைப்படுவதாகும். அதைத் தக்க வைப்பதற்காக உருவாக்கப்பட்ட பொறிமுறையே வசிப்பிட தொழிலாளர்கள் என்ற பகுப்பினர் ஆவர். இவர்களுக்கு வசிப்பிட வசதி உட்பட ஏனைய வசதிகளையும் வழங்கி தோட்டத்திற்குள்ளே அடைத்து வைப்பதாகும். மிக நீண்டகாலம் தேயிலை உற்பத்திக்கு தோட்டங்கள் அளித்த பங்களிப்பிற்கு இந்த முறைமை முக்கியமானதாகும். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுரிமை சட்டரீதியாக வசிப்பிட உரிமையாகவே மட்டுப்படுத்தப் பட்டிருந்தது. தொழிலாளர்களாக இருக்கும் வரைக்கும் இவர்களுக்கு இவ்வசிப்பிட உரிமை வழங்கப் பட்டிருந்தது. இதனை, ஒரு தெளிவான உரிமம் (Clear Title Deed) என்ற வழங்குவதற்கான முயற்சிகள் எடுக்கப் பட்டபோது இயல்பாகவே இதற்கு எதிர்ப்புகள் கிளம்பின.

சட்டரீதியான உரிமம் என்கின்றபோது அதனை விற்கின்ற, அடகு வைக்கின்ற மற்றும் கை மாற்றுகின்ற உரிமைகளும் சேர்ந்தே வருகின்றன. இதனை தோட்ட நிர்வாகம் எதிர்த்தது. ஏனெனில், இத்தகைய உரிமம் வழங்கப்பட்டால் தோட்டத்தில் வெளியாரின் உள்நுழைவு அதிகரித்து பாதுகாப்பு மற்றும் வேறு பிரச்சினைகளை ஏற்படுத்திவிடும். வீடுகளை விற்று விடுவார்கள் என்ற பயம் ஏற்படுவ திலும் நியாயம் இல்லாமல் இல்லை. ஆனால் இத்தகைய எண்ணிக்கை யானது அதிகளவிலானதாக இல்லை. இரண்டாவது சொந்த வீட்டில் வசித்தால் இவர்கள் தோட்ட வேலைக்கு செல்ல வேண்டும் என்ற கட்டாயமும் இல்லாது போய்விடுகிறது. இது தற்போது நிகழ்ந்து வருகிறது. தோட்டத்திலிருந்து இளைஞர்களின் வெளியேற்றத்திற்கு கல்வித்துறையில் ஏற்பட்ட பாரிய வளர்ச்சிக் காரணமாக. இதுவரை காலம் ஐந்தாம் வகுப்பு வரையே கல்வி கற்றவர்கள் க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரம் வரை கற்றவர்களாக மாறினர். இந்த மாற்றங்களின் வலுவான மனோநில மாற்றம் தோட்டத் தொழிலா ளர்களாக தொடர்ந்திருப்பதற்கு வாய்ப்பளிக்கவில்லை. மேலும் தோட்டத்தொழில் வரலாற்று ரீதியாக ஒரு இழிவான தொழிலாக பார்க்கப்பட்டதோடு, ஏனைய சமூகத்தவர்களால் இச்சமூகம் இழிவாகவே பார்க்கப்பட்டனர். ஆகவே தோட்டத்திலேயிருந்து வெளியேற வேண்டும் என்ற ஆவலை இது துரிதப்படுத்தியது. நகர்ப்புறங்களில், வேலை தேடி தோட்டங்களிலிருந்த இளைஞர்களின் குடிப்பெயர்வு இன்று ஒரு பிரதான பிரச்சினையாக உருவாகியுள்ளது. 2021-2022 காலப்பகுதியில் கோவிட் -19 தொற்றுநோய் கொழும்பு போன்ற நகர்களில் உச்சநிலையையடைந்து பொருளாதார நடவடிக் கைகள் ஸ்தம்பித நிலையடைந்தபோது இளைஞர்கள் தோட்டங்களை நோக்கி மீள்சென்று அங்கு வாழ்வாதார வசதிகளின்றி சிரமப்பட்டபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டங்களில் காணப்பட்ட தரிசு நிலங்கள் பயன்படுத்தாத நிலங்கள் இவ்விளைஞர்களுக்கு வாழ்வாதாரத்திற்கு பங்கிடப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற ஆரம்பித்தது. இதற்கு முன்னர் 10 பேர்ச் அல்லது 20 பேர்ச் காணி வீடமைப்பிற்கு மேலாக வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வைக்கபப்பட்டிருந்தாலும் அது முற்றிலும் சாத்திய மாகாத நிலையில் 2021ஐ தொடர்ந்த காலத்தில் இது வலுவாக முன்வைக்கப்பட்டது.

**சமூக மற்றும் ஏனைய சக்திகள்**

அரசியல் மற்றும் பொருளாதார அமைப்பு ரீதியாக சாத்தியங்கள் தென்படும் அதேவேளை ஒட்டுமொத்த இலங்கை சமூகத்தின் நிலைப் பாடு என்ன என்பது ஒரு பொருத்தமான கேள்வியாகும். இலங்கையின் ஏனைய சிறுபான்மை இனங்களான இலங்கைத் தமிழர் மற்றும் முஸ்லிம்களை ஒரு தனித்துவ இனக்குழுவாக அங்கீகரிப்பதில் பாரிய எதிர்ப்புகள் இருப்பதாக தெரியவில்லை. ஆனால் பௌத்த மத பாரம் பரியத்தைக் கொண்ட பெரும்பான்மை இனத்துவ அரசியலை முன்னி லைப்படுத்தி அரசியல் செய்கின்ற நிலையில் இந்த நிலைப்பாட்டிற்கு சாதகமாக நிலையில் இருப்பார்கள் என எதிர்பார்ப்பது கடினமாகும். பொதுவாக தோட்டங்கள் வரலாற்று அடிப்படையில் கிராமத்தை அண்டியதாக அமையப் பெற்றிருப்பதால், கிராமத்தவர்கள் தோட்ட மக்களை குறைத்து மதிப்பீடு செய்கின்ற நிலையில் அவர்கள் பொரு ளாதார ரீதியாக சக்தி பெறுவதை விரும்புவார்கள் என எதிர்பார்கக முடியாது. முத்துலிங்கம் (2023), ரமேஷ் மற்றும் விஜயகுமார் (2022) ஆகியோர் தங்களது ஆவணங்களில் இதனை தெளிவாக குறிப்பிட் டுள்ளனர். "சிறுபான்மை இனத்திற்கு காணியுரிமை கோறுவது, பெரும் பான்மை மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும். இலங்கையில இத்தகைய இனத்துவ கோரிக்கைகளை முன்வைப்பது பெரும் எதிர்ப்பு களை ஏற்படுத்தும். காணியுரிமைகளின் பிரச்சாரம் என்பது எந்த வகை யிலும் முரண்பாட்டினை ஏற்படுத்தி, இனவன்முறைகளை ஏற்படுத்தி விடக்கூடாது. ஆகவே தோட்ட மற்றும் கிராமிய பொருளாதாரம் ஆகிய இரண்டும் நன்மையடையும் வகையில் காணிப் பகிர்ந்தளிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற வேண்டும்'' (ரமேஸ் மற்றும் விஜயகுமார் 2022) கொத்தணி அமைப்பு முறையும் கிராம தோட்ட ஒருங்கிணைப்பின் எதிர்விளைவு களும் என்ற தனது கட்டுரையில் முத்துலிங்கம் (1989), தோட்டங்களில் கிராமிய மக்களை ஒருங்கிணைத்து, கொத்தணி அமைப்பு முறையின் தாக்கங்களை எடுத்து விளக்குகிறார். கிராமத்தவர்கள் சொந்த வீடுகளில் வாழ்ந்து தோட்டங்களில் வசிப்பிடமற்ற தொழிலாளர் என்ற நிலையில் பங்காற்றி வருபவர்கள் அவர்களை தோட்டங்களில் குடியேறினால் உரிமை பெற்ற நிலையிலேயே அதனை ஏற்றுக் கொள்வர். எனவே இங்கு இணக்க நிலை ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. அரசாங்கம் வெளியீட்ட தேசிய வீடமைப்பு கொள்கை (2017)இல் தோட்ட கிராமிய ஒன்றிணைப்பு பற்றி பேசப்படுகின்றது. இதில் தோட்டங்களில் எல்லைப்புற நிலங்களில் கிராமத்தவர்களுக்காக வீடமைப்பு திட்டங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. கிராமிய மற்றும் தோட்ட மக்களுக்கிடை யேயான புரிந்துணர்வோடு இத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அரசாங்க கொள்கைகள் அரச கட்டமைப்பில் நிர்வாக ரீதியில் அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்டாலும் அவற்றை நடைமுறைப் படுத்துவது, அரச ஊழியர்களே. உத்தியோகத்தராட்சி (Burocracy) அதிகார வலுவேறாக்கத்தில் (Seperation of Power) ஒரு வலுவான ஒன்று. பல அரச தீர்மானங்கள் உத்தியோகத்தர்களின் மெத்தன போக்கினால் நடைமுறைப்படுத்தப்படாமல் போயுள்ளன. தோட்டத் துறையில் சுகாதார நிலையங்களை அரசு பொறுப்பேற்க வேண்டும் என்ற அமைச்சரவை தீர்மானம் 20 வருடங்களுக்கு மேலாகியும் இன்னும் இழுபறிநிலையிலுள்ளது. அரச உத்தியோகத்தர்கள் மற்றும் தோட்ட நிர்வாகிகள் தோட்ட மக்களுக்கு நில உரிமையை அளிப்பதில் பூரண ஒத்துழைப்பை வழங்குவார்கள் என எதிர்பார்க்க முடியாது. 7 பேர்ச் காணியை வீடமைப்பிற்காக பெற்றுக் கொள்வதில் அதனை நடை முறைப்படுத்தும் அமைச்சு எதிர்நோக்கும் பிரச்சினைகளை எளிதாக தீர்க்கக்கூடியதாக இல்லை. பல சந்தர்ப்பங்களில், தோட்ட நிர்வாகம் அடையாளப்படுத்தும் வீடமைப்பிற்கான நிலம் தோட்ட மக்களுக்கு ஏற்புடையதாக அமைவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக சக்திகள் என்று கூறும் போது இந்த சட்டரீதியான உரிமை பெற்றும் அனுபவிப்பதில், தோட்ட மக்கள் எத்தகு ஆர்வத்துடன் இருக்கிறார்கள் என்பதுவும் ஒரு கேள்வியாகும். மக்கள் சந்திப்பில், கிடைத்த அனுபவம் இது குறித்த தகுந்த விளக்கத்தைத் தருகிறது. ஒரு தோட்டத்தில் 155 வீடுகள் கட்டப்பட்டு, 105 காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. இவைகள் அரச அதிகாரிகளால் வலியுறுத்தப் பட்டாலும் இன்னும் காணி கச்சேரியில் பதிவு செய்யப்படவில்லை. காணி உறுதி வழங்கப்படாதவர்கள் சிலருக்கு தற்போது அவை தயார் நிலையில் உள்ளன. அவற்றை பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் எவ்வித முனைப்பையும் காட்டவில்லை. வீடு கிடைத்துள்ளது என்றும் அவை வசதியானது என்ற அடிப்படையில் ஒரு திருப்தி காணும் மனோ நிலையில் இவர்களும் இவர்களது தொழிற்சங்க தலைவர்களும் காணப்படுகின்றனர். இங்கு பண்பாட்டு அம்சங்கள் வலிமை பொருந்தியவையாக காணப்படுவதாக தென்படுகிறது. தோட்ட நிர்வாகம் அளிக்கின்ற வசதிகளையும், சலுகைகளையும் அனுபவித்த அவர்களிலேயே தங்கியிருக்கும் கலாசாரம் (Dependency Culture) ஊறிப் போய்விட்டதாகவே தென்படுகிறது. சுதந்திர தொழிலாளர்களாக இவர்களை மாற்றமடையச் செய்வது ஒரு பொறுப்புள்ள சமூக கடமையாகின்றது.

இத்தகைய தடைகளுக்கு மத்தியிலும் 7 பேர்ச் காணியில் தனி வீடுகள் என்ற வகையில் வீடமைப்புகள் பல பரவலாக தோற்றம் பெற்றுள்ளன. கிராமங்கள் என்ற கருத்துருவாக்கத்திற் கேற்ப மலையக ஆளுமைகளின் பெயர்களில் இவைகள் அடையாளங் காணப் பட்டுள்ளன. இந்த வளர்ச்சி தொடர வேண்டும். இவ்வீடமைப்புத் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக ''பெருந்தோட்டங்களுக்கான புதிய கிராம அபிவிருத்தி அதிகார சபை'' 2018இல் உருவாக்கப்பட்டது. இந்த செயல்முறை முழுமை பெற வேண்டும்.

அடுத்த கட்டமாக அமைவது வாழ்வாதாரத்திற்கான நிலப்பங்கீடு ஆகும். லயன்களை ஒட்டிய மரக்கறி தோட்டங்களை சொந்தமாக்க வேண்டும் என்ற கோரிக்கை பேசப்பட்டு வந்தாலும் அது நடைமுறைக் குட்படுத்தப்படவில்லை. 2021/22 வரவு செலவு திட்டத்தில் பயிரிடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படாத நிலங்கள், பங்கீடு செய்யப்படும் என்ற பிரேரனைகள் முன்மொழி யப்பட்டிருந்தாலும் இன்னும் அதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இத்தகைய நிலைமையில் வாழ்வாதாரத்திற்கான நிலம் குறித்த தெரிவுகள் எத்தகையவை? என நோக்குதல் வேண்டும்.

1. இவ்வளவு காலமாக கோரிக்கைகள் அரை ஏக்கர் (80 பேர்ச்), 20 பேர்ச், 15 பேர்ச் என காணக்கூடியதாகவுள்ளது. இத்தகைய நிலையில் தற்போது 10 பேர்ச் நிலம் வழங்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (02.11.2023)

2. தனி வீடுகள், தற்போதுள்ள நிலையில் 7 பேர்ச் காணித் துண்டில் கொத்தணி முறை அமைப்பில் வீடுகள் அமைத்து புதிய கிராமமாக மாற்றப்பட்டு வாழ்வாதாரத்திற்கு மேலதிகமாக 10 பேர்ச் வழங்குதல்

3. கூலி உயர்விற்கு மாற்றீடாக தற்போது நடைமுறைப்படுத்தப்படும் வெளிவாரி உற்பத்தி முறைமை, தெரிவு செய்யப்பட்ட சில தோட்டங்களில் சில தொழிலாளர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் மூலமாக சுதந்திர தொழிலாளர் என்ற நிலை யில் தங்களது வருமானத்தை அதிகரித்து கொள்ள வாய்ப்பேற் பட்டுள்ளது. ஆனால் பகிரப்பட்ட நிலத்தில் தேயிலை மாத்திரமே பயிரிடப்படலாம் என்பன போன்ற பல கட்டுப்பாடுகள் உள்ளன. முக்கியமான குத்தகை காலத்தில் இந்த நிலம் தங்களுக்கு உரியது என்ற மன உணர்வு ஏற்பட்டுள்ளது.

4. தோட்டத் தொழிலாளர்கள் அனைவரையும், சிறு தோட்ட உடை மையாளர்களாக மாற்றுவது. குறித்து தேசிய தலைவர்களும், மலையக தலைவர்களும் அறிக்கைகளை விடுத்தவண்ணமுள்ளனர். (சஜித் பிரேமதாசா, மனோ கணேசன், திகாம்பரம், 2022/23) இதனை நடைமுறைப்படுத்தல் என்பது மிகுந்த சவால்களுக்குரியது. இச்சவால்கள் எத்தகைய? அதனை எதிர்கொள்வது எவ்வாறு என்பதே அடுத்து வரும் அத்தியாயத்தில் கலந்துரையாடப் படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# தோட்டத் தொழிலாளர்கள் சிற்றுடைமையாளர்களாக மாறுதல்

இலங்கையில் தேயிலை உற்பத்தி இரண்டு நிறுவனங்களின் முகாமைத் துவங்களினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதில் ஒன்று தோட்ட முறைமை (Estate System) மற்றது சிற்றுடைமையாகும். ஆரம்ப கால முதல் இந்த முறைமை இரண்டிலும், உற்பத்தி இடம்பெற்று வந்தாலும், நீண்ட காலம் தோட்ட முறைமையே முக்கியத்துவம் பெற்றவொன்றாக காணப்பட்டது. ஆனால் தற்போது சிற்றுடைமை முறைமை முக்கியத்துவ முள்ளதாக மாறி வருவதை காணக்கூடியதாக உள்ளதோடு, எதிர் காலத்தில் அதுவே முழுமையான பங்கினை வகிக்கும் என சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ஆய்வறிக்கையொன்று எதிர்வு கூறியுள்ளது. (I.L.O.Reports 2017) இலங்கையில் மாத்திரமல்லாமல் தேயிலை உற்பத்தி செய்யப்படும் பல நாடுகளில் இப்போக்கு காணப்படுகின்றது. தேயிலை, ஏற்றுமதியில், முதலிடம் வகிக்கும் கென்யா மற்றும் தெற்காசி யாவில் நேபாளம் ஆகிய நாடுகளில் இம்முறைமை முக்கியத்துவம் உள்ளதாக காணப்படுகிறது (ILO and South Asia Reports 2017).

ஒரு தெளிவினைப் பெற்றுக் கொள்வதற்காக இந்த முறைமையின் பிரதான அம்சங்களை குறிப்பிடுவது பொருத்தமான ஒன்றாகும் வரைவிலக்கணத்தின்படி, தோட்டங்கள் எனப்படுவது 10 ஏக்கர் (4 ஹெக்டயர்களுக்கு) மேற்பட்டதாய் 20 வசிப்பிட தொழிலாளர்களை கொண்டதாகும். மாறாக, சிற்றுடைமை என்பது 10 ஏக்கர்களுக்கு (4 ஹெக்டயர்) குறைவானதாக குடும்ப உழைப்பாளர்களை மையமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதாக அமைந்துள்ளது. தோட்டங்கள் பெரிய அளவில் தேயிலை உற்பத்தி மற்றும் பதப்படுத்துதல் என்பவற்றிற்காக தொழிற்சாலை களையும், ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட முகாமைத்துவ கட்டமைப்பை கொண்டதாக ஏற்றுமதி நிறுவன அமைப்புகளோடு தொடர்புகளை கொண்டதாக காணப்படுகிறது. சிற்றுடைமையாளர்கள், தாமே உற்பத்தி செய்து, தமது விளைச்சலை, குறித்த தொழிற்சாலை ஒன்றிற்கு அனுப்பி விற்பனை செய்வதோடு அவர்களுடைய தொழிற்பாடு நிறைவிற்கு வருகின்றது. தமது விளைச்சலை பச்சை கொழுந்தை (Green Leaf) அன்றைய சந்தை விலையில் விற்று பெறுகின்ற வருமானத் தோடு முடிவு பெறுகின்றது. தோட்ட நிலைமைகள் முற்றிலும் வேறு பட்டதாகும். பாரிய நில அளவு, அதிக அளவிலான தொழிலாளர்கள் கடுமையாக மேற்பார்வை செய்யப்பட்ட உற்பத்தி, சேகரிப்பு, தொழிற் சாலையில் பதப்படுத்தல் (Made Tea)அவற்றை கம்பனி முறைமையின் தலைமைகளுக்கு அனுப்புதல் என பலவகைப்பட்ட தொழிற்பாடுகள் இங்கு இடம்பெறும். கம்பனியல்லாத தனியார் தோட்டமாயின் (Private Estate) இதன் விளைச்சலை தேயிலையாக மாற்றி, ஏலவிற்பனைக்கு அனுப்புதல் என்றவகையில் சில மாற்றங்களோடு இயங்குகின்றதை அவதானிக்கலாம்.

இலங்கையில், தேயிலைத் துறை 2.5 மில்லியன் பேரை தொழிற்படையினராக கொண்டுள்ளது. தேயிலையை மாத்திரமல்லாது வேறு பயிர்களையும் உற்பத்தி செய்கின்ற சிற்றுடைமையானது மொத்த தேயிலை நிலத்தில் 60%ஐயும் உற்பத்தியில் 70%க்கும் வகை கூறுகிறது. பெரிய அளவிலான தோட்டங்கள் 40%மான தேயிலை நிலங்களையும், 29%மான உற்பத்தியினையும் கொண்டதாக திகழ்கிறது. இதனாலேயே சர்வதேச தொழிலாளர் அமைப்பின் அறிக்கை தேயிலை கைத்தொழிலின் எதிர்காலம் சிற்றுடைமைகளிலேயே தங்கியுள்ளது என குறிப்பிடு கின்றது (ILO Report - 2017). தேயிலை உற்பத்தியானது கடந்த காலத்தில் தளம்பல் நிலையில் 300 மில்லியன் மெட்ரிக் தொன் நிறைகொண்ட தாகவும், நிலப்பரப்பு ஏறக்குறைய 200,000 ஹெக்டயர் நிலங்களை கொண்டதாககவும் காணப்படுகிறது. அட்டவணை 6.1 இது குறித்த புள்ளி விபரங்களை தருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை 6.1**

**தேயிலை நிரப்பரப்பு - உரிமை அடிப்படையில் (ஹெக்டயர்)**

| ஆண்டு | தோட்டம் | சிற்றுடைமை | மொத்தம் |
|---|---|---|---|
| 2006 | 97,587 | 117,992 | 215,579 |
| 2007 | 90,752 | 119,492 | 210,244 |
| 2008 | 92,108 | 119,768 | 211,876 |
| 2009 | 88,624 | 120,009 | 208,633 |
| 2010 | 84,119 | 120,500 | 204,619 |
| 2011 | 85,440 | 120,664 | 206,104 |
| 2012 | 82,065 | 120,955 | 203,020 |
| 2013 | 81,141 | 121,267 | 202,408 |
| 2014 | 81,684 | 121,429 | 203,113 |
| 2015 | 81,099 | 121,740 | 202,839 |
| 2016 | 80,055 | 121,967 | 202,022 |
| 2017 | 78,968 | 122,169 | 201,137 |

மூலம்: தோட்டப் பயிர்கள் பற்றிய புள்ளி விபரத் தகவல்கள்। தோட்டக் கைத்தொழில் அமைச்சு - 2017

இந்த அட்டவணை, 10 ஏக்கருக்கும் குறைவான சிற்றுடைமைகளுடன், 4 ஹெக்டயருக்கும் கூடியதும் 20 ஹெக்டயருக்கு உட்பட்ட சிறு தோட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது. சிற்றுடைமைகள் (Small holdings) தேயிலை சிற்றுடைமை அபிவிருத்தி அதிகார சபையினாலும், சிறுதோட்டங்கள், இலங்கைத் தேயிலை சபையின் தேயிலை ஆணையாளராலும் நிர்வகிக்கப்படுகின்றன.

காலி, மாத்தறை மாவட்டங்களில் 64.4%மான சிற்றுடைமையாளர்கள் காணப்படுகின்றனர். ஏறக்குறைய 1/3 பகுதிக்கும் சற்று குறைவான வர்களே ஏனைய ஐந்து மாவட்டங்களில் காணப்படுகின்றனர்.

சிற்றுடைமைகளின் மாவட்டரீதியான பரப்பும் மற்றும் அவற்றின் அளவுகள் அட்டவணைகள் 6.2 மற்றும் 6.3 என்பவற்றில் தரப்பட்டுள்ளன. இங்கு பிரதான மாவட்டங்களே தரப்பட்டுள்ளன என்பது கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை 6.2**

**மாவட்ட அடிப்படையில் தேயிலை சிற்றுடைமைகளின் பரப்பு**

| | 1983 | | 2005 | |
|---|---|---|---|---|
| மாவட்டங்கள் | எண்ணிக்கை | பரப்பு (ஹெ) | எண்ணிக்கை | பரப்பு (ஹெ) |
| இரத்தினபுரி | 17,713 | 9,818 | 97,984 | 28,232 |
| காலி | 36,479 | 13,603 | 90,524 | 25,325 |
| மாத்தறை | 27,964 | 13,342 | 67,613 | 22,971 |
| களுத்துறை | 1,843 | 881 | 38,263 | 7,587 |
| கண்டி | 40,368 | 19,269 | 30,747 | 12,486 |
| பதுளை | 13,171 | 7,030 | 29,679 | 7,863 |
| கேகாலை | 6,080 | 3,242 | 19,637 | 5,753 |
| நுவரெலியா | 13,763 | 6,559 | 17,547 | 5,971 |
| *ஏனையவை | 2464 | 2025 | 5229 | 2086 |
| மொத்தம் | 159,865 | 75,769 | 397,223 | 118,274 |

மூலம் : தோட்ட கைத்தொழில் அமைச்சு (2017) தோட்டப் பயிர்கள் பற்றிய புள்ளி விபரத் தகவல்கள்.

*ஏனையவை : மாவட்டங்கள், கொழும்பு, கம்பஹா, குருநாகலை, மாத்தளை, மொனராகலை, ஹம்பாந்தோட்டை

அட்டவணை 6.2 பல உண்மைகளை எடுத்துக் காட்டுகின்றன. 1983இல் 159, 865 ஆக காணப்பட்ட எண்ணிக்கை, 2005இல் 397, 223 ஆக 67.35% அதிகரிப்பினை காட்டியுள்ளது. இது மேலும் அதிகரித்துச் சென்று தற்போது 450,000 என்ற எண்ணிக்கையை எட்டிப்பிடித்து கிட்டத்தட்ட மூன்று மடங்கு வளர்ச்சியை காட்டியுள்ளது. (1983-2023) இந்த எண்ணிக்கையை மாவட்ட அடிப்படையில் பார்க்கும்போது 2005இல் அதிக எண்ணிக்கையை கொண்ட மாவட்டங்களான இரத்தினபுரி, காலி ஆகிய சிலமாவட்டங்களில் அதிகரித்துள்ள நிலையில் கண்டி மாவட்டத்தில் 40,368 இலிருந்து 30,747க்கு குறைவினை காட்டுகின்றது. தென் மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தில் மலையகத் தமிழர்கள் மிகக் குறைவாக வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. கண்டி மாவட்டத்தை தவிர ஏனைய மாவட்டங்கள் அனைத்திலும் பரப்பை, பொறுத்தவரை அதிகரிப்பை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 6.3 தேயிலை சிற்றுடைமைகளும் அவற்றின் பரப்பும் - மாவட்ட அடிப்படையில்

| | மாவட்டம் | < 1/2 ஹெ | | 1/2 - 1 ஹெ | | 1- 2 ஹெ | | 2- 5 ஹெ | | 5 ஹெ > | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | பரப்பு | எண்ணி | பரப்பு | எண்ணி | பரப்பு | எண்ணி | பரப்பு | எண்ணி | பரப்பு | எண்ணி | பரப்பு |
| 01 | இரத்தினபுரி | 87,070 | 17,674 | 7910 | 5317 | 1880 | 2419 | 875 | 2539 | 249 | 2492 | 97,984 | 30,441 |
| 02 | காலி | 79,432 | 15,361 | 8293 | 5640 | 1840 | 2372 | 743 | 2122 | 213 | 1933 | 90,524 | 27,427 |
| 03 | மாத்தறை | 58,470 | 12,140 | 6835 | 4647 | 1296 | 1654 | 720 | 2116 | 292 | 4860 | 67,613 | 25,417 |
| 04 | களுத்துறை | 35,793 | 5,441 | 1927 | 1268 | 396 | 497 | 112 | 312 | 35 | 305 | 38,263 | 7,823 |
| 05 | கண்டி | 25,457 | 5,329 | 3345 | 2258 | 1094 | 1407 | 559 | 1599 | 292 | 5465 | 30,747 | 16,058 |
| 06 | பதுளை | 26,989 | 4,953 | 1747 | 1191 | 574 | 737 | 267 | 737 | 102 | 1402 | 29,679 | 9,020 |
| 07 | கேகாலை | 17,333 | 3,264 | 1680 | 1142 | 400 | 508 | 163 | 479 | 61 | 700 | 19,637 | 6,093 |
| 08 | நுவரெலியா | 15,270 | 2,936 | 1663 | 1082 | 302 | 387 | 177 | 536 | 135 | 2264 | 17,547 | 7,205 |
| | *ஏனையவை | 4,478 | 884 | 437 | 305 | 136 | 174 | 99 | 290 | 79 | 1189 | 5,229 | 2845 |
| | மொத்தம் | 350292 | 67,982 | 33,840 | 22,850 | 7,918 | 10,155 | 3715 | 10,732 | 1458 | 20,610 | 397,223 | 132329 |
| | % | 88.2 | 51.4 | 8.5 | 17.3 | 2.0 | 7.7 | 0.9 | 8.1 | 0.4 | 15.6 | 100 | 100 |

மூலம் : தோட்ட பயிர்கள் பற்றிய புள்ளிவிபரத் தகவல்கள்

தோட்ட கைத்தொழில் அமைச்சு (2017)

*ஏனையவை - கொழும்பு, கம்பஹா, குருநாகலை, மாத்தளை, மொனராகலை, ஹம்பாந்தோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு ஹெக்டயர்களுக்கு அல்லது 10 ஏக்கருக்கு குறைவானவை சிற்றுடைமை என்ற நிலையில் ஒவ்வொன்றினது பரப்பும், மாவட்ட அடிப்படையில் எவ்வாறு காணப்படுகின்றது என்பதை அட்டவணை 6.3 விளக்குகின்றது.

அட்டவணை 6.3இலிருந்து மிகத் தெளிவாக வெளிப்படுவது யாதெனில் 397,223 எண்ணிக்கைக் கொண்ட சிற்றுடைமையாளர்களில், 1/2 ஹெக்டர் அல்லது 2 ஏக்கருக்கும் குறைவாக உள்ளவர்கள் 88.2% மானவர்கள் என்பதாகும். 2 ஏக்கருக்கும் 4 ஏக்கருக்கும் இடைப்பட்ட பரப்பினைக் கொண்டவர்கள் 8.5% ஆகும். 4 ஏக்கருக்கும் 8 ஏக்கருக்கும் இடைப்பட்ட பரப்பினை கொண்டவர்கள் 2%மானவர்கள் ஆவர். 8 ஏக்கருக்கும், 12.5 ஏக்கருக்கும் இடைப்பட்டவர்கள் 1%க்கும் குறை வானவர்கள் ஆவர். ஏறக்குறைய 96%மானவர்கள் 12.5 ஏக்கருக்கும் (4 ஹெக்டயர்) குறைவானவர்கள் இச்சிற்றுடைமையாளர்கள் சிறு தோட்ட அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்து அரச உதவிகளை பெற்றுக் கொள்கிறார்கள். இவர்கள் தேயிலையை மாத்திரம் பயிரிடாது ஏனைய பணப் பயிர்களையும் பயிரிட்டு தமது வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்திக் கொள்கின்றனர் அட்டவணை 6.2இன்படி மொத்த பரப்பு 118, 2 74 ஹெக்டர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் அட்டவணை 6.3இன் படி 132, 329 ஹெக்டயரில் இந்த மேலதிகமனா 14, 055 ஹெக்டர், 2005 புள்ளி விபர ஆய்வின்படி கைவிடப்பட்ட அல்லது புறக்கணிக்கப்பட்ட பரப்புகளாகும் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. இதிலிருந்து சிற்றுடைமையாளர்கள் அனைவரும் தங்களுக்கு உரித்தான நிலத்தை முழுமையாக பயன்படுத்தவில்லை என தெரிகிறது. அத்தோடு இரத்தினபுரி, மாத்தளை, காலி மற்றும், களுத்துறை ஆகிய மாவட்டங்களில் அதிகரிப்பு காணப்பட்ட வேளை மத்திய மாகாணத்தில் நுவரெலியா, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் மொத்த பரப்பிலும் வீழ்ச்சியினை காணக்கூடியதாக உள்ளது. சிற்றுடமைகளின் சராசரி உடைமை 0.85 ஏக்கர் என மதிப்பீடுகள் குறிப்பிடுகின்றன.

கென்யா நாட்டினது அனுபவமும் ஓரளவிற்கு இலங்கை நிலவரத் தோடு ஒத்ததாக உள்ளதாக சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் (ILO) ஆய்வறிக்கைகள் வெளிப்படுத்துகின்றன. மிக முக்கியமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடு யாதெனில் நிரம்பல் சங்கிலியில் (Supply Chain) நுகர்வு சந்தையோடு கொண்ட தொடர்பில், சிறு உடைமையாளர்கள் பிணைக்கப் பட்டுள்ளமையாகும். கென்யா தேயிலை அபிவிருத்தி அதிகார சபையானது (Kenya Tea Development Authority) சிறுதோட்ட உடை மையாளர்களை நிர்வகிக்கின்ற ஒன்றாகும். இலங்கையில் காணப்படும் சிற்றுடைமை அபிவிருத்தி அதிகார சபையை போல. (Tea Small Holdings Development Authority - TSHDA) இங்கு இது அரசாங்க நிறுவனமாக செயல்பட கென்யாவில் ஒரு தனியார் கம்பனியாக அது பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்தோடு இது பல்தேசிய கம்பனிகளோடு நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளது. சிற்றுடைமையாளர்கள் இக்கம்பனியில் பங்குதாரர்களாகவும் உள்ளனர். ஏற்றுமதியாளர், தரகர்கள், கலவையாளர், பொதியிடுபவர்கள் என பலர் சந்தையோடு நிறுவனரீதியாக தொடர்பு கொண்டவர்களாக திகழ்கின்றனர். இலங்கையில், கொழுந்து இலைகளை சேகரிப்போர் கொள்வனவு நிலையங்கள், கொள்வனவு தேயிலை தொழிற்சாலைகள் (Bought Leaf Factory) என உற்பத்தியாளர்கள் தொழிற்சாலைகள் என்ற அளவிலேயே இந்த தொடர்பு காணப்படுகின்றது. இதற்கு பின்னர் தேயிலை தூளாக (Made Tea) ஆக்கப்பட்டு, சந்தை தொடர்புகள் தோட்ட முறைமையில் காணப்படுவதைப் போல ஏல விற்பனை, கலவையிடுதல், பொதியிடல் போன்ற அதற்குரிய நிறுவனங்கள் மூலமாக இடம்பெறுகின்றன.

சிற்றுடைமையில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விடயம் தனக்கு வகை கூறும் வேலையாட்கள் (Own Account Workers) கொடுப்பனவு இல்லாத குடும்ப வேலையாட்கள் (Unpail Family Worker) சமயாசமய வேலையாட்கள் (Casual Workers) ஆகிய மூன்று பிரிவினரை கொண்டிருப்பதாகும். முதலிரு பிரிவினரும் உரிமையாளர்கள் ஆகவும், ஏனையவர்கள், தேவைப்படும் போது வேலைக்கு வந்து செல்பவர்கள் ஆகவும் இருப்பார்கள். இந்த மூன்று பிரிவினருக்கும் ஏனைய தோட்ட தொழிலாளர்கள் போல எவ்வித தொழிற் பாதுகாப்புமில்லை. ஏனெனில் அவர்கள் தொழிலாளர்கள் போல் கருதப்படுவதில்லை. இவர்களது பிரச்சினைப் பற்றி அவ்வப்போது குரல் எழுப்பப்பட்டுள்ளது. சிற்றுடைமைகளில் சமயாசமய தொழிலாளர்களும் சிறுதோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களும் சிலவேளைகளில் ஒன்றாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கப்படுகின்றனர் (அருள்கார்க்கி, 2022). சிறு தோட்டங்கள் என்பது 10 ஏக்கருக்கும் 50 ஏக்கருக்கும் உட்பட்ட தனியாருக்கு சொந்தமான தோட்டங்கள் ஆகும். இங்குள்ளவர்கள் வசிப்பிட தொழிலாளர்கள். தோட்ட முறைமையிலேயே இவர்கள் நிர்வகிக்கப்படுகின்றனர். நிலத்தின் அளவைப் பொறுத்தவரை 2020ஆம் ஆண்டில் இந்த சிறு தோட்டங்களின் பரப்பு மொத்தத்தில் 0.53% ஆகும். அரச தோட்டங்கள் கீழ்வருவது 0.25ஆகும். பிராந்திய கம்பெனிகளின் கீழ் 25.37மும் சிற்றுடைமைகளின் கீழ் 73.85%மும் ஆகும் (அருள்கார்க்கி 2022).

இங்கு தனியார் சிறுதோட்டங்கள் பற்றி குறிப்பிடுவது பொருத்தமானது. 1972ஆண்டு நிலச்சீர்த்திருத்த சட்டத்தின் 50 ஏக்கர் நில உச்ச வரம்பின்படி தனியார் தோட்டங்களை அரசு பொறுப்பேற்றது. இந்த வரம்பிற்கு உட்பட்டவர்கள், தங்களது பிள்ளைகளுக்கு தங்களது மேலதிக நிலத்தை பிரித்து கொடுத்ததன் மூலம் இந்த 50 ஏக்கரைக் கடந்து 200 ஏக்கர் வரை தனியார் தோட்டங்கள் செயற்படுவதை காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த சிறுதோட்டங்களுக்கு சொந்தக்காரர்களாக பலர் இந்தியர்கள் சுதந்திரத்திற்கு முன்னரே சொந்தமாக இருந்துள்ளனர். இன்னும் அந்த உடைமை தொடர்கிறது. இது குறித்த அட்டவணை ஒன்று பிற்சேர்க்கையாக தரப்பட்டுள்ளது. (பிற்சேர்க்கை) இந்த தனியார் தோட்டங்களுக்கு அரச முதலீடுகள் - பாதையமைப்பு வீடமைப்பு போன்றவற்றிற்கு செல்வது கிடையாது. அங்குள்ள தொழிலாளர்களின் வாழ்நிலை, வசிப்பிட வசதி என்பன மிகவும் துயர்மிக்கது. இது குறித்து பல சந்தர்ப்பங்களில் பேசப்பட்டிருந்தாலும் ஒரு கொள்கைத் தீர்மானம் ஒன்று இதுவரை எடுக்கப்படவில்லை என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

சிற்றுடைமைகளை தோட்டங்களோடு ஒப்பிடுகையில் பலவிதத் தடைகளை எதிர்நோக்குகின்றது. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ICO - அறிக்கை 202...) ஒன்று, இவற்றை பட்டியலிடுகின்றது. ஆரம்பத்தில் விரிவாக்கல் வசதிகளை போதியளவு, அடைந்து கொள்ள முடியாமை, உள்ளீடுகளான, உரம், மருந்து உபகரணம் போன்றவற்றிற்கு கடன் பெறல், நல்ல பயிரிடும் பொருட்கள், இடைத்தரகர்களின் சுரண்டல், பச்சைக் கொழுந்தை (Grealeaf) போக்குவரத்து செய்தல், பதப்படுத்தல் வசதிகள் கொழுந்து பறிப்பவர்களுக்கும், பதப்படுத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேயிலை தொழிற்சாலைகளுக்கும் இடையிலான தொடர்புகள் குறைவாக இருத்தல் போன்ற தடைகள் தற்போது குறைவடைந்து பயிரிடுதல் குறித்து பயிற்சி பற்றிய அறிவு குறைவாக இருத்தல், விரிவுபடுத்தல், விலைகள் வர்த்தக செயல்முறைகள், குறை உற்பத்தித் திறன், பேண்தகு விவசாயம் (Sustainable Agriculture) போன்றவை, பிரதான பிரச்சினைகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய பிரச்சினைகள் அனைத்து நாடுகளின் காணப்படும் சிற்றுடைமையாளர்களுக்கும் பொதுவானவைகளாகும். இங்கு முக்கியமாக கோடிட்டு காட்ட வேண்டியது உற்பத்தி செலவும்। தேயிலைக்கு கிடைக்கின்ற விலையுமாகும். உற்பத்தி செலவு, அதிகமாக இருப்பின் நிர்ணயிக்கப் பட்ட விலையில் விற்க வேண்டிய சூழ்நிலையில், அது உடைமையாளர்களின் வருமானத்தை பாதிப்பதாக அமைந்துள்ளது.

சமூகரீதியாக பார்க்கையில் இங்கு பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. சமயாசமய தொழிலாளர் குறைவு என்பதால் குடும்ப உறுப்பினர்களே தொழில் செய்ய உந்தப்படுகின்றனர். இதில் அதிகம் பாதிக்கப் படுபவர்கள் பெண்கள் ஆகும். அவர்களது பங்களிப்பு மதிக்கப்படுவதில்லை. பெரும்பாலும், உடைமைகள் ஆண்களின் பெயரில் பதிவு செய்யப்படுவதால் பயிற்சி, வளங்களை பெற்றுக் கொள்வதில் பெண்களின் பங்கு குறைவாகும். சிறுவர்கள் 14 வயதிற்குட்பட்டவர்கள் வேலை செய்வது ஒரு குறைபாடாக கருதப்பட்டு, அது அவர்களின் கல்வியை பாதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் சர்வதேச தொழிலாளர் தாபன ஆய்வில் 2017 இவற்றுக்கான உறுதிப்படுத்தப்பட்ட முறைப்பாடுகள் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

அருள்கார்க்கியின் கட்டுரையில் (2022) சமயாசமய தொழிலாளர்களின் சேமநலன்பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளது. தனக்கே வகை கூறும் தொழிலாளி அல்லது உடைமையாளர்களின் நிலை செழிப்பாக உள்ளது என்பதை விக்டர் ஐவன் (2023) பின்வருமாறு பதிவிடுகிறார். ''ஹினுதும (காலி) போன்ற பகுதிகளில் வாழும் சிங்கள சிறு தோட்ட உடைமையாளர்களை பார்க்கும்போது நெற் செய்கை உள்ளிட்ட ஏனைய விவசாயிகளை விட அவர்கள் செல்வந்தவர்களாக உள்ளனர். மின்சாரம் இல்லாத தோட்டப்பகுதிகளில் மின்பிறப்பாக்கிகளை கொண்டு, மின்சாரத்தை பெற்று கொள்ளுகின்றனர். வாகனங்களை பாவிக்கின்றனர். தரமான வாழ்க்கையை வாழுகின்றனர்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கூறும் இவர், தனது கட்டுரையில் மலையகத் தமிழரை சிறுதோட்ட உடைமையாளராக மாற்றுவதன் அவசியம் பற்றி எடுத்துரைக்கிறார் (விக்டர் ஐவன் - 2023).

தற்போது தோட்டத் தொழிலாளர்களாக, இருப்பவர்கள் சிறுதோட்ட உடைமையாளர்களாக மாறுவார்கள் எனில் பின்வரும் உரிமைகள் சலுகைகளை இழக்க நேரிடும் "சட்டரீதியாக குடும்ப வேலை வாழ்நாள் முழுதும், பாதுகாக்கப்பட்ட வருடத்திற்கு 300 நாள் வேலை, (18-60 வயது ஓய்வு பெறும் வரை) ஊழியர் சேமலாப நிதி (EPF), ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி (ETF) சேவைக்காலப்பணம் (Grautity) ஒவ்வொரு வருடமும் வழங்கப்படும். 20 நாட்கள் விடுமுறைக் கொழுப்பனவு, ஒவ்வொரு வருடமும் 14 நாட்கள் சம்பளத்துடனான நோய்க்கான விடுமுறை வரவு, போனஸ், இலாபபோனஸ், பிரசவ நன்மைகளுக்கான 3 மாத சம்பளத்துடனான விடுமுறை இலவச தாய் மற்றும் சேய் பராமரிப்பு (5 வயது வரைக்கும்) இறப்பின் போது, பணம் மற்றும் வேலைகள் உதவி, பால்மா மற்றும் அரிசி, இலவச மருந்து தடுப்பூசிகள் விட்டமின் என்பவை 3 மாதத்திலிருந்து 5 வயது வரைக்கும் இலவசமாக வழங்குதல் போன்ற நன்மைகள் தோட்டங்களில் வழங்கப்படுவதாக ரொஷான் ராஜதுரை (2016) பதிவிடுகிறார்.

ஆகவே, தோட்ட முறைமையிலிருந்து சிற்றுடைமையாளர்களாக மாறினால் இவற்றினை முற்றாக இழக்க நேரிடும். அதைவிட, வெளி வாரி உற்பத்தி முறை, அல்லது வருமான பகிர்வு முறையில் அவர்கள் 10 நாட்களுக்கு தொழிலாளர்களாக இருப்பர். ஏனைய நாட்களுக்கு சுதந்திர தொழிலாளர்களாக இருப்பர், தோட்ட முறை மைக்கு உட்பட்டு இருப்பதால் தோட்டங்கள் வழங்கும் சலுகைகள், உரிமைகள் என்பவற்றை அனுபவிப்பதற்கு உரித்துடையவர்களாக இருப்பர், என்பதே ரொஷான் ராஜதுரையின் நிலைப்பாடு ஆகும்.

இவ்வளவு காலமும் தொழிலாளர்களாக இருந்தமையினால் தொழிற்சங்கங்கள் இவர்களது உரிமைகள், சலுகைகள் என்பவற்றிற்காக நிர்வாகத்துடன் மற்றும் அரசாங்கத்துடன் பேரம் பேசி அவற்றைப் பெற்றுக் கொடுத்தன. இவர்கள், தொழிலாளர்கள் அல்லாத நிலையில், தொழிற்சங்கங்களின் பங்கு குறைந்து செல்லும் அல்லது இல்லாது போகும் நிலை ஏற்படலாம். இந்த மக்களின் அரசியல் அமைப்பினையும் தொழிற்சங்கங்களையும் அடியொட்டி உருவானவை. எதிர்காலங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் அமைப்புகள் மற்றும் ஏனைய சமூக, பொருளாதார அமைப்புகளாக உருவாக வாய்ப்புகள் அதிகமாகும். கிராமங்களில் காணப்படுகின்ற அமைப்புகள் (Community Based Organisations) போல உண்மையான சமுதாயம் சார்ந்த அமைப்புகள் உருவாகலாம்.

தொகுப்பாக பார்க்கையில், ஏற்கனவே சுட்டிக் காட்டிய 3 தெரிவு களில் ஒன்று அதாவது 10 பேர்ச் நிலம் என்பது வீடும், வாழ்வாதாரம் என்றிருந்தாலும் அது எத்தகையதாக அமையும் என்பதை தீர்மானிக்க வேண்டியுள்ளது. மற்றது வெளிவாரி உற்பத்தி முறைக்கு சென்று அதன் பின்னர் படிப்படியாக சிற்றுடைமையாளர்களாக செல்லல் என்பதாகும். ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த முறைமை மாறு பட்டதாக அமைந்துள்ளது. இரத்தினபுரி, காலி, மாத்தளை பகுதியில் ஏற்கனவே சிற்றுடைமைகள் அறிமுகமான நிலையில். தோட்டத் தொழிலாளர்களும் அதில் ஓரளவு ஈடுபாடு காட்டியுள்ள நிலையில் இதனை முதல் கட்டமாக மேற்கொள்ள வாய்ப்பு அதிகம், ஏனைய மாவட்டங்கள், இதன் சாத்தியப்பாடு பற்றி ஆராயப்பட்டு படிப்படியான மாறுதலை நோக்கி செல்லலாம். இங்கு பல பிரச்சினைகள் தலைத்தூக்க வாய்ப்புள்ளது. தோட்டத் தொழிலாளர்கள் தோட்டத்தில் பதிவு உள்ள வர்கள். ஆனால் அங்கு வசிக்காதவர்கள் தோட்டத்தை வாழ்விடமாகக் கொண்ட உத்தியோகத்தர்கள் அத்தோடு சிறுதோட்டங்களில் வாழ் பவர்கள், அங்கு தொழிலாளர்கள் மற்றும் தொழில் செய்யாதோர் என்ற பிரிவினர் அரசாங்க கொள்கை எனும் போது இது அனைவருக்கும் பொதுவானதாகவும் சமநீதி கொண்ட தாகவும் அமைய வேண்டும். ஜனாதிபதி ஆணைக்குழு அல்லது குழு ஒன்று அமைக்கப்பட்டு அதன் கீழான ஒரு செயலணிக்கு இந்தப் பணி ஒரு குறித்த கால அட்டவணையுடன் ஒப்படைக்கப்பட வேண்டும். அத்தோடு மக்களை இதற்காக தயார்ப்படுத்த வேண்டும். இவ்வளவு காலமும் தங்கியிருக்கும் நோயில் (Dependency Syndrome) பீடித்திருக்கும் இவர்களை அந்த நோயிலிருந்து மீட்டெடுக்க வேண்டும்.

இந்த கொள்கைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பெரும்பான்மை சமூகத்தின் தேச சக்திகளை ஒன்று திரட்டல் வேண்டும். கிராமிய மக்களிடமிருந்து எதிர்ப்பினை குறைப்பதற்கு சமூக அமைப்புகள் நடவடிக்கைகள் எடுப்பது ஒரு முக்கிய முற்தேவையாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

# அரசியல் அந்தஸ்துக்கான அடிப்படையான நிலவுரிமை

## அறிமுகம்

நிலவுரிமையோடு மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டது அரசியல் உரிமையாகும். வீட்டுரிமை மற்றும் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும், நிலவுரிமை அரசியல் உரிமையையும் உறுதிப்படுத்துகின்றது. இன்றைய பாராளுமன்ற ஜனநாயக முறைமையில், வாக்குரிமையை தீர்மானிப்பதில் முக்கிய பங்கு மக்கள் நிரந்தரமாக வாழுகின்ற இடமாகும். மலையக தமிழர்கள் தொடர்ச்சியாக தோட்டப் புறங்களில் வசித்து வந்தமையினால் அந்தப் பிரதேசங்கள் குறிப்பாக நுவரெலியா, பதுளை, கண்டி, இரத்தினபுரி போன்றவை அவர்கள் அரசியல் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதாக காணப்படுகின்றது. தேசிய நீரோட்டத்தில், ஒன்றிணைய வேண்டும் என்ற இந்த இம்மக்களின் அபிலாஷை பூர்த்தியடைய வேண்மெனில் அரசியல் உரிமைகளை முழுமையாக அனுபவிப்பவர்களாக இருக்க வேண்டும். இதற்கு அடிப்படையானதாக அமைவது இவர்களுக்கான இலங்கை பிரஜை என்ற அந்தஸ்தாகும். 1948-2003 காலப்பகுதியில், இப்பிரஜா உரிமையின்றி நாடற்ற நிலையில் வாழ்ந்தமையே இவர்களது அனைத்து பின்னடைவுகளுக்கும் காரணமாகும். இக்காலப்பகுதியில் அரசியல் தலைமைகளின், பிரதான தேவையாக அமைந்திருந்தது இந்த பிரஜாவுரிமை பிரச்சினையை தீர்த்துக் கொள்வதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசியல் பிரதிநிதித்துவம்**


1948இல் இழக்கப்பட்ட பாராளுமன்ற பிரதிநிதித்துவம் 1977இல் ஒன்றாக ஆரம்பித்து பின்னர் படிப்படியாக 1990களில் 11ஆக அதிகரித்து தற்போது 9 ஆக காணப்படுகிறது. பாராளுமன்றத்தின் எண்ணிக்கை 225ஆக இருக்கையில் சனத்தொகையில் 4.5%மாக இவர்கள் காட்டப்பட்டாலும் உண்மையில் இவர்கள் 7.8%மாகவே கணிக்கிடப்பட வேண்டியவர்கள். இந்திய தமிழர்கள் என குடிசன மதிப்பீட்டில் அடையாளப்படுத்தப்பட்ட இவர்களில் ஏறக்குறைய



மனோ கணேசன்



ப.திகாம்பரம்



வி.இராதாகிருஸ்ணன்



ஜீவன் தொண்டமான்



A. அரவிந்தகுமார்



எம். வேலுகுமார்



எம். உதயகுமார்



சுரேஷ் வடிவேல்



வி. ராமேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2%மானவர்கள் இலங்கைத் தமிழர்களாக கணிப்பீடு செய்யப் பட்டுள்ளனர். ஆகவே பாராளுமன்றத்தில் உறுப்பினர் எண்ணிக்கை 225ஆக காணப்படுகையில் இவர்களுக்கு உச்சமாக 16 பேர் இருக்க வேண்டும் அப்போதுதான் பாராளுமன்றத்தில் இவர்களது பிரதி நிதித்துவம் முழுமையாக பிரதிபலிக்கப்படும். (தேவராஜ் மற்றும் லோரன்ஸ் - 2022)

### எல்லைகள் மீள் நிர்ணயம்

இதனை நோக்கியதாக தேர்தல் எல்லைகளை மீள் நிர்ணயம் செய்யும் போது இவர்களது பிரதான கட்சிகள் இது தொடர்பாக திருத்தங்களை முன்மொழிந்து வருகின்றன. இவர்களது பிரதிநிதித்துவத்தை பாதுகாத்துக் கொள்வதே இதன் முக்கிய நோக்கமாகும். 1977ஆம் ஆண்டிற்கு முன்னர், தேர்தல் முறைமை, தொகுதிவாரியாக அமைந்து அளிக்கப்பட்ட வாக்குகளில் எண்ணிக்கையில் முதலாம் இடம்பெறுபவர் தெரிவு செய்யப்படுவதாக அமைந்திருந்தது. 1978இற்கு பின்னைய காலங்களில் விகிதாசார பிரதிநிதித்துவ முறைமை (Proportional Reprsentation) அறிமுகப்படுத்தப்பட்டமையினால் ஒரு மாவட்டமே தொகுதியாக கணிக்கப்பட்டு, கட்சிகள் பெற்ற விருப்புவாக்கு அடிப்ப டையில் (Preference Votes) தெரிவுகள் இடம்பெற்றன. இது நுவரெலியா (5), பதுளை (2), கண்டி (1) கொழும்பு (1) போன்ற மாவட்டங்களில் மலையக பிரதிநிதிகள் பிரதிநிதிதுவம் கிடைக்க வழிசெய்தது எனலாம். தற்போது தொகுதி மற்றும் விகிதாசார முறைமையை இணைத்து ஒரு கலப்பு (Mixed) முறைமை முன்மொழியப்பட்டு அதுபற்றி எல்லைகள் மீள் நிர்ணய ஆணைக்குழு ஆலோசித்து வருகிறது.

### அதிகாரப் பரவலாக்கல்

இலங்கையின் இனப்பிரச்சினையோடு இணைந்த அடிப்படைப் பிரச்சி னைகளில் முக்கியமானதாக அதிகார பரவலாக்கல் (Devolution of Power) காணப்படுகிறது. 1987இல் இலங்கை அரசியல் யாப்பிற்கு கொண்டு வரப்பட்ட 13ஆவது திருத்தத்தின்படி, மத்தியில் காணப்பட்ட அரசியல் அதிகாரம் மாகாணங்களுக்கு குறிக்கப்பட்ட சில துறைகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிரப்பட்டது. 1976களில் தோற்றம் பெற்ற ஈழத் தமிழர்களின் உரிமைகளுக்கான போராட்டம், தனிநாட்டு கோரிக்கையாக பரிணமித்து, ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தது. வடகிழக்கில் உக்கிரமடைந்த நிலையில் இவ்யுத்த போராட்டத்திற்கு எதிர்வினையாக தெற்கில் 1977இலிருந்து தொடர்ச்சியாக இன வன்முறை வெடித்து, 1983இல் அது உச்சத்தை அடைந்தது. இதனுடைய ஒரு விளைவாக உருவானதே 13ஆவது திருத்தமும் மாகாண சபைகளின் தோற்றமுமாகும். இது, வடகிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல், ஏனைய 7 மாகாணங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. இது தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக கொண்டுவரப்பட்டாலும், முஸ்லீம்கள் மற்றும் மலையக மக்களின் பிரச்சினைகள் பற்றி இது கவனம் கொள்ளவில்லை என்ற ஆதங்கம் இந்த மக்கள் மத்தியிலேயே காணப்பட்டது. ஆகவே இவர்களின் அரசியல் தலைமைகள் அதிகார பரவலாக்கலில் தங்களுக்குரிய இடத்தைப் பெற்றுக் கொள்வதற்காக கோரிக்கைகளை முன்வைக்கத் தொடங்கினர்.

மலையக மக்களைப் பொறுத்தவரை இந்த விடயத்தில் முனைப்பாக இருந்தது மலையக மக்கள் முன்னணியாகும். இக்கட்சியானது கோரிக்கையாக மலையகத் தமிழர்கள் 80% அதிகமானோர் மத்திய, ஊவா மற்றும் சம்பரகமுவ மாகாணங்களில் வசிக்கின்றனர். இவர்கள் வாழும் பிரதேசம் செயற்கையான எல்லைகளால் பிரிக்கப்பட்டுள்ளதால், அரசியல் ரீதியாக இவர்கள் சிதறடிக்கப்பட்டுள்ளார்கள். இந்நிலையில் தற்போதைய மாகாண எல்லைகளை மறுபரிசீலனை செய்வதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளதாக கருதுகின்றோம். அதாவது மத்திய, ஊவா, சப்ரகமுவ ஆகிய மாகாணங்களில் தமிழர்கள் பெரும் பான்மையாக வாழும் பிரதேசங்களை உள்ளடக்கியதான ஒரு மாகாணம், அமைக்கப் பட வேண்டும் என்பதே மலையக மக்கள் முன்னணயின் கோரிக்கையாகும். (மலையக மக்கள் முன்னணியின்வெளியீடு 2) இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் வடகிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளுக்கு இம்முன்னணியால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கை இதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதான மலையக கட்சிகளின் கோரிக்கைகள்

1994ஆம் ஆண்டு சந்திரிக்கா பண்டாரநாயக்க ஜனாதிபதியானதன் பின்னர் யாப்பு சீர்த்திருத்தத்திற்கு அமைக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக் குழுவில் இ.தொ.காவும், ம.ம.மு.யும் பங்குபற்றின. 1989 முதல் விகிதாசார பிரதிநிதித்துவம் பின்பற்றப்பட்டாலும் பெரும் கட்சி களான ஐ.தே.கட்சி, மற்றும் மக்கள் ஐக்கிய முன்னணி (PUF) இந்த முறைமையில் திருப்தி காணாததால் அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாப னத்தில் கலப்பு தேர்தல் முறையை விதந்துரைத்தனர். (தேவராஜ், 2008) இந்த முறைமை இன்னும் ஒரு பேசுப் பொருளாக இருந்து வருகின்றதேயொழிய பின்னர் இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தல்களில் விகிதாசார முறையே பின்பற்றப்பட்டு வருகின்றது. பல தெரிவுகள் (Choices) எலை நிர்ணயக் குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இ.தொ.கா. தனது முன்வைப்பில் ஜேர்மனிய முறைமையை சார்ந்து 50% தொகுதியும், 50%விகிதாசார முறையும் பின்பற்றப்பட வேண்டும் என சிபாரிசு செய்தது. இதனை முஸ்லீம் காங்கிரசும் இதனை ஆதரித்தது (தேவராஜ், 2008) அதேவேளை, ம.ம.மு. வேறொரு பிரேரணையை முன்வைத்தது. இதன்படி தமிழர்கள் அதிகமாக உள்ள 10 தொகுதிகளை அடையாளம் கண்டு அவை தொகுதி முறையிலும் ஏனையவற்றில் பிரதிநிதிகள் விகிதாசார பிரதி நிதித்துவம் அடிப்படையில் தெரிவு செய்யப்பட வேண்டும். மொத்தமாக பிரதிநிதிகள் உள்ள சபையில் 16 பேர் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதே அவர்களின் உட்கிடக்கையாக இருந்தது.

## மலையக மக்கள் முன்னணியின் திருத்தப்பட்ட கோரிக்கை

இங்கு ம.ம.முன்னணியின் அதிகார பரவலாக்கல் குறித்த முன்வைப்பு முக்கியமானவொன்றாகும். 13ஆம் திருத்தத்தின்படி உருவாக்கப்பட்ட மாகாண சபைகள் மலையக மக்களின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்யவில்லை என்ற நிலைப்பாட்டில் அக்கட்சியின் முன்வைப்பு காணப்பட்டது. இக்கட்சியின் மூத்த உறுப்பினரான அ.லோரன்ஸ் இந்த கோரிக்கையின் இன்னொரு வடிவத்தை தான் இறப்பதற்கு முன்னர் வெளியிட்ட 'மலையகத் தமிழ் மக்களும் நிலத்தொடர்பற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசம் சாராத அதிகாரப்பகிர்வு' என்ற தனது நூலில் மிகவும் விரிவாக எடுத்துரைத்துள்ளார் (லோரன்ஸ், 2023). அதிகாரப் பரவலாக்கலில் பல வடிவிலான கூட்டாட்சி முறைகள் காணப்படுகின்றன. ஒற்றையாட்சி முறை நிலவுகின்ற நாடுகளில் பல இனங்கள் வாழுகின்ற போது, சிறுபான்மை இனங்களுக்கு அரசியல் அந்தஸ்த்தை வழங்கி அதிகாரத்தில் பங்கு பெறுவதற்கு உருவான முறைமையே கூட்டாட்சி முறைமையாகும். இது நாட்டிற்கு நாடு வேறுபடும். அமெரிக்கா ஒரு சிறந்த உதாரணமாக கொள்ளப்படுகின்றது. இதே வேளை கனடா, அவுஸ்திரேலியா, சுவிட்ஸர்லாந்து மற்றும் இந்தியா போன்ற நாடுகளும் சுட்டிக்காட்டப்படுகின்றன. பாரம்பரிய கூட்டாட்சிகள் பிரதேசம் சார்ந் தவையாகவும் பிரதேசம் சாராதவை என்றும், பிரித்து இனங்காணுகின்ற நிலத்தொடர்பற்ற கூட்டாட்சி பொறிமுறையை பிரதேசம் சாராத கூட்டாட்சி என அடையாளப்படுத்தப்படுகின்றது. இலங்கையில் 13ஆம் அரசியல் திருத்தத்தின்படி கூட்டாட்சி முறைக்கு ஒத்ததான அதிகாரப் பரவலாக்கல், பிரதேசம் சார்ந்த ஒன்றாகும். பிரதேசம் சாராத முறைக்கு இந்தியாவில் காணப்படும் பாண்டிச்சேரி மாநிலத்தை உதாரணமாக லோரன்ஸ் காட்டுகிறார். இந்தியாவில் 28 மாநிலங்கள், 06 யுனியன் பிரதேசங்கள், ஒரு தேசிய தலைநகரப்பகுதி (டில்லி) காணப்படுகின்றன. இந்திய கூட்டாட்சி முறைமையிலிருந்து, இவர் இலங்கைக்கு பொருத்தமான இரண்டு அம்சங்களை எடுத்துக் காட்டு கிறார். சமச்சீரற்ற அதிகாரப்பகிர்வு மற்றது நிலத்தொடர்பற்ற அல்லது பிரதேசம் சாராத பிரிவு என்பவை அவையாகும். 50 ஆயிரம் கொண்ட இலட்சத்தீவுகள், ஒரு மாநிலமாகவும் அதேநேரத்தில் 14 கோடி கொண்ட உத்தர பிரதேசமும் ஒரு மாநிலமாகவும் கொள்ளப் படுகின்ற நிலத்தொடர்பற்ற சுயாட்சி முறைக்கு பாண்டிச்சேரி முறை உதாரணமாக காட்டப்பட்டுள்ளது. இலங்கையில் மலையகத் தமிழர்களும் முஸ்லீம் மக்களும், தங்களது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இத்தகைய முறைமை தேவையென கோருகின்றனர். (லோரன்ஸ்) பாண்டிச்சேரி முறைமை பற்றி இந்த நூல் மிக விரிவாக பேசுகின்றது. 1962ஆம் ஆண்டிற்கு முன்னர் இது பிரான்சிய காலனியாக இருந்தது. பாண்டிச்சேரி யூனியன் பிரதேசம் பாண்டிச்சேரி, காரைக்கால் மாஹி, ஏனாம் ஆகிய நான்கு பகுதிகளை கொண்டது. காரைக்கால், பாண்டிச்சேரியிலிருந்து 136

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிலோ மீற்றர் தொலைவில் தமிழ்நாட்டின் தொடர்ச்சியாக அமைந் துள்ளது, ஆனால் ஏனாம் பாண்டிச்சேரியிலிருந்து 864 கீலோ மீற்றர் தொலைவில் ஆந்திராவிலும் மாஹி பாண்டிச்சேரியி லிருந்து 800 கிலோ மீற்றர் தொலைவில் கேரளாவிலும் அமைந்துள்ளன. பல நூற்றுக் கணக்கான கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பிரதேசங்களை இணைத்தே இந்த யூனியன் பிரதேசம் அமைக்கப்பட்டுள்ளது.

பல்லின மக்கள் அல்லது தேசிய இனங்கள் வாழுகிற நாட்டில், அரசியல் பிரச்சினைகளை தீர்ப்பதற்குரிய ஒரு முறையாக காணப்படும் கூட்டாட்சி முறைமை இலங்கையில் அதிகாரப்பரவலாக்கல் முயற்சி யாக 1987இல் அறிமுகப்படுத்தப்பட்டாலும் இன்னும் அது பிரதான தேசிய இனமான இலங்கைத் தமிழர் அனைவரையும் திருப்திப் படுத்து வதாக இல்லை. 13க்கு மேல் அல்லது 13ஐ முழுமையாக நடைமுறைப் படுத்துவோம் என்ற உறுதிமொழிகள், பல்வேறு பேச்சுவார்த்தைகளில் இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்களில் அவ்வப்போது வழங்கப் பட்டு வருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அரசியல் யாப்பு சீர்த்திருத்தம் மற்றும் எல்லை மீள் நிர்ணய முயற்சிகள், தொடர்ந்து இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது. மலையக அரசியல் தலை மைகள், இந்த இரண்டு அம்சங்களிலும் கவனம் செலுத்தி வருகின்றன.

**உப மட்டங்களில் பிரதிநிதித்துவம்**

பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை போல, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதிநிதித்துவமும் முக்கியமானவை யாகும். மாகாணங்களை பொறுத்தவரை மத்திய, ஊவா மற்றும் சப்பிர கமுவ மாகாண சபைகள் 2022இல் கலைக்கப்படும்போது, மத்திய மாகாணத்தில் மொத்தம் 56 உறுப்பினர்களில் 14 பேர் மலையகத் தமிழர்களாக இருந்தனர். நுவரெலியா மாவட்டத்தில் 11 பேரும், கண்டியில் இருவரும், மாத்தளையில் ஒருவராக அவர்கள் திகழ்ந்தனர். அதேநேரத்தில் முன்னைய சபைகளில், மாகாண சபை அமைச்சராக ஒருவர் தொடர்ந்திருந்ததை அவதானிக்க முடிகிறது. T.இராமநாதன் S.சதாசிவம் (93), P. இராதாகிருஷ்ணன் (99), V. புத்திரசிகாமணி (93), ராமேஸ்வரன் கதிரேசன் போன்றோர் மாகாண அமைச்சர்களாக செயல்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதுளை 2014-2019 வரை 5 பேர் மாகாண சபையில் பிரதி நிதித்துவம் பெற்றிருந்தனர். இ.தொ.கா.சார்பில் மூவரும் ஐ.தே.க சார்பில் இருவரும் பிரதேச சபைகள் மொத்தமாக 44 பேரும் இதில் பெண்கள் 14 பேரும் 8 பிரதேச சபைகளில் அங்கம் வகித்தனர். இவை பதுளை (9), ஹாலிஎல (6), ஹப்புத்தளை (8), ஹல்துமுல்லை (7), லுணுகல (8), பசறை (6), ஊவா பரணகம (5), எல்ல (1) ஹப்புத்தளை மற்றும் ஹல்துமுல்லை பிரேதேச சபைகளில் தமிழர்கள் தலைமைப் பொறுப்புற்றிருந்தமை குறிப்பிடத்தக்கன.

அதேபோல பதுளையிலும் 5 பேர் மாகாண சபையில் அங்கம் பெற கல்வி கலாச்சார அமைச்சராக, மு.சச்சிதாநந்தன் வேலாயுதம், சுரேஷ் வடிவேல், செந்தில் தொண்டமான் போன்றோர் அமைச்சராக செயல் பட்டுள்ளனர். இரத்தினபுரியில் அதிகபட்சம் இருவரே தெரிவு செய்யப் பட்டுள்ளனர். ஆனால் தற்போது உள்ளூராட்சி சபைகளில் நுவரெலியா மட்டத்தின், 10 பிரதேச சபைகளில் 5 பிரதேச சபைகளில் மலையக தமிழ் பிரதிநிதிகள் தலைவர்களாக செயற்படுகின்றனர். அக்கரபத்தனை, கொட்டகலை, நோர்வூட், மஸ்கெலியா, கண்டி, மாத்தளை ஆகிய பிரதேச சபைகள் மட்டத்தில் பிரதி நிதித்துவம் அதிகரித்துள்ளமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இதேவகையில், நுவரெலியா மாநகர சபையில், பிரதி மேயர் களாகவும் ஹட்டன் நகரசபையில் தலைவர்களாகவும் தலவாக்கலை நகரசபையில் மலையகத்தவர்கள் உபதலைவர்களாகவும் தமிழர்கள் தெரிவாகி செயல்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்ற பிரதிநிதித்துவம், 9ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மொத்தத்தில் மாகாண மற்றும் பிரதேச சபை மட்டத்தில் மலையக தமிழர்களின் பிரதிநிதித்துவம் அதிகரித்து செல்லும் போக்கு காணப்படுகின்றது. அரசியல் நீரோட்டத்தில் இம்மக்கள் கலந்து கொள்கின்றமை வலுவடைந்து வருகின்றது என்பதை இவை காட்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசியல் அடையாளம்**

இங்கு பாராளுமன்ற தெரிவுக்குழுவை தொடர்ந்த அனைத்து கட்சி களின் சீர்த்திருத்தக் குழு (All Party Reform Committee - APRC) வின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண அவர்களின் பரிந்துரை இந்திய வம்சாவளி மக்ககளின் அடையாளத்தை பொறுத்தவரை முக்கியமான ஒன்றாகும். "இலங்கையின் யாப்பில் இலங்கை மக்கள், சிங்களவர் இலங்கை தமிழர், மூவர், இந்திய தமிழர்கள் மற்றும் ஏனை யவர்கள் என உள்ளடக்கிய மக்களை குறிப்பாக குறித்து நிற்பதாக அமைய வேண்டும். உள்ளடக்கிய ஒவ்வொரு பிரிவு மக்களும் தங்களது சொந்த மொழியை அபிவிருத்தி செய்வதற்கும் கலாசாரத்தை மேம்படுத்தவும், அரசாங்கத்தின் ஒவ்வொரு பிரிவிலும் உரிய பிரதிநிதித்துவம் பெற்ற அரச அதிகாரத்தில் உரிய பங்கினை பெறுவதை பொதுவாக இலங்கை அடையாளம் என்பதை பலவீனப்படுத்தாத முறையில் அங்கீகரிக்கப்படல் வேண்டும்." என்பது அவரின் பரிந்துரை யாகும் (தேவராஜ், 2008). இந்திய தமிழர்கள் தனி மக்கள் பிரிவினராக அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மலையக தமிழர் மக்கள் ஒரு தனித்த சிறுபான்மை இனமாக அரசியல் அரங்கில் அடையாளப்படுத்தப்பட்டாலும் அவர்களை எவ்வாறு உத்தியோகரீதியில் குடிசன மதிப்பீடு போன்றவற்றில் அடையாளப்படுத்துவது என்பது குறித்து இன்னும் ஒருமித்த கருத்து உருவாகவில்லை. ஆரம்பகாலத்தில், 'கூலிகளாக', 'தோட்ட காட்டான் களாக' 'கள்ளத்தோனிகளாக' அழைக்கப்பட்ட இந்தியவம்சாவளியினர், தற்போது 'மலையகத் தமிழர்கள்' என்ற சொற்றொடரால் அழைக்கப்பட வேண்டும் என்ற அவா இன்று வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனை வரைவிலக்கணப்படுத்துவதில் பல கருத்துகள் வெளிப் படுத்தப்பட்டு வருகின்றன. 'மலையகம்' என்பது உயர் நிலங்களில் தோட்டங்கள் அமைந்துள்ள பிரதேசத்தை குறிக்கும், இதுவொரு புவியியல் கருத்தாகும். 'மலையக மக்கள்' என்னும் போது இங்கு வாழும் வேறு இனங்களாகிய முஸ்லீம்கள் சிங்களவர்களையும் குறிக்கும். எனவே, இது தோட்டங்களை வாழ்விடமாக கொண்ட தென்னிந்திய தோட்டத் தொழிலாளர்களை மாத்திரம் குறிக்காது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இராமையா, 2021) மலையக தமிழர் என்பதே பொருத்தமானது. தாயகமாக கொண்ட இலங்கைத் தமிழரோடு, மொழி, மதம் போன்ற வற்றில் ஒற்றுமை கொண்டிருந்தாலும் வரலாறு, பிரதேசம், பொருளா தாரம் போன்ற அம்சங்ககளில் வேறுபாடு கொண்டவர்களாக மலையகத் தமிழர்கள் திகழ்கின்றனர். மலையகத்திற்கு வெளியே வாழுகின்ற இந்திய வம்சாவளியினர் இந்த அடையாளத்தில் அடங்குவார்களா? என்ற கேள்வி இங்கு எழுப்பப்படுகின்றது. இன்று தோட்ட மக்கள் காலி, மாத்தறை, களுத்துறை போன்ற பகுதிகளிலும் வாழுகின்றனர். புவியியல் அர்த்தத்தில் இவர்களை மலையகத் தமிழர்கள் என்று அழைப்பதில் சிக்கல்கள் காணப்படுகின்றன. மலையகம் என்ற பதம் 1960களில் உருவானபோது அந்த சொல்லுக்கு உரமூட்டிய இர.சி வலிங்கம் போன்றவர்கள் இதனை ஒரு சமூக உணர்வாகவே அர்த்தப் படுத்தினர். மலையக சமூக உருவாக்கம் பற்றி எழுதிய எல். சாந்தி குமாரும் இக்கருத்திற்கு உடப்பட்டவராக காணப்படுகிறார். சமூக உருவாக்கம் ஒரு புறமும் இனக் காலனித்துவத்தின் செயற்பாடு மறு புறமாகவும் தாம் ஒரு தனித்துவமான இனம் என்ற உணர்வை பலப்படுத்தி வந்திருக்கின்றன. இந்த சமூக உணர்வின் பிரக்ஞையின் பிரதிபலிப்பாகவே, 'மலையகம்' என்ற பதம் அண்மைக் காலத்தில் ஆதிக்கம் பெற்ற வருகின்றது. மலையகம் என்பதில் தொனிக்கின்ற புவியியில் அர்த்தத்தை மாத்திரம் நோக்கும்போது, அது பிராந்திய வாதமாகப் படலாம். ஆனால், மலையகம் என்பது ஒரு குறிப்பிட்ட புவியியல் எல்லையை அன்றி குறிப்பிட்ட உற்பத்தி முறையை (பெருந்தோட்டத்துறையை) சார்ந்து வாழுகின்ற ஒரு சமூகத்தின் இருத்தலையும் ஒரு தேசிய சிறுபான்மை இனத்தின் எழுச்சியை குறிக்கின்றது (சாந்திகுமார், 1980).

### தற்போதைய கோரிக்கை

மலையகத் தமிழருக்கான பிரதேசம் சாராத சமூக சபை ஒன்று, தமிழ் முற்போக்கு முன்னணியால் முன்வைக்கப்பட்டுள்ளது. 2015இல் தமிழ் முற்போக்கு முன்னணி என்ற பெயரில் (த.மு.மு.) மூன்று கட்சிகளை ஜனநாயக முன்னணி (மனோ கணேசன்) தேசிய தொழிலாளர் முன்னணி (ப.திகாம்பரம்), மலையக மக்கள் முன்னணி (ஆர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராதகிருஷ்ணன்) ஆகிய கட்சிகளை உள்ளடக்கிய ஒரு முன்னணி, 6 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டு இயங்கு கின்றது. (நுவரெலியா 3, பதுளை 1, கண்டி 1, கொழும்பு 1,) தற்போது பதுளை உறுப்பினர், இம் முன்னணியை விட்டு விலகி செயற்படுகின்றார். இ.தொ.கா.பலம் வாய்ந்த ஒன்றாக திகழ்ந்து। 2015இற்கு பின்னர் 2 பாராளுமன்ற பிரதிநிதிகளை மாத்திரம் கொண்ட ஒரு கட்சியாக விளங்குகின்றது. எனவே தற்போதைய பிரதான கட்சியாக விளங்கும் த.மு.மு, ஜனாதிபதி தேசிய இனப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தமிழ்க் கட்சிகளை அழைத்து பேச முயன்றபோது வடகிழக்கு கட்சிகளோடு இணைந்து பேச்சுவார்த்தையில் இடம் பெறாமல், மலையக மக்களக்கென தனித்த ஒரு பிரதேசம் சாராத சமூக சபை என்ற ஒரு கோரிக்கையை முன்வைத்துள்ளது.

இந்த முன்வைப்பானது மலையக தமிழ் பாராளுமன்ற பிரதிநிதிகள் மாகாண சபை உறுப்பினர்கள் பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோரை உத்தியோகபூர்வமான அங்கத்தினராகக் கொண்டதாக இருக்கும். இதற்கு மூத்த அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் செயலாளராக செயற்படுவார். இதனுடைய செயலகம் கொழும்பில் அமையும். பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் மசோதாக்கள் இச்சபைக்கு அனுப்பப்பட வேண்டும். இவற்றில் இந்த மக்களை பாதிக்கின்ற அம்சங்களை ஆராய்ந்து உரிய நிறுவனங்களுக்கு இச்சபை அறிக்கை சமர்ப்பிக்கும். இந்த சபையை ஜனாதிபதி செயலகம் பாராளுமன்றம், மத்திய மற்றும் மாகாண அமைச்சுகள் அங்கீகரிக்க வேண்டும். இது அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்ட ஒன்றாக இருக்கும். இதனுடைய தலைவர், உபதலைவர் ஆகியோர் தெரிவு செய்யப்படுவர். இதற்கு ஒரு ஆலோசனை சபையும் அமைக்கப்படும் தேவையாயின், வெளிநாட்டு உதவியினை வெளிநாட்டு வள திணைக்களத்தின் ஊடாக பெற்றுக் கொள்ளும் இதனுடைய கணக்குகள், கணக்காய்வாளர் நாயகத்தின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டதாக இருக்கும். இது ஓர் ஆலோசனை மட்டத்திலேயே இருக்கின்றது. அரசியல் யாப்பு திருத்தத்தின் போது இது உரிய குழுவிற்கு முன்வைக்கப்படும் என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்க்கலாம். எனவே இது குறித்த பரந்த கலந்துரையாடல்கள் அவசியம்.

**முடிவுரை**

அரசியல் அதிகாரத்தில் அதாவது வேறு வார்த்தைகளில், இதனை கூறுவதாயின் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் இந்த மக்களின் பிரதிநிதித்துவம் முழுமையாக அமைய வேண்டும். பாராளுமன்றம், மாகாண சபை, உள்ளூராட்சி சபைகள் என்பவற்றில் இந்த பிரதி நிதித்துவம் காணப்பட்டாலும் இது முழுமை யாக அமையவில்லை. நுவரெலியா மாவட்டத்தை பொறுத்தவரை உள்ளூராட்சி சபைகளின் எண்ணிக்கை கூடியிருந்தாலும், கண்டி (பன்வில), பதுளை (லுணுகலை) போன்ற சில பிரதேசங்களில் அதிகரிக்கக்கூடிய தேவை உணரப்பட் டுள்ளது. ம.ம.முன்னணியின் நிலம்சாராத அதிகாரப் பரவலாக்கல் முன்வைப்பும் அது உள்ளடங்கிய, த.மு.முன்னணியின் தற்போதைய நிலம் சாராத சமூக சபையின் முன்வைப்பும், பரஸ்பரம் முரண்நிலையான வையாகும். எதிர்காலத்தில் இது குறித்து, கலந்துரையாடப்பட்டு ஒருமித்த கருத்து உருவாகினால் இது யாப்பு சீர்த்திருத்த குழுவில் அது வலுவுள்ளதாக அமையலாம். அத்தோடு, அரசியல் அடையாளமாக தேசிய இனமாக ஏற்று செயற்பட்டு, மலையகத் தமிழர்கள் என்ற பதம் வழக்கில் (Defacto) பல மட்டங்களில், அரசதலைவர்கள் கட்சிகள் செயற்பாட்டார்கள் என பலராலும் பாவிக்கப்படுகின்ற வேளையில், உத்தியோகபூர்வமாக இது ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இம்மக்கள் மத்தியில் இது குறித்து ஒத்த கருத்து உருவாகவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8

# நிலவுரிமையை நிலைநிறுத்திக் கொள்ளல்

## மீட்டெடுத்தலும் உரிமைகளை வென்றெடுத்தல்

'மலையகம் 200' என்ற மகுடத்தில் 2023ஆம் ஆண்டு ஆரம்பம் தொடக்கம் பல நாட்டின் பல மட்டங்களில் தோட்டங்களில் தொழில் புரிவதற்கான தென்னிந்தியாவிலிருந்து வந்த தமிழர்களின வருகையை நினைவுபடுத்தல் நிகழ்வுகள் இடம்பெற்று வந்தன. நுவரெலியாவில் (19-21,05.2023) மூன்று நாட்கள் கூட்டமும், கண்காட்சியும், கருத்தரங்குகளும், இசை நிகழ்வுகளும், ஹட்டனில் 21.06.2023இல் காணி தினமும், மன்னார் முதல் மாத்தளை வரை மகத்தான நடைப் பயணம் ஆகஸ்ட் மாதமும் பின்னர் 31.06.2023இல் பெருங்கூட்டமும் சஞ்சிகை வெளியீடும், நாவலப்பிட்டியில் நினைவு மலர் வெளியீடும், மாத்தறை தெனியாயாவில் நடைப்பயணமும் கூட்டம் என இந்த நினைவுகளை அர்த்தமுள்ளதாக்கியது. அத்தோடு நுவரெலியாவில் நூல் வெளியீடும் இலங்கைகையை கடந்த தமிழ்நாட்டு கோயம்புத்தூரில் செப்டெம்பர் பன்னாட்டு கருத்தரங்கும், சஞ்சிகை வெளியீடும், கனடாவில் 'தாய்வீட்டின் மலையக மாருதம்' சஞ்சிகை வெளியீடும் இந்த நிகழ்வை நினைவூட்டின. நவம்பர் 18ஆம் திகதி லண்டனில் ஓவியக் கண்காசியும் டிசம்பரில் சென்னையில் ஓவியக் கண்காட்சியும் கருத்தரங்கும் இடம்பெற்றன. இந்த நிகழ்வுகள் அனைத்திலும் இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் வரலாறு பேசப்பட்டது. அவர்களது தற்போதைய நிலை பரிசீலிக்கப்பட்டது. இந்த நாட்டிலே அவர்கள் தேசிய நீரோட்டத்திலே ஒன்று கலக்காமல் இன்னும் ஓரங்கட்டப்பட்டவர்களாக இருந்து வருவது தெளிவானது. மலையக சமூக மட்டத்தில் மேற்பட்ட இந்நிகழ்வு களின் ஓர் உச்சமாக ஆகஸ்ட் 10ஆம் திகதி, இலங்கைப் பாராளு மன்றத்தில் இந்த மக்களின் நிலை குறித்து ஒருநாள் விவாதம் இடம் பெற்றது. அதைத் தொடர்ந்து 02.11.2023ஆம் திகதி 'நாம் 200' என்ற பெயரில் தேசிய நிகழ்வு இலங்கையின் அரசியல் உயர் மட்ட பங்கு பற்றுதலோடும் இந்தியாவின் உயர் அரசியல் மட்ட பங்குபற்றுதலோடும் இடம்பெற்றது. தேசிய நிகழ்வாக ஆரம்பிக்கப்பட்டு, அது ஒரு கட்சியின் செயற்பாடாக மாறி தேசிய நிகழ்வின் முக்கியத்துவத்தை ஓரளவிற்கு குறைந்தாலும், இதன் முக்கியத்துவம் ஊடகங்களில் ஒரு பேசுபொருளாக மாறியது. இச்சூழ்நிலையில் முக்கியமாக இம்மக்களின் பிரச்சினை குறித்து ஆராய்வதற்காக பிரதமர் தலைமையில் அமைச்சர் மட்ட குழுவொன்று ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்டமையும், 10 பேர்ச் காணி வழங்கப்படும் என்ற அறிவித்தலும் இவற்றில் முக்கிய மானவைகளாகும். அத்தோடு 2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட உரையில் (13.11.2023) வீடமைப்பு திட்டத்திற்காக 4 பில்லியன் ஒதுக்கப்படும் மற்றும் காணி வழங்கப்படும் என்ற அறிவிப்புகள் அவதானத்திற்குரியவைகளாகும்.

உயர் நீதிமன்றம் 2023ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் திகதி தபால் சேவை குறித்து வழங்கிய தீர்ப்பு தோட்டத் தொழிலாளரின் வீட்டுரிமை யோடு தொடர்புடையதாய் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவொன்றாக திகழ்கின்றது. தோட்டத் தொழிலாளர்களுக்கு தனித்த முகவரி இல்லாது, தோட்ட உரிமை முறைமையின் காரணமாக, தோட்ட நிர்வாகத்திற்கே கடிதங்கள் அனுப்பப்பட்டு பின்னரே முகவரி இடம்பெற்றவர்களுக்கு வழங்கப்படும் நடைமுறைமையே தொடர்ந்து இருந்துவந்தது. இதனை சரி செய்யும்முகமாக 2006ஆம் ஆண்டு தோட்டங்களுக்கென தனியான தபால் பியோன்கள் 300 பேர் நியமிக்கப்பட்டனர். ஆனால் இது எல்லா பிரதேசங்களையும் முழுமையாக உள்ளடக்கவில்லை. இதன் காரணமாக குருநாகலை மூவாங்கந்தை தோட்டத்தை சேர்ந்த ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞன், உயர்நீதிமன்றத்தில் செய்த முறைப்பாடு காரணமாகவே, இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன்படி தோட்டத்தில் வாழ்பவரின் முகவரி சட்டரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, வீட்டுரிமையையும் சட்டரீதியாக்கியுள்ளதெனலம். இந்தத் தீர்ப்பின் அடிப்படையில் தபால் அமைச்சு இதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நிகழ்வுகளின் பின்னால் நிகழ் நிலையில், பல்வேறு வாட்ஸ் அப் (Whatsapp) குழுக்கள் சூம் (Zoom) ஊடாக உரையாடல்கள் தொடர்ச்சியாக இந்நிகழ்வு குறித்து இடம்பெற்று வந்தன. வேரை மீட்டெடுத்தல் முயற்சியின் நிறைவேறா உரிமைப்பட்டியலில் நில/ காணி உரிமையானது முன்னுரிமை பெற்ற ஒன்றாக மேலெழும்பியது

**நில காணியுரிமையின் முக்கியத்துவம்**

நில மற்றும் காணி உரிமைகளின் முக்கியத்துவம் குறித்து பல்வேறு அம்சங்கள் இந்நூலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. தற்போது 2023 வருட முடிவில் அரசாங்கத்தின் சில உறுதிமொழிகள், ஓரளவிற்கு நம்பிக்கையூட்டும் ஒளிக்கீற்றுகளை காட்டுகிறது. இது எந்தளவிற்கு நிதர்சனமாகும் என்பதே அனைவரின் மனதிலே எழும்புகின்ற வினாக்களாகும்.

முதலாவது மக்களின் பிரச்சினைகளை ஆராய பிரதமர் தலை மையில் அமைக்கப்பட்ட மூன்று அமைச்சர்களை (தோட்ட உட்கட்ட மைப்பு, தோட்டத் தொழில் அமைச்சு) தொழில் அமைச்சு உள்ளடக்கிய குழு மற்றது அவர்களால் நிலவுரிமைக்காக தயாரிக்கப்படவுள்ள அமைச்சரவை பத்திரம் என்பவற்றின் ஊடாக தோட்ட தொழிலாளர்கள் அனைவருக்கும் 10 பேர்ச் காணி வழங்க மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் இங்கு குறிப்பிடத்தக்கது.

